# பொருளடக்கம்


அரபுத் தமிழ் 'ஹத்யா மாலை'
அல்லாஹுவைப் புகழ்ந்து அவனது
திருத்தூதரை வாழ்த்துதல் ........ 19
அல்லாஹுவின் இயல்பு ........ 20
அல்லாஹ், ரஹ்மான் ரஹீம் ........ 21
இணைவைத்தல் பெரும் குற்றம் ........ 25
நான்குவகைப் புகழ் ........ 33
ஸலவாத்தின் மகிமை ........ 33
அல்லாஹ் கூறும் ஸலவாத்து ........ 36
அமரர்கள் கூறும் ஸலவாத்து ........ 36
நாம் கூறும் ஸலவாத்து ........ 37
முஹம்மது, அஹ்மது (ஸல்) என்ற திருநாம மகிமை ..... 44
ஸலவாத்து ஓதுவதன் வரிசை ........ 46
ஸலாத்தே இப்றாஹீமிய்யா ........ 50
ஸலாத்துல் ஆயிஷா ........ 52
ஸலாத்துஷ் ஷிபாஇய்யா ........ 52
மகிமைமிக்க ஸலாத்துந் நாரிய்யாவும் அதன் பலனும் ... 54
இருவகை மரணம் ........ 56
ஹஜ்ரத் லுக்மானின் பொன்மொழி ........ 58
மரணத்தின் பண்பு ........ 61
இப்றாஹீம் நபி ( அலை) கண்ட காட்சி ........ 62
நூறு வருடங்கள் உறங்கிய உஸைறுநபி (அலை) ........ 64
எமனை வெல்ல முயன்றோர் ........ 67
வரும்விதி வந்தே தீரும் ........ 67
ஒரு தனவந்தரின் கதி ........ 68
விதியும் மதியும் ........ 71
எங்கு ஒளிந்தாலும் மரணம் விடாது ........ 73
நித்திரை மரணத்தின் சோதரன் ........ 75
மரணத்தின் அவலநிலை ........ 77
ஹத்யா விளக்கம் ........ 80
10 அவகாசிகளுக்கு 40 ஹத்யாக்கள் ........ 82
ஹத்யாக்களுக்குரிய பதின்மர் ........ 83





1-வது தகுதியாளர் எமதூதர்
அமரர்களின் பண்பு ........ 84
எமதூதரின் விளக்கம் ........ 85

எமதூதருக்குரிய ஹத்யாக்கள் நான்கு
1-வது ஹத்யா:- வழக்காளியைச் சமாதானப்படுத்துதல். 87
2-வது ஹத்யா மரணத்திற்கு ஆயத்தமாகுதல் ........ 89
3-வது ஹத்யா விட்டுப்போன
வணக்கங்களைச் செய்தல் ........ 90
4-வது ஹத்யா மரணத்தை விரும்புதல் ........ 94

2-வது தகுதியாளர், கப்று
கப்ரின் விளக்கம் ........ 95

கப்றுக்குரிய ஹத்யாக்கள் நான்கு
1-வது ஹத்யா: சிறுநீர் , மலம் முதலியவை
நன்கு சுத்தப்படுத்துதல் ........ 101
2-வது ஹத்யா: குறைந்த நித்திரை கொள்ளுதல் ........ 108
3-வது ஹத்யா: குர்ஆன் ஷரீபை பேணுதலாய் ஓதுதல் . 110
4-வது ஹத்யா: இரவில் இறைவனை
உள்ளச்சமாய் வணங்குதல் ........ 120

3-வது தகுதியாளர், முன்கர் வனகீர் (அலை)
முன்கர் வனகீரின் விளக்கம் ........ 122

முன்கர் வனகீருக்குரிய ஹத்யாக்கள் நான்கு
1-வது ஹத்யா:- உண்மைப் பேசுதல் ........ 123
2-வது ஹத்யா:- புறம்கூறாமை ........ 131
3-வது ஹத்யா:- சத்தியம் தவறாமை ........ 137
4-வது ஹத்யா:- தாழ்மையாய் நடத்தல் ........ 140

4-வது தகுதியாளர், மாலிக் (அலை)
நரகமும் அதன் அதிபர் மாலிக்கும் ........ 144

மாலிக் (அலை) அவர்களுக்கு ஹத்யாக்கள் நான்கு
1-வது ஹத்யா:- அல்லாஹுவைப் பயந்து அழுதல் ...... 148
2-வது ஹத்யா:- பெற்றோரைப் பேணுதல் ........ 153
3-வது ஹத்யா:- சிறிய பெரிய பாவங்களை விடுதல் .... 179
4-வது ஹத்யா:- இரகசியக் கொடை கொடுத்தல் ........ 201

**5-வது தகுதியாளர், ரிள்வான் (அலை)**
சுவனபதியும் அதன் அதிபர் ரிள்வானும் ........................ 217

**ரிள்வாக்குரிய ஹத்யாக்கள் நான்கு**
1-வது ஹத்யா:- அமானிதத்தைப் பேணிச்செலுத்தல் .... 221
2-வது ஹத்யா:- பொறுமையைக் கடைப்பிடித்தல் ........ 223
3-வது ஹத்யா:- இணையில்லா
இறைவனுக்கு வழிப்படுதல் ........................................ 227
4-வது ஹத்யா:- நபிக்கு வழிப்பட்டு
தீனுக்குச் செலவு செய்தல் ........................................ 241

**6-வது தகுதியாளர், ஸிராத் (பாலம்)**
ஸிராத் பாலத்தின் விளக்கம் ........................................ 244

**ஸிராத் பாலத்திற்குரிய ஹத்யாக்கள் நான்கு**
1-வது ஹத்யா:- முஃமின்களுக்கு உதவி புரிதல் ........... 245
2-வது ஹத்யா:- கோபத்தை அடக்குதல் ........................ 249
3-வது ஹத்யா:- ஜும்ஆத் தொழுகைக்கேகுதல் ............ 251
4-வது ஹத்யா:- ஐங்காலத் தொழுகையைப் பேணுதல் . 262

**7-வது தகுதியாளர், மீஸான் (தராசு)**
தராசின் விளக்கம் ........................................................ 274

**தராசுக்குரிய ஹத்யாக்கள் நான்கு**
1-வது ஹத்யா:- இக்லாஸ் (களங்கமின்மை) ................ 277
2-வது ஹத்யா:- அல்லாஹுவை
அதிகமாக திக்ருசெய்தல் ............................................ 281
3-வது ஹத்யா:- நல்லார் பொல்லாரோடும்
நற்குணமாய் நடத்தல் .................................................. 286
4-வது ஹத்யா:- பிறரைத் துன்புறுத்தாமை ..................... 291

**8-வது தகுதியாளர், நபிகள் நாயகம் (ஸல்)**
நபி பெருமானின் மகாத்மியம் ........................................ 296
நபிகள் நாதருக்குரிய ஹதியாக்கள் நான்கு ..................... 301
1-வது ஹத்யா:- நபிகள் நாதரை சதா காதலித்தல் ......... 301
2-வது ஹத்யா:- நபி பெருமானின்
சுற்றத்தாரை நேசித்தல் .............................................. 314
3-வது ஹத்யா:- தீனை (மார்க்கத்தை)ப் பின்பற்றுதல் ... 322
4-வது ஹத்யா:- ஸஹாபாக்களை இகழாதிருத்தல் ......... 335

**9-வது தகுதியாளர், றூஹு (ஆன்மா)**
ஆன்மாவைப்பற்றிய விளக்கம் ........................................ 357

**ஆன்மாவுக்குரிய ஹத்யாக்கள் நான்கு**
1-வது ஹத்யா:- அறிதுயில்
(நினைவோடு நித்திரை செய்தல்) ................................ 365
2-வது ஹத்யா:- இறுதிவரை இறைவனை தியானித்தல் 366
3-வது ஹத்யா:- பேச்சைக் குறைத்து நாவைப்பேணல் .. 368
4-வது ஹத்யா:- ஊண் குடிப்பைக் குறைத்தல் ............ 373

**10-வது தகுதியாளர், அல்லாஹு (ஜல்)**
அல்லாஹுவின் தனிச்சிறப்பு ........................................ 377

**அல்லாஹ்வுக்குரிய ஹத்யாக்கள் நான்கு**
1-வது ஹத்யா:- பிறரை நலவைக் கொண்டேவுதல் ..... 380
2-வது ஹத்யா:- பிறரை தீங்கிலிருந்து விலக்குதல் ...... 382
3-வது ஹத்யா:- சந்தேகம் தீரும்வரை உபதேசித்தல் ..... 385
4-வது ஹத்யா:- விசுவாசிகளுக்குப் பணிந்து நடத்தல் .. 387
மகத்தான உபதேசங்கள் ................................................ 391
தௌபா விளக்கம் ........................................................ 392
அல்இஸ்திக்பாறு வத் தௌபா ........................................ 403
ஈமானுக்குரிய கடமை (பர்ளு)கள் ஆறு ........................ 406
இஸ்லாம் .................................................................. 410
முதலாவது கலிமா ...................................................... 411
இரண்டாவது கலிமா .................................................... 412
மூன்றாவது கலிமா ...................................................... 412
நாலாவது கலிமா ........................................................ 413
ஐந்தாவது கலிமா ........................................................ 413
இஸ்லாத்தின் நடைமுறை விதிகள் ஐந்து ........................ 414
தக்வா, தவ்ஹீது, ஸுஹ்து, மஃரிபத்து ......................... 415
செல்வம் நிலையற்றது .................................................. 420
நன்றி மறவேல் ............................................................ 421
பொன்னாசையின் விளைவு ............................................ 423

பழங்காலத்து குபேரர்களின் கதி ........................ 426
ஹலாலான உணவு ........................ 429
விலக்கப்பட்டத் தொழில்கள் ........................ 433
பண்டமாற்று ........................ 434
வியாபார ஒழுங்குகள் ........................ 436
அளவு நிறைகளில் மோசம் செய்வோரின் கதி ........................ 440
ஹத்யா ஷரீபின் முடிவுரை ........................ 444
'ஹத்யா மாலை' அளித்தோர் ........................ 445
பிரார்த்தனைத் தூது ........................ 445
பிரார்த்தனைப் புதையல் ........................ 449
ஒரு ஞான ஆசிரியர் (வழிகாட்டி) தேவை ........................ 457
துஆ (பிரார்த்தனை) ........................ 462


# هَدِيَّة شَرِيف

# ஹத்யா ஷரீப்

مُتَعَوِّذًا مُبَسْمِلًا مُحَمْدِلًا مُصَلِّيًا مُسَلِّمًا

---

## அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனது திருத்தூதரை வாழ்த்துதல்

(அறுசீர் விருத்தம்)

### 1

எல்லா வஸ்தினும் பாத்தினாகி
ஏகமா யெங்கும் லாஹிராகும்
அல்லா முல்குயூ பவனுக்காகும்
அனேகப் புகழ்ச்சியும் வகை தனாவும்
சொல்லால் ஸலவாத்தும் சொற்சலாமும்
துய்ய ரசூலுல்லா(ஹ்) மீதிலாகும்
நல்லா ரால்மீதும் ஸஹ்புமீதும்
நாடோ றும்சொரி வா(ய்) இலாஹீ.

**அரும்பதவுரை:-**

பாத்தின்- அகம் (உள்). லாஹிர் - புறம் (வெளி). அல்லா முல்குயூப்- மறைந்தவற்றை மிக அறிந்தவன். தனா- துதி. ஸலவாத்- கருணை. ஸலாம்-சாந்தி. ரசூல்-இறைதூதர். ஆல்- கிளைஞர், ஸஹ்பு-தோழர்.

## அல்லாஹ்வின் இயல்பு

هُوَ الْأَوَّلُ وَالْآخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ ۖ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ ○

**ஆதியும் அவனே; அந்தமும் அவனே; தோன்றுவதும் அவனே; மறைந்திருப்பதும் அவனே; அவன் சகல வஸ்துவையும் நன்கறிந்தோன்''. *(57-3)***

படைப்புப் பொருட்களின் உருவ வேறுபாடுகளைப்போல், எந்த வித உருவத்திலும் அமையாது, ஏக சுயம் சோதியாய் விளங்கும் பரிசுத்த மெய்ப்பொருள்; ஜீவராசிகளின் எண்ணிக்கைகளைப் போன்று எண்ணிக்கை எதுவுமின்றி, சர்வமும் தன்னில் தானாய்த் துலங்கும் தனிப்பொருள்; கண்ணால் கண்டு களிப்பதற்கும், காதில் கேட்டு மதிப்பதற்கும், எட்டாத சர்வ சராசரங்களின் சக்தி சொரூபமாய்ச் சூழ்ந்து நிற்கும் பரம்பொருள்; இன்னவிதம் தானென்று முடிவுகட்டுவதற்கு மானிட அறிவுக்கும், கற்பனைக்கும் எட்டாது, கடந்து நிற்கும், முழுமுதல் காரணப் பொருள்; மறைப்பொருளாக இயங்கி, ஒவ்வொன்றின் அகமியத்தையும் அறியும் சர்வ தத்துவப் பொருள், ஒரு தனித்த இடத்திற்குரிய பொருள் என்று முடிவுகட்ட இடமில்லாது, எங்கும் நிறைந்து நிற்கும் சர்வ வியாபகப் பொருள்; இன்ன காலத்தின் பொருள் என்று முடிவுகட்ட இடமில்லாது எங்கும் நிறைந்து நிற்கும் சர்வ வியாபகப் பொருள்; இன்ன காலத்தின் பொருள் என்பதற்குக் காலத்தால் கட்டுப்படாது, எந்தகாலமும் ஒத்தியங்கும் அடிமுடிவற்ற பொருள்; அழிவுறும் பூதப்பொருளால் ஆக்கம் பெறாது, சூக்குமமாய், நித்திய ஜீவியாய் விளங்கும் நிராமயப் பொருள்; இத்தகைய தூய இயல்புகளும் மேம்பாடுகளும் ஒருங்கே வாய்ந்த ஒரு மெய்ப் பொருளைத்தான், நாம் **‘அல்லாஹு’** என்ற மகத்துவமிக்க உயரிய பெயரால் அழைக்கின்றோம்.

இந்தப் பண்புகள் அல்லாஹ்வைத் தவிர வேறு ஒருவரு மில்லாததால் அவனுக்கு **''வாஹிது''** (ஒருவன்) என்றும் **''அஹது''** (-தனித்தவன்) என்றும் பெயர் கூறப்படுகின்றன. ஆதலால், **‘அல்லாஹ்’** என்று கூறிய மாத்திரத்தில், அவனுடைய மேலான பரிசுத்தத் தன்மைக்கும், உயர் தூய்மைக்கும், அளவற்ற அறிவு ஆற்றலுக்கும் தகுந்த வருணனைகளையுடையோன் என்று அறிவிப்பதைப்போன்றே,அவன் ஒருவன் என்றும் தனித்தவன் என்றும் அறிவிக்கின்றது.



## ‘அல்லாஹு’, ‘ரஹ்மான்’, ‘ரஹீம்’.

إِلَٰهُكُمْ إِلَٰهٌ وَاحِدٌ ۖ لَّا إِلَٰهَ إِلَّا هُوَ الرَّحْمَٰنُ الرَّحِيمُ ○

**(மனிதர்களே!) உங்களுடைய ஆண்டவன் ஒருவனே; அவனைத்தவிர (வணக்கத்துக்குரியவன்) வேறு எவனுமில்லை; அவன் நிகரற்ற அருளும் அளவற்ற அன்புமுடையோன். *(2-163)***

இந்தமாபெரும் உலகமும், இதன்பால் அடங்கியுள்ள நுண்ணிய அணுமுதல் அகன்ற கடல் மலை உள்பட ஏனைய படைப்புகளும், மற்றும் பல கோளங்களும், தம்மைச் சிருஷ்டித்து அன்புகூர்ந்து அருள்புரிபவன் ஒருவனுள்ளான்; என்பதை அறிவித்துக் கொண்டே இருக்கின்றன. ‘அவன் ஒருவன்’ உண்டு என்பதை ஒவ்வொருவரும் தெளிவாய் அறிந்து கொள்ளும் முறையில் பல இயற்கைப் பிரமாணங்களை, மானிடரை உய்விக்க வந்த திருமறையாம் நமது ‘குர்ஆன் ஷரீப்’ பல திருவாக்கியங் களின் மூலம் சுட்டிக்காட்டுகின்றது. அவற்றில் சில திருவசனங்களை மட்டும் குறிப்பிடுகிறோம்.

நபிகள் நாதர் (ஸல்) அவர்களிடம் **''உங்கள் நாயன் யார்? அவனது இலட்சணம் யாது?''** என்று வினவப்பட்டபோது, இறைவன் திருமறையின் மூலம்:-

قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ ○ اللَّهُ الصَّمَدُ ○ لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ ○
وَلَمْ يَكُن لَّهُ كُفُوًا أَحَدٌ ○

| | |
|---|---|
| **குல்ஹுவல்லாஹு அஹது:** | ''அல்லாஹு ஆகிய ''அவன் ஏகனாயிருக்கிறான்''. |
| **அல்லாஹுஸ்ஸமது:** | ''அல்லாஹு தேவையற்றவனும் எல்லாப் பொருட்களுக்கும் இன்றியமையாதவனுமாவான்''. |
| **லம் யலித் வலம்யூலத் :** | ''அவன் (ஒருவரைப்) பெறவுமில்லை; அவன் (ஒருவரால்) பெறப்படவுமில்லை''. |

வலம்ய குன்லஹு¬குபுவன் அஹது: "இன்னும் அவனுக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை; என்று கூறுவீராக". (என்று அறிவிக்கின்றான்.)

"அவன் முன்மாதிரியின்றியே வானங்களையும், பூமியையும் படைத்தான்; அவனுக்கு எவ்வாறு சந்ததியேற்படும்? அவனுக்கு மனைவியே கிடையாதே! யாவற்றையும் அவனே, படைத்திருக்கின்றான்; அன்றி அவன் யாவற்றையும் நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான்." (6-101)

இத்தகைய அல்லாஹு¬தான் உங்களைப் போசித்துப் பரிபக்குவப் படுத்தும் நாயன்; வணக்கத்திற்குரியவன்; அவனைத்தவிர வேறு ஒருவருமில்லை. அவனே எல்லாவற்றையும் சிருஷ்டித்தவன். ஆகவே, "அவன் ஒருவனையே நீங்கள் (யாவரும்) வணங்குங்கள். எல்லாக் காரியங்களையும் கண்காணிப்பவன் அவனே." (6-102)

"ஆரம்பத்தில் படைப்புகளை உற்பத்தி செய்தவன் யார்? (அவ்வாறே பின்னும்) பின்னும் உற்பத்தி செய்து கொண்டிருப்பவன் யார்? மேகத்திலிருந்து (மழையை இறக்கி) பூமியில் (தானியங்களை முளைக்கச் செய்து) உங்களுக்கு ஆகாரமளிப்பவன் யார்? அல்லாஹ்வுடன் வேறொரு ஆண்டவன் இருக்கின்றானா? நீங்கள் உண்மை சொல்பவர்களாக இருந்தால் (இதற்கு) உங்களுடைய அத்தாட்சிகளைக் கொண்டு வாருங்கள் என்று" (நபியே!) நீர் கூறும்." (27-64)

"வானங்களுடையவும், பூமியுடையவும், இவைகளிலுள்ள யாவற்றினுடையவும் ஆட்சி அல்லாஹ்வுக்குரியதே. அல்லாஹ் அவை யாவற்றையும் (தன்) ஞானத்தைக் கொண்டு சூழ்ந்த (றிப)வனாக இருக்கிறான்." (4-1260)

"வானத்தையும் பூமியையும் படைப்பதும், உங்களுடைய மொழிகளும், வர்ணங்களும் வெற்வேறாக இருப்பதும், அவனுடைய அத்தாட்சிகளிலுள்ளவையாகும். இவற்றிலும் உலகத்தாருக்குப் பல உறுதிப்பாடுகளிருக்கின்றன." (30-22)

"உங்களோடு வாழுகின்ற உங்கள் மனைவிகளை, உங்களிலிருந்தே அவன் உற்பத்திசெய்து, உங்களுக்கிடையில் அன்பையும்



நேசத்தையும் உண்டுபண்ணியிருப்பதும், அவனுடைய எடுத்துக் காட்டுகளில் ஒன்றாகும். சிந்தித்து உணரக்கூடிய மக்களுக்கு இவைகளில் (ஒன்றல்ல) நிச்சயமாக பல அத்தாட்சிகளிருக்கின்றன." (30-21)

மேற்கண்ட திருவாக்கியங்கள் பல மகத்தான போதனைகளைத் தருகின்றன. அல்லாஹ் இணை துணையற்ற ஏகனாக இருக்கின்றான்; வணக்கத்திற்குரிய ஒருவன், அவனன்றி வேறில்லை, ஆரம்பத்தில் வானம் பூமி உள்பட, அவற்றுள் அடங்கியுள்ள சர்வ பொருட்களின் சிருஷ்டிகர்த்தாவும், அவற்றிற்குப் பல வழியிலும் உணவு மற்றும் வசதிகளை அளித்துக் கொண்டிருக்கும் உரிமையாளனும் அவனே என்று ஊர்ச்சிதப்படுத்தி உணர்த்துகின்றன. அவை மனித சமுதாயத்துக்குள்ளும், ஏனைய பிராணிகளுக்குள்ளும், ஆண் பெண் இயற்கைத் தொடர்பைச் சுட்டிக்காட்டி, அதனை வகுத்தமைத்த இறைவனை மானிடரின் ஞாபகத்திற்குக் கொண்டு வருகின்றன. அந்தத்தொடர்பும், அதனைச் சார்ந்த அன்பு, கருணை, ஒருவர்பால் ஒருவர் கொள்ளும் பிறர் நலம் பேணல் முதலியன என்பதும், அவை முற்றிலும் தவிர்க்கக் கூடாதவை என்பதும், இந்தத்திரு வாக்கியங்களால் தெளிவாகும் கருத்துக்களாகும்.

பின்னும் அவை, மனிதன் மிகப் பலவீனமானவன் என்பதை தூக்கத்தின் வாயிலாகச் சுட்டிக்காட்டி, அதன் மூலம் இறைவனை மானிடரின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது.

"இரவில் நீங்கள் நித்திரை செய்து இளைப்பாறிக் கொள்வதும், பகலில் (பூமியில் பல பாகங்களிலும் சென்று) நீங்கள் அவனுடைய ஈகையைத் தேடிக்கொள்வதுமாகும். செவிசாய்க்கும் சமூகத்திற்கு இதிலும் நிச்சயமாகப் பல அத்தாட்சிகளிருக்கின்றன." (30-23)

யானை, சிங்கம் ஆகியவற்றைக்கூட ஆட்டிவைக்கும் வன்மையும், உற்சாகமும், ஊக்கமுமுடைய மனிதன், மற்றொரு சமயம் அவனையும் அறியாமலே அவன் சோர்ந்து விடுகின்றான். அவன் யாவற்றையும் விடுத்து, மரணத்தின் ஒரு பகுதியான உறக்கத்தினுள் புகுந்து வெளியேறாத வரை, பழைய பலத்தையும் உற்சாகத்தையும் பெற அவனால் முடிவதில்லை. அறிவும், ஆராய்ச்சியும், ஆற்றலும் மிகுந்த எவனாலும் நித்திரையைத் தவிர்க்க முடிவதில்லை. இவ்வாறு மனிதனால் தவிர்க்க முடியாத இயற்கைகள் யாவும், மனிதன்

தானாகவே உண்டாக்கிக் கொள்பவையல்ல என்பதும், இவனது சக்திக்குப் புறம்பான எல்லாம், ஒப்பற்ற அல்லாஹு ஒருவனாலேயே ஆக்கப்பட்டவை என்பதும், இந்தத் திருவாக்கியங்களால் அறிவுறுத் தப்படும் போதனை களாகும்.

இந்த உலகைப் பார்க்கினும் பன்மடங்கு பெரிதான சூரியன், குறிப்பிட்ட நேரத்தில் உதிக்கவும், அடையவும் அவனுடைய ஆளுகையின் கிழன்றி, எங்ஙனம் சாலும்? என்பதையும் திருக்'குர்ஆன்' சுட்டிக்காட்டுகிறது.

***"தன்னுடைய வரையறைக்குள் (தவறாமல்) செல்லும் சூரியனும் (ஓர் எடுத்துக்காட்டாகும்.) இது, யாவும் நன்கறிந்தோனும் மிகைத் தோனுமான அல்லாஹுவால் அமைக்கப்பட்டது.*** **(36-28)**

***"அவன்தான் உங்களை (ஆரம்பத்தில்) மண்ணால் படைத்தான்; பின்னால், ஒரு துளி இந்திரியத்தைக் கொண்டு, பின்னர் அதனை இரத்தக் கட்டியாகவும், (செய்து), உங்களை ஒரு சிசுவாகவும், வெளிப் படுத்துகிறான்; பின்னர்,நீங்கள் (படிப்படியாக) உங்கள் வாலிபத்தை அடைந்து, பின்னர், முதியோராகின்றீர்கள். இதற்கு முன்னரும் உங்களில் பலர், இறந்துபட்டிருக்கின்றனர். ஆயினும், (உங்களில் ஒவ்வொரு வரும்) குறிப்பிட்ட தவணையை அடைந்தே தீருகின்றீர்கள்; இதனை நீங்கள் அறிந்து கொள்வீர்களாக."*** **(40-67)**

***"சகலவற்றின் உரிமை எவனுடைய கையில் இருக்கின்றதோ, அவன் மிகப் பரிசுத்தமானவன். அவனிடமே நீங்கள் திரும்பிக் கொண்டுவரப் படுவீர்கள்."*** **(36-83)**

***"அவனே உயிர்ப்பிக்கின்றான்; (வாழ்விக்கின்றான்) இறப்பிக் கின்றான்; (வீழ்விக்கின்றான்) யாதொன்றை (ஆக்க, அழிக்க) அவன் தீர்மானித்தால், அதனை 'ஆகுக' என்று அவன் கூறியவுடன் அது ஆகி விடுகின்றது."*** **(40-68)**

**ஆழ்ந்து சிந்தித்தால் அனைத்திலும் 'அல்லாஹ்வின் அருளைக் காணலாம்.**



## இணைவைத்தல் பெரும் குற்றம்

فَتَعَالَى اللّٰهُ عَمَّا يُشْرِكُوْنَ ○

***"இணை துணை வைப்பவைகளை விட்டும் அல்லாஹு மிக்க உயர்ந்தவன்."*** *(அப்பாற்பட்டவன்)*

இணை என்பது இறைவனுக்குச் சமமாய் வேறொரு பொருளை ஒப்பாக்கி, அதற்கு ஆண்டவனுடைய பண்புகளில் சிலவற்றை கற்பனையாகக் கற்பித்து, அவற்றிற்கு அடிபணிந்து இறைஞ்சி வேண்டப் படுவதற்குச் சொல்லப்படும். ***"அல்லாஹ்விற்கு இணை வைக்காதே நிச்சயமாக இணை வைத்தல் மகத்தான அநியாயமாகும்." (31-13) 'இது'*** இறைவனால் பொறுக்கப்பட மாட்டாத பெருங் குற்றமாகும்.

அநியாயம் என்பது ஒன்றை வைக்க வேண்டிய இடத்தை விட்டு வேறு இடத்தில் வைப்பதற்குக் கூறப்படுகிறது. இதற்கிணங்க ஏகனான அல்லாஹ்வின்மீது நம்பிக்கை வைத்து, அவனை வணங்குவதற்குப் பதிலாக, அவனது படைப்புகளின்மீது நம்பிக்கை வைத்து, அவற்றை வணங்குவது அநியாயம் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

'அல்லாஹ்!' அந்த வல்லோனது வர்ணனைகளில் முதன்மை யானது ஏகத்துவமாகும். இதை விடுத்து இறைவனுக்கு இணை கற்பிப்பதை திருமறை பல இடங்களில் கண்டித்திருக்கின்றது. அந்தக் கண்டிப்புகளில் சில கீழே வருமாறு:-

***"நிச்சயமாக அல்லாஹு தனக்கு இணை வைப்பதை மன்னிக் கவே மாட்டான்; (இது அல்லாதவற்றை) தான் விரும்பியவர்களுக்கே மன்னிப்பான். ஆகவே, எவன் ஒருவன் அல்லாஹுவுக்கு இணை வைத்தால் அவன் வெகு தூரமான வழி கேட்டில்தான் இருக்கின்றான்."*** **(4-116)**

***"அல்லாஹுவை அன்றி, (தெய்வங்களாக) அவர்கள் அழைப்பவை பெண்களையேயன்றி வேறில்லை; துஷ்ட ஷைத் தானையே அன்றி (மற்றெதையும்) அவர்கள் அழைக்கவில்லை."***

(4-117), அந்த ஷைத்தானை அல்லாஹுத்தஆலா முனிந்து சபித்தான், அதற்கவன், ''உன் அடியார்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினரை, நிச்சயமாக நான் எடுத்துக் கொள்வேன'', என்று கூறினான். அன்றி நிச்சயமாக நான் அவர்களை வழி கெடுப்பேன்; அவர்களுக்கு வீண் நம்பிக்கைகளை உண்டுபண்ணி (பிசாசுகளுக்கு, நேர்ச்சைக்காக விடப்பட்ட) ஆடுமாடுகளின் காதுகளை அறுத்துவிடும்படியும் அவர்களை ஏவுவேன். அல்லாஹ்வின் சிருஷ்டி (களுடைய கோலங்)களை பேதப்படுத்தும் படியும் நிச்சயமாக நான் அவர்களை ஏவுவேன்'' (என்றும் கூறினான்.) ஆகவே, எவன், அல்லாஹுத்தஆலாவை அன்றி (இத்தகைய) ஷைத்தானை (தான் வழிபடும்) பாதுகாவலனாக எடுத்துக் கொள்கின்றானோ, அவன் நிச்சயமாக வெட்ட வெளிச்சமான நஷ்டத்தையே அடைந்து விடுவான்.'' (4-118-119)

''அல்லாஹுத்தஆலாவுக்கு இணை வைக்காது, அவன் ஒருவனுக்கே முற்றிலும் தலைசாய்த்து விடுங்கள்; எவன் அல்லாஹுத்தஆலாவுக்கு இணை வைக்கின்றோனோ, அவன் வானத்திலிருந்து (முகங்குப்புற) விழு பவனைப் போலாவான்; அவனை (காகம், கழுகு போன்ற) பறவைகள் இறாய்ந்து கொண்டு போய்விடும்; அல்லது வெகுதூரத்திற்குக் காற்று அடித்துக் கொண்டு சென்றுவிடும்.'' (22-31)

அல்லாஹுத்தஆலாவுக்கு இணையாக பல தெய்வங்கள் வணங்கப் படுகின்றன அல்லவா? அவை எப்படிப்பட்டவை? அவற்றில் விசுவாசம் கொண்டு, அடிபணிந்து, தலைசாய்த்து வணங்குபவர்கள் எத்தகையோர், அவர்களின் முடிவு யாது? என்ற விஷயங்களை மேற்கூறப்பட்ட திருவசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. இன்னும் பல திருவசனங்கள் உபதேசத் தோரணையில் கண்டித்துக் கூறப்படுகின்றன.

(அஃதாவது) ''நிச்சயமாக அல்லாஹுத்தஆலாவையன்றி எவர்களை அவர்கள் (ஆண்டவனென) அழைக்கின்றார்களோ? அவர்கள் உங்களைப் போன்ற அடியார்களே; (உங்கள் கோரிக்கைகளை அவர்கள் நிறைவேற்று கிறார்கள்; என்று கூறுவதில்) நீங்கள் உண்மை சொல்பவர்களாக இருந்தால், அவர்களை நீங்கள் அழைத்துப் பாருங்கள்; உங்களுக்கு அவர்கள் பதிலளிக்கட்டும்''. (விக்கிரக ஆராதனைக்காரர்களே! நீங்கள் வணங்கும்) ''அவைகளுக்கு கால்கள் இருக்கின்றனவே, அவைகளைக் கொண்டு நடக்கின்றனவா? அவைகளுக்கு கைகள் இருக்கின்றனவே, அவைகளைக் கொண்டு



பிடிக்கின்றனவா? அவைகளுக்குக் கண்கள் இருக்கின்றனவே, அவைகளைக் கொண்டு பார்க்கின்றனவா? அவைகளுக்குக் காதுகள் இருக்கின்றனவே, அவைகளைக் கொண்டு கேட்கின்றனவா? (அவ்வா றாயின்) நீங்கள் இணைவைத்து வணங்கும் (அந்தத்)தெய்வங்களை அழைத்துக் கொண்டு, (நீங்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து நமக்கு இடைஞ்சலை உண்டுபண்ண) நம்மிடம் சூட்சி செய்து பாருங்கள்; (இதில்) நீங்கள் சிறிதும் தாமதிக்க வேண்டாம்;'' என்று (நபியே!) நீர் கூறுவீராக. (7-194-195)

''மனிதர்களே! உங்களுக்கு ஓர் உதாரணம் தரப்படுகிறது; அதனை, செவிமடுத்துக் கேளுங்கள். 'அல்லாஹுத்தஆலா' அல்லாத எவற்றை நீங்கள் (தெய்வங்களென) அழைக்கின்றீர்களோ? அவை யாவும் ஒன்றுசேர்ந்(து முயற்சித்)த போதிலும், ஒரு ஈ, எறும்பைக்கூட படைக்க முடியாது; ஒரு ஈ அவர்களுடைய யாதொரு பொருளை எடுத்துக் கொண்ட போதிலும், அந்த ஈயிடமிருந்து அதனை விடுவிக்கவும், அவைகளால் முடியாது; (அவர்கள் தெய்வங்களென அழைக்கும்) அவை, அவ்வளவு பலஹீனமானவை; ஆகவே, அவற்றை (தெய்வங் களென) அழைப்போரும் பலஹீனமானவர்களே.'' (22-73)

இங்கு ஒரு முக்கிய விஷயம் கவனிக்கத்தக்கது. 'அல்லாஹுத்தஆலா மனிதனைத் தனது பிரதிநிதியாக நியமித்து அவனுக்கு எல்லாவித சக்திகளையும் கொடுத்திருக்கிறான். மனிதனுக்கு வானமண்டலத்தைக் கிழித்துச் செல்லவும், ஆழிய சமுத்திரத்தின் உள்ளே ஊடுருவிச் செல்லவும், இன்னும் எத்தனையோ அற்புதங்கள் நிகழ்த்தவும் திறமை கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரேயொரு சக்தியை மட்டும் அல்லாஹுத்தஆலா தன்னிடமே வைத்திருக்கிறான். அதுதான் இன்னொரு பொருளுக்கு உயிர் கொடுப்பது. இன்னும் தெளிவாகச் சொல்லுவ தானால், வணங்கும் மனிதனுக்கும், வணங்கப்படும் நாயனுக்கும் மிக முக்கிய வித்தியாசம், ஒரு உயிரைப் படைப்பது அல்லது உயிர் கொடுப்பதுதான். இதனால்தான் இந்தத்திருவசனத்தில் அல்லாஹ் இந்தக் கருமத்தைத் தெளிவாகக் குறிப் பிடுகிறான்.

முஸ்லிம் அல்லாதார்களால் வணங்கப்படும் விக்கிரகங்கள், கற்பனைத் தெய்வங்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஒரு ஈயைக்கூட உண்டுபண்ண முடியாது, என்பது மட்டுமல்ல, ஒரு ஈயை அகற்றக்கூட சக்தியற்றவை என்பதை இந்த வசனங்களின் மூலமாகப் புரிய வைக்கிறான். அன்றியும், ஒரு மிருகத்தின் மேல் ஈ அமருமாயின், அந்த

மிருகம் தனது வாலால் அசைத்து அந்த ஈயை ஓட்டிவிடுகிறது. ஒரு பறவையின் மீது அமரு மானால் அந்தப்பறவை தனது இறகை உதறி அந்த ஈயை அகற்றிவிடுகிறது. இவ்வளவு சிறிய வேலையைக்கூட இந்த உருவங்களுக்கு நிறைவேற்றிக் கொள்ளும் தகுதி இல்லையே!

அந்தோ பரிதாபம்! நிலை இவ்வாறு இருக்க முஸ்லிம் (ஆண் பெண்)களில் சிலர்கூட அந்தோணியார், பிள்ளையார் கோவில் களுக்கும், மாரியாத்தாவுக்கும் நேத்திக்கடன் வைத்தால், தான் நினைத்த காரியம் நிறைவேறிவிடும் என்றும், சில வியாதிகளை மாரியாத்தாவின் செயல் என்றும் நினைத்து, தமது ஈமானை இழந்து முர்தத்துகளாக (மூதேவிகளாக)ச் சாகிறார்கள். கொசுவைக்கூட விரட்டமுடியாத இந்த உருவங்கள்மீது ஏற்படும் நம்பிக்கையால் ஈமான் மாறி, ஊழியூழி காலம் நரகில் வேதனைப்படவேண்டிய நிலைக்குத் தன்னைத்தானே ஆக்கிக் கொள்கின்றனர்.

**''அல்லாஹ்வை கண்ணியப்படுத்தவேண்டியவாறு அவர்கள் கண்ணியப்படுத்தவில்லை. நிச்சயமாக அல்லாஹ் மிக்க பலவானும் யாவையும் மிகைத்தவனுமாக இருக்கிறான்.''** ***(22-74)***

**''பூமியிலுள்ளவற்றை இவர்கள் தெய்வங்களாக எடுத்துக் கொண்டிருக்கின்றனரே; அவை (மரித்தோரை) உயிர்ப்பிக்குமா? வானங் களிலும் பூமியிலும் அல்லாஹு¬வைத் தவிர வேறு நாயன் இருந் திருந்தால், அவை இரண்டும் அழிந்தே போயிருக்கும்; அர்ஷின் அதிபதி யாகிய 'அல்லாஹு¬' இணை வைப்போர் வர்ணிக்கும் தன்மை களிலிருந்து மிகப் பரிசுத்தமானவன்.''** ***(21-21-22)***

(மனிதர்களே!) **''அல்லாஹு¬ கூறுகிறான்; இரு தெய்வங்களை நீங்கள் எடுத்துக் கொள்ளாதீர்கள். நிச்சயமாக ஆண்டவன் ஒரே ஆண்டவன் தான்; ஆகவே, (அந்த ஒருவனாகிய) எனக்கு நீங்கள் பயப்படுங்கள்.''** ***(16-51)***

**'எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனே வானங் களையும், பூமியையும், இருளையும், ஒளியையும் படைத்தான்; இவ்வாறிருந்தும் நிராகரிப்போர், (அல்லாஹ்வாகிய) தங்கள் இறை வனுக்கு (பொய்யான தெய்வங்களை)ச் சமமாக்குகின்றனர்.''** ***(6-1)***

**''அவன்தான் உங்களைக் களிமண்ணால் படைத்து, (உங்களுக் குரிய) ஜீவிய காலத்தை (குறிப்பிட்டு) விதி செய்தான். அவனிடத்தில் (உங்கள் விசாரணைக்காகவும்) ஒரு குறிப்பிட்ட கால முண்டு;**



**இவ்வாறிருந்தும், நீங்கள் (அவனது தெய்வீகத் தன்மையில்) சந்தேகிக்கின்றீர்கள்.''** ***(6-2)***

**''அல்லாஹு¬வையன்றி எவற்றை (ஆண்டவனென) நீங்கள் அழைக்கின்றீர்களோ? அவற்றிற்கு, எத்தகைய உதவியும் செய்ய சக்தியற்றவையாயிருப்பதுடன், தமக்குத் தாமே உதவி செய்து கொள்ளவும் சக்தியற்றவையாயிருக்கின்றன.''** ***(7-197)***

**''நிச்சயமாக நான்தான் 'அல்லாஹு¬', என்னைத் தவிர வேறு நாயன். (இல்லவே) இல்லை; என்னையே நீர் வணங்கும்.''** ***(20-14)***

**இவையாவும் நிச்சயமாக அல்லாஹ்தான் மெய்யான ஆண்டவன் என்பதற்கும், அவனையன்றி அவர்கள் (தெய்வங்களென) அழைப் பவை பொய்யானவை என்பதற்கும், நிச்சயமாக அல்லாஹு¬தான் மிகப் பெரியவனும் மேலானவனும் (வணக்கத்திற்குரியவனும்) ஆவான் என்பதற்கும், (போதிய) அத்தாட்சிகளாக இருக்கின்றன.** ***(31-30)***

**''நிச்சயமாக அல்லாஹ்வினிடத்தில் ஊர்வனவை (பிராணி)களில் மிகக் கேவலமானவை (எவை என்றால், சத்தியத்தை) அறிந்துகொள்ள முடியாத செவிடர்களும் ஊமைகளும்தான்.''** ***(8-22)***

அல்லாஹ்வுக்கு நிகர் செய்வதற்குத் தகுதியற்றனவாயிருப்பன; உயிரும் உணர்வுமுடைய விலங்கினங்களும், இடம் விட்டிடம் பெயரும் தன்மையற்ற தாது தாவரப் பொருட்களும் மட்டுமல்ல, இவற்றையுடைய வனான மனிதனும்கூட தகுதியற்றவனாவான்; என்பது, இஸ்லாத்தின் அழுத்தம் திருத்தமான கொள்கையாகும். இது மனித சமுதாயத்தின் மாமணியாய் அவதரித்த ரசூலேகரீம் (ஸல்) அவர்களுக்கு இறைவன் இட்ட கட்டளைகளிலொன்றாகும்.

(நபியே!) **''மறுமையைப்பற்றி அது எப்பொழுது வருமென உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர்.** (எப்பொழுது வருமென்று) **எதற்காக நீர் கூற வேண்டும்? அதன் முடிவெல்லாம் உமது இறைவனிடமே இருக்கின்றது. அந்த நாளைப்பற்றி பயப்படக் கூடியவர்களுக்கு நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வோரேயன்றி வேறில்லை''** (அது வரும் காலத்தையும், நேரத்தையும் அறிவிப்பது உமது கடமை அல்ல.) ***(79-42-45)***

மனிதனுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கும், இடையூறுகளுக்கும் எதிர்கால அறிவில்லாதிருப்பதே காரணமாகும். உண்ணும் உணவு தீங்காக முடிவதும், இலாபமடையும் நோக்கத்துடன் மேற்கொள்ளும்

தொழில் நட்டத்தில் முடிவதும், மனிதனுக்கு எதிர்கால அறிவில்லாமையினாலேயேயாம். இன்னல் தரும் காரியத்தால் இன்னலே விளையும்.

**"அவர் பொருந்திக்கொண்ட ரசூலேயல்லாது (வேறு) எவருக்கும் அவனுடைய மறைவானது வெளியாகாது"** என்றபடி இறைவன் கூறியிருப்பதால், நம் பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களை அல்லாஹு தனது ரசூலாகத் தெரிந்தெடுத்து, இந்த உலகத்தார் அனைவருக்கும் பெரும் கருணையாளராக அருளிச்செய்து அந்தச் சிரேஷ்டரை வழிபட்டு நடக்கும் படியும் நம்மை ஏவுகின்றான்.

**"அல்லாஹ்வுக்கு வழிபட்டு நடவுங்கள்; அவனுடைய தூதருக்கும் வழிபட்டு நடவுங்கள். நீங்கள் புறக்கணித்தால்-** *(அது உங்களுக்குத்தான் நஷ்டம். ஏனென்றால்)* **நம் தூதர் மீதுள்ள கடமையெல்லாம், அவர் நம்முடைய தூதைப் பகிரங்கமாக எத்தி வைப்பதுதான்."** ***(64-12)***

*(நபியே! மனிதர்களை நோக்கி)* **"நீர் கூறும் நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாயிருந்தால், என்னைப் பின்பற்றுங்கள். உங்களை அல்லாஹ் நேசிப்பான். உங்கள் பிழைகளையும் அவன் மன்னித்துவிடுவான். அல்லாஹ் மன்னிப்போனும் மிகவும் இரக்கமுடையோனுமாயிருக்கின்றான்."** ***(3-31)***

**"இத்தகைய அல்லாஹுதான் உங்களைப் போஷித்துப் பரிபக்குவப்படுத்தும் நாயன். வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர வேறு ஒருவருமில்லை; அவனே,யாவற்றின் படைப்பு கர்த்தா; ஆகவே, அ(வன் ஒரு)வனையே நீங்கள் (யாவரும்) வணங்குங்கள்; எல்லாக் காரியங்களையும் கண்காணிப்பவன் அவனே.** ***(6-102)***

وَلِلّٰهِ الْاَسْمَآءُ الْحُسْنٰى فَادْعُوْهُ بِهَا ۝ تَبَارَكَ اسْمُ رَبِّكَ
ذِى الْجَلٰلِ وَالْاِكْرَامِ ۝

**"அல்லாஹ்வுக்கு மிக்க அழகான திருநாமங்கள் இருக்கின்றன. ஆகவே அவற்றைக் கொண்டு நீங்கள் அவனை அழையுங்கள்."**

*(நபியே!)* **"சிறப்பும் கண்ணியமுமுள்ள உமதிறைவனின் நாமம் மிக்க பாக்கியமுடையது."**



என்ற திருவாக்கியத்திற்கிணங்க அவனுக்கு அருளாளன், அன்புடையோன், போசகன், உணவளிப்போன், நீதவான் முதலிய பல உயரிய நாமங்கள் உள்ளன. வேதங்களில் அவனைப் பற்றிக் கூறுமிடத்து, அந்தந்த இடங்களுக்கு உசிதமான காரணப் பெயர்களால் அவன் அழைக்கப் படுகின்றான. அவற்றுள் முக்கியமாகத் திருக்குர்ஆன், ஹதீது (நபி திருமொழி)களில் அழைக்கப்படுகின்றான். ஆனால், சர்வ சக்தனான இறைவனின் சர்வ பண்புகளையும் குறிப்பிடும் **'அல்லாஹு'** என்ற பதம் மேற்சொன்ன 99 நாமங்களில் மிக மகத்தான கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதால்தான், இதற்கு நிகரான சொல், அரபு மொழியிலோ, அன்றி அதன் பொருளைப் பொதிந்த சொல், வேறெந்த மொழியிலோ இல்லையென்பது அறிஞர்கள் கண்ட உண்மை. எனவே, இந்தத் திருநாமத்தின் உயரிய கருத்து வேறெந்த மொழியிலும் இல்லாததால் இந்தப் புனிதப் பெயருக்குப் பகரம் வேறு பதங்களை உபயோகிக்காமல் **'அல்லாஹு'** என்ற திருநாமத்தையே உபயோகிப்பது நன்றாகும்.

## மேற்கோள்:

**'அல்லாஹு'** என்னும் சொல்லில் எந்த ஒரு எழுத்தை நீக்கிய போதினும் அது பொருள் சிதைவின்றி அந்தத் தனிப்பெரும் ஓரிறைவனாகிய 'அல்லாஹ்வையே குறிக்கின்ற அற்புதத் தன்மையைக் காணலாம். 'அல்லாஹு' என்ற சொல்லிலிருந்து 'அலிபை' நீக்கினால் **'லில்லாஹ்'** என்றும், அதனுடன் முந்திய 'லாமை'யும் நீக்கினால் **'லஹு'** என்றும், இரண்டாவது 'லாமை'யும், நீக்கினால் **'ஹு'** என்றும், இரண்டு 'லாமில்' ஒரு 'லாமை' நீக்கினால் **'இலாஹு'** என்றும், இரண்டு லாமை'யும் நீக்கினால் **'அஹ்'** என்றும், இரண்டாவது 'லாமை'யும் 'ஹா'வையும் நீக்கினால், **'அல்'** என்றும் ஆகும். இவ்வாறு வரும் 'லில்லாஹ்' 'லஹு' 'ஹு' 'இலாஹு' 'அஹ்' 'அல்' ஆகிய சொற்கள் அனைத்தும் 'அல்லாஹு'வையே குறிக்கின்றன.

'அல்லாஹ்' என்ற திருமொழி ஆண்பாலாகவும் இல்லை, பெண்பாலாகவும் இல்லை; அஃறிணையோ உயர்திணையோ ஒருமையோ, பன்மையோ அன்று. வணங்கப்படுபவனைக் குறிக்கும் இந்தத் திருமொழியை உச்சரிக்கும்போது எழுத்துப் பிறழாமல் மிக கண்ணியமாக அராபியர்கள் மொழி(யானதால் அவர்கள் மொழி)வது

போன்று; நுனி நாவின் மேல் பரப்பு மேல் தாடையின் முன் பல்லை அடுத்த (வலது) பல் முரசின் விளிம்பில் தொடும் வகையில் உச்சரித்து வழங்குவது நல்லது. (பார்க்க மகானீ)

*(''நபியே!) நீர் கூறும்: நீங்கள் 'அல்லாஹ் என்றழையுங்கள், அல்லது 'ரஹ்மான்' என்றழையுங்கள். (இவற்றுள்) எந்தப் பெயரைக் கொண்டும் அவனை அழையுங்கள்.''*

அல்லாஹுதஆலா காதின்றி கேட்கவும், கண்ணின்றிப் பார்க்கவும் சக்தி வாய்ந்தவன்; அவன் சித்தமின்றி ஓர் அணுவும் அசையாது. ஆதலின் எல்லையற்ற பழமையின் நித்திய ஜீவியாய் விளங்கும், **''அல்லாஹுதஆலாவையே, வானங்களிலும் பூமியிலுமுள்ளவைகள் யாவும், இரவும் பகலும் புகழா நிற்கும்; புகழனைத்தும் அவனுக்கே உரியன வாகும்.''** ***(30-18)***

قُلِ الْحَمْدُ لِلّٰهِ

*(''நபியே!) சர்வ புகழும் அல்லாஹ்வுக்குரியது எனக் கூறுவீராக.''*

அல்லாஹுதஆலா (ஜல்) அமரர்களிடம் ''நான் எனது (கலீபா) பிரதிநிதியாக ஒருவரைப் படைத்து ஆக்கிக்கொள்கிறேன்'' என்றான். அதற்கு அமரர்கள் ''குழப்பக்காரர்ளையும் இரத்தம் வோட்டி களையுமா படைக்கப் போகின்றாய்'' என்றனர். அதற்கு இறைவன்; 'நீங்கள் அறியாதவற்றை நான் அறிவேன்' எனக் கூறினான். இதனை அவர்களுக்கு எடுத்துக்காட்டும் வகையில் ஆதி பிதா ஆதம் (அலை) அவர்களை அல்லாஹுதஆலா மண்ணினால் உருவம் அமைத்து, சில காலத்திற்குப்பின், அந்த மண்பாண்டத்தில் முதலாவதாக தொப்புள் இடத்தில் ரூஹை ஊதினான். அது உறுப்புகளின் வழியாக நாசியில் வந்ததும், உணர்வு ஏற்பட்டுத் தும்மியதும் **'அல்ஹம்து லில்லாஹ்'** என்று ஆதம் மொழிந்தார்கள். இதனைக் கேட்ட இறைவன் 'ஆதமே இதற்காகவே நாம் உம்மைப் படைத்தோம்,எனது ரஹ்மத்து, உமக்கு உண்டாகட்டும்' எனக் கூறினான். ஆதம் நபி கூறிய இந்த மொழியைக் கேட்டு அமரர்கள் திகைத்தனர். அல்லாஹுதஆலா அமரர்களை நோக்கி, ''எனது கலீபாவைப் பற்றி ஏற்கனவே நான் உங்களிடம் கூற வில்லையா?'' எனக் கேட்டான். அதற்கு அமரர்கள் தலைசாய்த்தனர்.



மனிதனுடைய முதல் மொழியே **'அல்ஹம்து லில்லாஹ்'** புகழனைத்தும் அல்லாஹ்வுக்குரியதே என்பதாம்.

## நான்கு வகையான புகழ்

1. 'அல்லாஹுதஆலா' தன்னைப்பற்றித் தானே புகழ்தல்.
2. இறைவன் தனது தூதர்கள் ஞானவான்கள் ஆகியவர்களைப் புகழ்தல்.
3. அடியார் அல்லாஹ்வைப் புகழ்தல்.
4. அடியார் தமக்குள் ஒருவர் மற்றொருவரைப் புகழ்தல்.

இந்தப் புகழ்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்குரியனவாகும். அவனது ஸலவாத்தும் ஸலாமும் (வாழ்த்தும் சோபனமும்) முஹம்மது முஸ்தபா ரசூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள்மீதும், அவர்களின் உவப்புக்குரிய செய்யிதினா அபூபக்கர், உமறு, உதுமான், அலீ ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள்மீதும், மற்றும் ஸஹாபாக்கள் (ரலி) மீதும் நாடோறும் பொழியப்படுவதாக.

## ஸலவாத்தின் மகிமை

إِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهُ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ ۚ يٰٓأَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا
صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا ○

**''நிச்சயமாக, அல்லாஹ்வும், அவனுடைய அமரர்களும் நபி முஹம்மது (ஸல்) அவர்கள்மீது ஸலவாத்துச் சொல்கின்றார்கள்; ஆகவே விசுவாசிகளே! நீங்களும் அவர்கள்மீது ஸலவாத்துச் சொல்லி ஸலாமும் கூறிக் கொண்டிருங்கள்.''** ***(33-56)***

அல்லாஹுதஆலா ஸுப்ஹானஹுதஆலா வதஆலா தன் முஃமினான **அடியார்களுக்குச் செய்துள்ள கிருபைகளில், அதிக உயர்வும் சிறப்பும் வாய்ந்த (நிஃமத்) பாக்கியமாவது:- அவன் அந்த மெய்யடியார்களில்**

நின்றும் கண்ணியமிக்க ஒரு ரசூலைத் தெரிந்தெடுத்து, அந்த ரசூலை உலகத்தாருக்குப் பெரும் கருணையாளராகவும் தன் ஹபீபாகவும் சிரேஷ்டராகவும் இறுதி நபியாகவும் கொண்டான். ஏனெனில், இந்தப் புவியிலுள்ள மானிடரைக் கெட்ட கோட்பாடுகளை விட்டும், வழிகேடான செய்கைகளை விட்டும் தூய்மையாக்கி வைப்பதற்காகவும்; இன்னும் அன்னாருக்கு ஈருலக வாழ்க்கைக்கு வேண்டிய நல்லொழுக்க வணக்க முறைகளைக் கற்பித்துக் கொடுப்பதற்காகவும்; மேலும் சத்தியமறையாம் திருக்குர்ஆன் ஷரீபை அந்தப் புனிதர் மூலம் வெளிப் படுத்தி அதன் கட்டளைப்படி நம்மவர்களை வழுவாது ஒழுகிவரச் செய்வதற்காகவுமேயாகும்.

நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு இறைவனால் அருளப்பட்ட பரிசுத்த வேதத்தில் பூர்வகாலத்து நபிமார்களுக்கருளிய 'ஸுஹுஃபு' என்ற கட்டளை ஏடுகளிலிருந்தும், வேதங்களிலிருந்தும் பல வசனங்களையும், நபிமார்களில் சிறந்த 'முறுஸல்'கள் பலரின் சரிதங்களையும், அவனது நல்லடியார்களின் குணாதிசயங்களையும், இந்த உலக வாழ்க்கையின் நன்மை தீமைகளின் பிரதிபலனான இன்ப துன்பங்களை அனுபவிக்கும் மறு உலக வாழ்க்கையின் வரலாறு களையும் எடுத்துக்காட்டி, அவனது அடியார்களாகிய நாம் நடந்து கொள்ள வேண்டிய நன்னடத்தைகள் இன்னின்னவை என்று ஏவியும், தீயவற்றை விளக்கிக்காட்டி, அவற்றை விட்டொழிக்க எச்சரித்தும், இன்னும் பல்வேறு மகத்தான நீதி நியமங்களையும் சட்ட திட்டங்களையும் எந்தக் காலத்துக்கும் பொருந்திய வேதங்களாக அமைத்துள்ளனர்.

'தவ்ராத்' 'ஸபூர்' 'இஞ்சீல்' என்ற முந்திய மூன்று வேதங் களையும், 'ஸுஹுஃபு'களையும் தன்னகத்தே கொண்ட திருக்குர்ஆன் மஜீதில், இறைவன் ஒவ்வொரு விஷயத்தையும், தெளிவான முறையில் போதித்திருக்கின்றான்.

பொதுவாக அல்லாஹு தஆலா எந்தவகை வணக்கங்களைத் தன் அடியாருக்கு ஏவுகிறானோ, அந்த வணக்கங்களைத் தானும் செய்வதாகக் காணப்படவில்லை; ஆனால், நமது நபிகள் கோமான் முஹம்மது (ஸல்) அவர்கள்மீது சொல்லப்படும் 'ஸலவாத்து' எனும் இந்த ஒரு சிறந்த செயலைத்தான், தானும் 'தனது அமரர்களும் செய்வதாகவும், அந்த வணக்கத்தில் நம்மைப் பங்கு கொள்ளும்படி ஏவியும் இருக்கின்றான்'. அவ்வாறு ஏவியுள்ள இந்த மேன்மைமிக்க



ஆயத்தின் வசனங்களில் 'இன்ன' என்ற திடமான சொல்லைச் சுட்டி **'இன்னல்லாஹ'** என்று தன்னை முற்படுத்தியும், இரண்டாவதாக **'வமலாஇகதஹு'** என்று அமரர்களை அதில் சேர்த்தும், மூன்றாவதாக **'யாஅய்யுல்லதீன ஆமனூ'** என்று முஃமின்களை அன்பு மயமாகக் கூவி அழைத்தும், **ஸல்லூ அலைஹி வஸல்லிமூ தஸ்லீமா'** **"நீங்களும் நபிமீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லிக் கொண்டிருங்கள்"** என்று அழைக்கின்றான். இதனை ஆராய்ந்து நோக்குவோமாயின், நம்மிறைவன் நம்மீது எத்துணை பிரியமும், அருமையும், கிருபையும் பாராட்டுகிறான் என்பதும், இவையாவும் நம் நன்மைக்கேயன்றி வேறில்லையென்பதும் தெளிவாக விளங்கும்.

இதனை ஓர் உதாரணத்தின் மூலம் நாம் விளங்கிக் கொள்ளலாம். அதாவது: தாய் தன் குழந்தையைப் பராமரிக்கும் விஷயத்தில் முதலில் உணவு ஊட்டத் தொடங்கும்போது, அந்தக்குழந்தைக்கு அந்த உணவின் அருமையும், அவசியமும் இன்னதென உணரத்தக்க அறிவு இருப்பதில்லை. உண்ணும்விதம் எவ்வாறு என்பதும், அதற்குத் தெரிவதில்லை. அதனால் அந்தச்சிசு அந்த உணவை ஏற்காமல் தட்டிவிடுகின்றது. அப்போது தாய், அந்தக் குழந்தையின் பார்வையில் தான் உண் ணுவதுபோல் சுவைத்துக் காட்டியும், பக்கத்திலுள்ள மற்றக் குழந்தைகளுக்கு ஊட்டிக்காட்டியும், தனது குழந்தைக்கு ஊட்டு கின்றாள். உடனே அந்தக் குழந்தையும் உணவை ஏற்றுக் கொண்டு விடுகிறது; உணவு தனது ஜீவியத்திற்கு அவசியம் என காலக்கிரமத்தில் அறிந்த அந்தக் குழந்தை உணவு நேரம் வரும்போது தானாகவே விரும்பிக் கேட்கத் தொடங்குகிறது. இவ்வாறே அறியாமையால் தவறும் நம்மீது, அல்லாஹ்வும் கிருபை கூர்ந்து, நாயகம் (ஸல்) அவர்கள்மீது நாம் ஸலவாத்தும் ஸலாமும் ஓதி, அளவற்ற நன்மைகளை அடையும் பொருட்டு இந்த வசனத்தில் தானும் தனது அமரர்களும் ஸலவாத்து ஓதுவதாக அன்பு வழியால் போதிக் கின்றான்.

'நபியுல்லாஹ்' மீது சொல்லும் 'சலாமா'னது 'ஸலவாத்து'டன் இணைந்ததாயிருப்பதால் **'இன்னல்லாஹவமலாயிகதஹு'** என்ற இந்த திருவசனத்தில் ஸலவாத்துடன் சலாமையும் சேர்த்துச் சொல்லும்படி நம்மை ஏவினதல்லாமல் **'தஸ்லீமா'** என்ற ஒழுக்கமுறையையும் வழங்கியுள்ளான்.

மிஃராஜின்போது தன்னுடைய ஹபீபுக்கு 'அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்நபியு வரஹ்மதுல்லாஹிவபரகாத்துஹு' என்பதைக் காணிக்கையாகவே ஆக்கினானல்லாமல் வேறில்லை. சலாமை காணிக்கையாக ஆக்கினதின்சாரம், அது எல்லாவற்றிலும் ஏற்றமான தாகும் என்பதே.

## அல்லாஹு கூறும் ஸலவாத்து

'அல்லாஹு' தானே ஸலவாத்துச் சொல்லுவதின் கருத்தாவது:- அந்த இறையோன், நாயகம் (ஸல்) அவர்களுக்கும், அவர்கள் சமூகத்தாருக்கும் செய்யும் (ரஹ்மத்) கருணையாக இருக்கும்; நாயகம் (ஸல்) அவர்களுக்கு விண்ணேற்றம் (மிஃராஜ்) நிகழ்ந்த காலத்தில் அவர்கள் 'லாமாகான்' என்ற இடமற்ற இடத்தில் நின்றுகொண்டு, என் ரப்பு (நாயன்) எங்கே? என்று வினவினார்கள். உடனே ''ரப்பு தொழுகின்றான்'' என்று பதில் வந்தது. இதைப்பற்றி மெய்ஞ்ஞானி (ஆரிபீன்)களுக்கிடையில், ரப்பு தொழுவது யாருக்காக? என பிரச்சினை எழவே ''அல்லாஹு தொழுவதென்பதன் கருத்து: அவன் தன் அடியார் மீது செய்யும் அளவிடற்கரிய கருணையாக இருக்கும்'' என்று விளக்கம் சொல்லப்பட்டது.

## அமரர்கள் கூறும் ஸலவாத்து

அமரர்கள் ஸலவாத்து ஓதுகிறார்கள் என்றால் அதன் கருத்து:நபிகள் நாதரைப் பின்பற்றி ஒழுகும் சமூகத்தாருக்குக் கிருபை செய்யும்படி அல்லாஹுவிடம் துஆச் (வேண்டுதல்) செய்வதும், பிழை பொறுக்கத் தேடுவதும், எப்பொழுதும் 'ஷஹாதத்து' கலிமா கூறிக் கொண்டிருப்பது மாகும். இதனை வலியுறுத்த இங்கு ஓர் சம்பவம் குறிப்பிடத்தக்கது.

நபி பெருமான் (ஸல்) மிஃராஜின்போது அல்லாஹுவின் தீதாரை (திருக்காட்சி) கண்ணுற்றதும், **''அத்தஹிய்யாத்துல் முபாரகாதுஸ் ஸலவாத்துத் தையிபாத்து லில்லாஹி.** 'மணமும் பிரார்த்தனையும், பொலிவுமுள்ள காணிக்கைகள் அல்லாஹ்வுக்கே உரித்ததாகும்' எனக் கூறியபோது இறைவன்: **''அஸ்ஸலாமு அலைக்க அய்யு ஹன்னபிய்யு வரஹ்மதுல்லாஹிவபரகாத்துஹு.''** ''நபியே! உங்கள்மீது அவனது அன்பும், கருணையும் பொலிவுகளும்



உண்டாவதாக''' என மொழிந்தான். அப்போது அருள் பிழம்பாய் அவதரித்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் **''அஸ்ஸலாமு அலைனாவஅலா இபாதில்லா ஹிஸ்ஸாலிஹீன்.''** ''எங்கள்மீதும் சன்மார்க்கத்தைப் பின்பற்றி நடக்கும் நல்லடியார்கள்மீதும் ஈடேற்றம் உண்டாவதாக'' என வேண்டிநின்றார்கள். இந்தப்புனித வசனங்களைச் செவியுற்ற அமரர்கள் ஒவ்வொருவரும் ஒரேமுகமாக: **அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹுவ அஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரசூலுல்லாஹி'',** ''வணங்குதற்குரியவன் அல்லாஹுவைத் தவிர வேறு நாயனில்லை; முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹுவின். திருத்தூதர்; என்றும், சாட்சி கூறுகிறேன்'', என்று மொழிந்தனர். இதனையறிந்த எல்லா அமரர்களும் **''அல்லாஹும்ம ஸல்லி அலா ஸய்யிதினா முஹம்மதின்''.** ''இறைவா! ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள்மீது ஸலவாத்து என்னும் கருணையைப் பொழிவாயாக'' என்று வேண்டிநின்றார்கள். இந்த விஷயத்தையே நமது இறைவணக்கமாகிய தொழுகையின் முடிவில், ஒப்பற்ற காணிக்கையாக அமைக்கப்பட்டிருக்கின்றது. இதன் பொருட்டே நாம் தொழும் தொழுகையை மிஃராஜாகக் கணிக்கப்பட்டுள்ளது.

**'அஸ்ஸலாத்துமிஃராஜுல் முஃமினீன்'** தொழுகை முஃமின் (விசுவாசி)களின் மிஃராஜாகும். என்று நமதருமை நாயகம் (ஸல்) திருவாய் மலர்ந்துள்ளார்கள்.

## நாம் கூறும் ஸலவாத்து

நாம் கூறும் ஸலவாத்தின் கருத்தாவது: அல்லாஹ் நமது பிழைகளைப் பொறுத்து அவன் அருளைப் பெறவும், நபி பெருமான் (ஸல்) அவர்களின் மஹப்பத்தை பெருக்கி இந்த உலக வாழ்வும், மறுவுலக மோட்ச கதியும் அடைவதற்கும் வேண்டி, உள்ளச்சத்துடன் மனமுவந்து மன்றாடிக் கேட்கும் பிரார்த்தனையாகும். அஃதாவது:

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ

**''இறைவா! உனது வலுப்பமிகுந்த ரஹ்மத்தென்னும் கருணையை எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள்மீது சொரிந்தருள்வாயாக'';** என்று பிரார்த்திப்பதாகும்.

ஸலவாத்துச் சொல்வதற்கு அருகதையுடையவன் அல்லாஹ்ஹுவான எஜமானனே அல்லாது, வேறு யாரும் தகுதியுடையவராகார். இங்ஙனமிருக்க, அடியாராகிய நாம் கருணை புரிவதற்கும் சாந்தி கொடுப்பதற்கும் எங்ஙனம் சாலும்? நாம் இவை இல்லாதவனும், அருகதையற்றவனுமாக இருப்பதால்தான், **'அல்லாஹும்ம ஸல்லிவஸல்லிம் அலா ஸய்யிதினா முஹம்மதின்'** சர்வலோக ரெட்சகா! எங்கள் நாயகம் 'முஹம்மது முஸ்தபா ரசூல் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம்' அவர்கள்மீது, உன்னுடைய 'ஸலவாத்து' என்னும் ரஹ்மத்தையும், ஈடேற்றத்தையும் சொரிந் தருள்வாயாக'' என்று இறைஞ்சுவது தான் நாம் கூறும் ஸலவாத்து.

ஒருவனுக்கு ஒரு பொருளில் பிரியமிருந்தால், அந்தப்பொருள் அவன் மனத்தை விட்டகலாமல் இருந்துகொண்டே இருப்பது போல், நபி பெருமான் (ஸல்) அவர்கள்மீது 'ஸலவாத்து'ச் சொல்லிக் கொண்டே இருப்பதில் அல்லாஹ்வுடையவும், அவன் உகந்த ரசூலுடையவும் பிரியம் எப்போதும் நமக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பது தெளிவாகும். நமக்கு அல்லாஹ்வினிடமிருந்து வரக்கூடிய ரஹ்மத்தையும் அன்பையும் பெறுவதற்கு, நமக்கும் இறைவனுக்கும் மத்தியில் மூன்றாவதான ஒரு இணைப்பு அவசியமாகின்றது. அந்தச் சம்பந்தமே ஆண்டவனின் ரஹ்மத்தை நமக்கு அருளும்படி செய்கின்றது. நபிகள் பெருமான் (ஸல்) அவர்கள் நமக்கும் இறைவனுக்கும் மத்தியில் ஒப்பற்ற பிரதிநிதி போன்று, மேற்படி தொடர்பை நிறைவேற்றி வைக்கிறார்கள். இந்த அடிப்படையிலேயே அல்லாஹ்வினுடைய அருளைப் பெறுவதற்கு ஸலவாத்தும் ஸலாமும் எப்பொழுதும் நாம் ஓதிவர ஏவப்பட்டுள்ளோம்.

**''நபியே! உம்மை யாம் அகில உலகத்தாருக்கு ஓர் அருள் பிழம்பாகவே அனுப்பியிருக்கிறோம்.''** (குர்ஆன்)

''**நான்** பொக்கிஷதாரும் பங்கிடுவோனுமாகவே இருக்கிறேன்; அல்லாஹுதஆலா கொடுக்கிறவனாக இருக்கிறான்,'' என்று இறைவனின் திருத்தூதர் (ஸல்) மொழிந்துள்ளார்கள்.



## ஸலவாத்து ஓதுவதில் இரண்டு வகையுண்டு

**ஒன்றாவது:-** நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை மகத்துவத்தை நன்கு அறிந்து ஓதுதல். இறைவன் கூறுகிறான்:-

**நபியே! நிச்சயமாக நாம் உம்மை** (மனிதர்களுக்கு)**ச் சாட்சியாகவும், நன்மாராயம் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பிவைத்திருக்கிறோம். அன்றி அல்லாஹ்வினுடைய உத்தரவுப் பிரகாரம்** (மனிதர்களை நீர்) **அவன்பால் அழைப்பவராகவும், பிரகாசிக்கும் ஒரு தீபமாகவும்** (இருக்கின்றீர்).
***(33-45,46)***

''**நான்** அல்லாஹ்வின் ஒளியில் நின்று படைக்கப் பட்டிருக்கிறேன். வஸ்துக்கள் அனைத்து'ம் என்னுடைய ஒளியில் நின்றும் படைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும்: ஆதிபிதா ஆதம் (அலை) அவர்கள் மண்ணுக்கும் தண்ணீருக்கும் இடையில் இருந்தபோது (உருவாவதற்கு முன்னரே) நான் நபியாக இருந்தேன்'' என்பதாகும். (இதற்கேற்ப இங்கு ஓர் சம்பவம் சித்தரிக்கப்படுகிறது.)

உலக பிதா ஆதம் நபி (அலை) அவர்கள் சுவனபதியில் இருக்கையில், அதன் வாயிலில், **''லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி''** என்ற புனித வசனம் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டு ''இறைவா! உனது வலுப்பமிக்க நாமத்தோடு **'முஹம்மது'** என்ற நாமமும் இணைக்கப்பட்டிருக்கிறதே, அந்த நாமதத்திற்குரியவர் யார்? எனக்கு அறிவிப்பாயாக'' என வேண்டினார்கள். அதற்கு இறைவன், ''ஆதமே! **'முஹம்மது'** என்ற பெயருடையவர் உமது சந்ததியிலிருந்து எனது ஹபீபாகவும் இறுதி ரசூலாகவுமாவார்''; என அறிவித்தான். அதற்கு ஆதம் அவர்கள் (அந்த முஹம்மது (ஸல்) அவர்களின் தரிசனையில் விருப்பம் கொண்டவர்களாக) ''இறைவா! நான் அவரை இப்போது இந்த சுவனபதியில் தரிசிக்க விரும்புகிறேன். நீ எனக்கு அன்னாரைக் கண்டுகளிக்க அருள்புரிவாயாக'' என்று மன்றாட, அந்த வேண்டு கோளுக்கிணங்கி, அவனது ஹபீபாகிய நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுடைய (ஜமால்) அழகை ஆதம் நபி அவர்களுடைய இரண்டு கைப் பெருவிரல்களில், களங்கமற்ற கண்ணாடியின் ஒளியைப் போன்று தோற்றுவித்தான்; உடனே ஆதம் நபி அவர்கள், 'இஷ்கு' (காதல்) அதிகரித்தவர்களாக, தங்களது இரண்டு பெருவிரல்களையும் முத்தி **'யாகுர்ரதஜனைய'** (என்

இருகண்ணின் குளிர்ச்சியே!) என மொழிந்ததோடு இரண்டு கண்களின் மீதும் தடவிக் கொண்டார்கள்.

சுவனபதியில் நிகழ்ந்த இந்தச்சம்பவத்தை ஸய்யிதினா ரூஹுல் அமீன் 'ஜிப்ரீல்' (அலை) அவர்கள் நம் நபி (ஸல்) அவர்களுக்கு அறிவித்தபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் 'பாங்கு' சொல்லுகையில் **'அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்'** என்ற எனது நாமத்தைக் கேட்பவன் **'மர்ஹபன் பிஹபீபி வகுர்ரத் ஐனைய பிக யாரசூலல்லாஹ்'** என்று சொல்வதோடு, தனது இரு பெரு விரல்களை முத்தி, இரண்டு கண்களிலும் தடவுவானாகில், அவனுக்கு என்னுடைய மஹப்பத்தும் , பரக்கத்தும் அதிகப்படுமென மொழிந்தார்கள். இதனைக் கையாண்ட பெரியார்கள் இந்தவிதம் செய்து வருபவர்களின் கண்ணொளி கெடாது என மொழிந் திருக்கின்றார்கள்; இதனால் முற்கூறியவாறு தடவி முத்துயிடுதல் உம்மத்தே முஹம்மதிய்யாவுடைய செயலாகும்.

இதை ஆட்சேபனை செய்த வஹ்ஹாபிகட்கு மறுப்புக் கொடுக்கும் முகமாக, சென்னையில் ஹிஜ்ரி, 1341 ரஜப் 15-ம் நாள் முப்தி, தமீம் ஹஸ்ரத் அவர்கள் தலைமையில், 19. (சுன்னத் வல்ஜமாஅத் விற்பன்னர்) உலமாக்கள் அளித்த 'பத்வா'வில்:- **'அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்'**, என்று 'பாங்கில்' சொல்லும்போது, அதைக் கேட்பவர்கள் தம் இரு பெருவிரலையும் கண்ணில் தடவி அவற்றை முத்தமிடுவது 'சுன்னத்து' என்றும், பல இமாம்களின் ஆதாரங்களை எடுத்துக் காட்டியும், இவ்வாறு செய்வதே சுன்னத்து வல்ஜமாஅத்தின் கொள்கை என்றும் மார்க்கத் தீர்ப்பு அளித்துள்ளார்கள். 'இகாமத்தில்', அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் என்று சொல்லும்போது, அவ்வாறு செய்து முத்தமிட அவசியமில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

பாங்கு, இகாமத்துக்கு ஸலவாத்தைச் சொல்வதும், பாங்குக் கிடையே பேசாமலிருப்பதும், நடந்து கொண்டிருப்பவர் நின்று விடுவதும், படுத்திருப்பவர்கள் எழுந்து உட்காருவதும், பாங்கு சொல்பவரின் முகத்தைப் பார்ப்பதும், ஒவ்வொரு வார்த்தைக்கும் பதில் சொல்வதும், பாங்கை நிறுத்தியும், இகாமத்தை விரைந்தும் சொல்வதும் விரும்பத்தக்கதாகும்.



அல்லாஹ்வையும் நபி பெருமானார் (ஸல்) அவர்களையும் சங்கைப்படுத்தும் மேற்கண்ட செய்கைகளை, ஆட்சேபனை செய்வதும், அதுபற்றி தர்க்கம், குதர்க்கவாதம் புரிவதும் விரும்பத்தகாத செயல்களாகும்.

مَنْ تَكَلَّمَ عِنْدَ الْأَذَانِ يَتَلَجْلَجُ لِسَانُهُ عِنْدَ الْمَوْتِ

**''பாங்கு சொல்லும்போது, எவரேனும் பேச்சுப் பேசுவாரே யானால், மரணவேளையில் அவரது நாக்கு** (கலிமாமொழிய)**த் தடுமாறும்'' என்ற நபி மொழி கவனிக்கத்தக்கது.**

**த**வாபு (பலனை) நாடி பாங்கு சொல்பவர்கள் கபுரிலிருந்து எழும்பும்போது, பாங்கு சொல்லிக்கொண்டே வெளியாகுவார். (ஹதீது)

ஆகவே, நபிபெருமான் (ஸல்) அவர்களின் மகத்துவம், எத்துணை சிறப்பு மிக்கது என்பதை உணரக்கடவோமாக.

**இரண்டாவது:-** நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்புகளை விளங்கிக் கொண்டதன் காரணமாக, அவர்கள் மீது 'இஷ்கு (காதல்) அதிகரித்து நம்முள்ளிருந்து பொங்கி எழும் பேரானந்தமே நாவிலிருந்து வெளியாகும் ஸலவாத்தாகும்.

நபிபெருமான் (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்:-

''**எ**னக்கு அல்லாஹ்வோடு சில நேரங்கள் ஏற்படும்; அந்த நேரங்களில் அல்லாஹுவை விட்டகலாத அமரர்களோ முறுஸல்களோ என் நிலைக்குச் சற்றும் நிகராகமாட்டார்கள்.'' என்பதாம்.

(நபியே!) **''நிச்சயமாக உம்முடைய கீர்த்தியை நாம் உயர்த்தினோம்.''** **(94-4)**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (கியாமத்) இறுதி நாள்வரை தோன்றுகிற யாவருக்கும்,நபியாகவும் கிருபையாளராகவும் இருக்கின் றார்கள். அவர்களுக்கென கூறப்படும் மாண்புமிக்க இந்த மகத்தான ஸலவாத்தை, அல்லாஹுவும், அவனது அமரர்களும் மொழிந்து

கொண்டேயிருப்பதோடு, நமது ஆதிபிதா ஆதம் நபி (அலை) அவர்களுக்கும் கற்பித்துக் கொடுக்கப்பட்டதால், அவர்களும் இதை ஓதி தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்து கொண்டதுடன், அல்லாஹ்வின் அருளையும் பெற்று கொண்டார்கள். அவர்களுக்குப் பின் தோன்றிய நபிமார்களுக்கும் இறைவன் ஸலவாத்துஓதும்படி கட்டளையிட்டான். அன்றியும் நம் நபி பெருமான் (ஸல்) அவர்களின் திருப்பெயர் முன்னைய ஸுஹ்புகளிலும், வேதங்களான ஸபூரில் **'மீதமீத'** என்றும், தவ்ராத்தில் **'தாபதாப'** எனவும், இஞ்சிலில் **'பாருகலீத்'** என்றும் பொறிக்கப்பட்டிருந்தது. இந்த மேன்மை மிக்க நாமங்களை அந்தந்த வேதத்துடைய நபிமார்களும், அவர்களைப் பின்பற்றிய சகாக்களும் கண்ணியப்படுத்தியும், மரியாதைகள் செய்தும் கொண்டாடியுமே வந்தனர். இந்த விபரங்களை சதகதுல்லா அப்பா அவர்கள் தமது வித்ரிய்யாவில் விளக்கம் தருகிறார்கள். எனவே, நாம் நமது நபிகள் பிரான் முஹம்மது முஸ்தபா ரசூலே கரீம் (ஸல்) அவர்கள்மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறி, அல்லாஹுவின் அருளைப் பெற வேண்டியவர்களாகவே இருக்கின்றோம்.

தொழுகைக்கு, அகம் புறம் சுத்தமாயிருப்பது போன்று, பெருமானார் (ஸல்) அவர்கள்மீது ஸலவாத்துக் கூறுவதற்கு சுத்தம் அவசியமில்லை என்றாலும், ஸலவர்த்துச் சொல்பவருக்கு அதன் பலன் கிட்டாமல் போகாது; ஆயினும் அகம் புறம் சுத்தமாயிருப்பது மிகமிக நல்லது.

''**நீ**ங்கள் என்மீது ஸலவாத்துச் சொல்வது போன்று, மற்றும் நபிமார்கள்மீதும், ஸலவாத்துக் கூறுங்கள். ஏனெனில், என்னை இறைவன் நபியாகவும், ரசூலாகவும் அனுப்பியது போல், அவர்களையும் அந்த அந்தக் காலங்களில் அனுப்பியிருந்தான்.''

(ஹதீஸ்)

ஆதி பிதா ஆதம் (அலை) அவர்கள் முதல், நமது நாயகம் (ஸல்) அவர்கள் வரை 1,24,000 நபிமார்களுண்டென்றும், அதில் சிரேஷ்ட மானவர்கள் 313 'முறுஸல்'கள் ஆவரென்றும், அந்த முறுஸல்களில், 'ஆதம்' நூஹு, இபுறாஹீம், 'மூஸா' 'ஈஸா' முஹம்மது (ஸல்) ஆகிய அறுவர்களும் 'உலுல் அஸ்மி' என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்களாவ ரென்றும், இவர்களில் எவரது நாமத்தைச் செவிமடுத்தாலும்,



عَلَيْهِ الصَّلٰوةُ وَالسَّلَامُ

**'அலைஹிஸ் ஸலாத்து வஸ்ஸலாம்'** என்று கூறவேண்டும் என்றும் ஏவப்பட்டுள்ளோம்.

''**நீ**ங்கள் ஸலவாத்து ஓதும்போது எனது கிளைஞர்களான ஆல், அஸ்ஹாபுகளையும் அதில் சேர்த்து ஓதுங்கள்.'' என்றிருப்பதால்:

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلِّمْ

**''அல்லாஹும்ம ஸல்லி அலா ஸய்யிதினா முஹம்மதின் வ-ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லிம்''** எனக் கூறவேண்டும்.

'ஆல்' என்பது ரசூல் நாயகம் (ஸல்) அவர்கள் சுற்றத்தார் களையும், (அவர்கள் மகளார் வயிற்றில் கியாமநாள் வரை தோன்றும் சாதாத்து மார்களையும் குறிக்கும்.) 'ஸஹ்பு' என்பது தோழர்களைக் குறிக்கும்; இந்த இரு கூட்டத்தாரும் நபி பெருமான் (ஸல்) அவர்களின் தீனைப் (மார்க்கம்) பின்பற்றி, அவர்களோடு ஒத்துழைத்து வந்தவர்களையே சாரும். ஆனால், நபி பெருமான் முஹ'ம்மது (ஸல்) அவர்களைத் தம் ஜீவியத்தில் நேரில் ஒரு முறையாவது, கண்டவர்களைத்தான் 'ஸஹாபா' என அழைக்கபபடும். இவர்களில் மிகச் சிறந்தவர்கள், அபூபக்கர், உமறு, உதுமான், அலி (ரலி-மா) ஆகிய இந்த நால்வரையும் 'குலபாவுர் ராஷிதீன்' என அழைக்கிறோம். இவர்களும் இவர்களோடு ஸஃது, ஸாது, தல்ஹா, ஸுபைரு, ஆமிரு, அப்துர் ரஹ்மான் ஆகிய அறுவரும் சேர்ந்த இந்தப் பதின்மரும் ''அஷ்ரதுல்முபஷ்ஷரா'' சுவனபதியில் என்னுடன், எப்போதும் இருப்பவர்கள்'' என நபியுல்லாஹ்வால், வாக்களிக்கப்பட்டு, சிறப்புப் பெற்றவர்களாவர். முன்னர் கூறிய பதின்மரோடு 303 ஸஹ்புகளும் சேர்ந்து, ஆக 313 ஸஹாபாக்களையே 'அஸ்ஹாபுல் பத்ரு' என்று சிறப்பாகக் கூறுகிறோம்.

நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் காலத்தில், அவர்களைக் கண்ணாரக் கண்டு, அன்னாரைப் பின்பற்றி நடந்த ஸஹாபாக்கள் 1,24,000 பேருள்ளதாக இமாம்களால் கணிக்கப்பட்டுள்ளது.

**'ஆல்' 'அஸ்ஹாபி'** என்ற பொதுவான சொல்லைச் சலவாத்தில் உச்சரிக்கும்போதும், அதனைச் செவிமடுக்கும்போதும், மேலே குறிப்பிட்டோர்களைப் பற்றிய ஞாபகமிருத்தல் அவசியமாகும். அன்றியும்:-

காபிர்கள் இறந்தபின் அவர்களுக்காக 'துஆ' கேட்பது (அவர்கள் பெற்றோராக இருந்தாலும் சரியே) கூடாது' என்று குர்ஆன் ஷரீப் தடுத்துள்ளது. ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து அவர்களுடைய பெற்றோர்களுக்காக 'துஆ' கேட்கும்படி அல்லாஹு குர்ஆனில் ஏவுகின்றான். இதிலிருந்து நாயகம் (ஸல்) அவர்களின் பெற்றோர்கள் (காபிர்கள் அல்ல) முஸ்லிம்களேயாவர் என்பதால், அவர்களின் நாமங்களைக் கேட்கும்போதும் 'ரலியல்லாஹு அன்ஹு' எனக்கூறி கண்ணியப்படுத்த வேண்டும். அன்றியும்:-

ஸய்யிதுனா இப்றாஹீம் கலீல் (அலை) அவர்களின் புதல்வர் ஸய்யிதுனா 'இஸ்மாயீல்' (அலை) அவர்களின் சந்ததிகளில் **'அத்னான்'** கிளையில் **நபிகள் நாயகம் (ஸல்)** வரையுள்ள 20 தந்தைமார்களின் நாமங்களை இமாம் ஜஃபர்ஸாதிக் (ரலி) அவர்கள் கண்ணியப்படுத்திக் கூறியிருப்பதால் நாம் அவைகளைத் தெரிந் திருப்பது அவசியமாகும். அவர்களாவன:-

**முஹம்மது முஸ்தபா ரசூல் (ஸல்)** இப்னு, 'அப்துல்லாஹ்', 'அப்துல்முத்தலிபு', 'ஹாஷிம்', 'அப்துல்முனாபு', 'குஸய்யி', 'கிலாபு', 'முர்ரது', 'கஃபு', 'லுவய்யி', 'காலிபு', 'பிஹ்ரு', 'மாலிக்கு', 'நளறு', 'கினானா', குஸெய்மது', 'முத்ரிக்கு', 'இல்யாஸ்', முளறு', 'நிஸாறு', 'முஅத்து', 'அத்னான்' என்பதே. இதற்கு முந்தியவர்களை 'இஸ்மாயீலிய்யா' என்று அழைக்கப்படும்.

## 'முஹம்மது' 'அஹ்மது என்ற திருநாமத்தின் மகிமை

**'முஹம்மது'** (புகழுக்குரியவர்.) இந்த நாமம் பெருமானாரின் பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்களால், பெருமானார் பிறந்ததும் சூட்டப்பட்டது.

**'அஹ்மது'** (மிகப் புகழ்வாய்ந்தவர்) என்ற இந்தத் திரு நாமத்தை நபி ஈஸா (அலை) அவர்கள் மொழிந்து, நன்மாராயம் கூறியதாக நம்



திருமறையில் காணப்படுகிறது. முன்னர் கூறிய இரு நாமங்களைப் பற்றியும் இறைவன் கூறுகின்றதாவது:-

"எனது வல்லமையின்மீது பிரமாணமாக, ஹபீபே! முஹம்மதே! உங்களுடைய பெயரைக் கொண்டு பெயர் வைக்கப் பட்டவனை நான் நெருப்பைக் கொண்டு வேதனை செய்ய மாட்டேன்"; இன்னும், "எவனொருவனின் பெயர், 'முஹம்மது' அல்லது 'அஹ்மது' என்றிருக்குமாயின், அவன் நரகம் புகவு மாட்டான்; என்பதை நான் என் இருதயத்தில் (நப்ஸு) விதியாக்கிக் கொண்டேன்." (ஹதீது குதஸி)

"என்மீது அளவற்ற பிரியம் கொண்ட ஒருவன், என் நாமத்தால் பரக்கத்துப் பெறுவதற்காக, தன் பிள்ளைகளுக்கு 'முஹம்மது' என்று பெயர் வைப்பானாகில், அவனும், அவனால் பெயர் வைக்கப்பட்ட பிள்ளையும்,சுவனபதியில் இருப்பார்கள்." இன்னும், "யாரேனும் ஒருவனுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்து, அவற்றுள் ஒன்றுக்காவது 'முஹம்மது' அல்லது 'அஹ்மது' என்று பெயர் சூட்டவில்லை யாயின், திட்டமாக அவன் மடையனாகி விட்டான்." ஒருவகையில், "நிச்சயமாக அவன் என்னை வெறுத்து விட்டான்" எனவும் நமது நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இன்னும்,

"எவன் ஒருவன் தன் மனைவியின் கர்ப்பத்திலிருக்கும் சிசு ஆண் மகவாகவிருக்க வேண்டுமென்று நாடுகிறானோ? அவன் மனைவியின் வயிற்றில் கையை வைத்து, இந்தக் குழந்தை ஆணாகப் பிறக்குமாயின் 'முஹம்மது' என்று பெயர் வைப்பேன்" என்று சொல்வானேயானால் அல்லாஹு அவன்மீது இரங்கி, அந்த நாட்டத்தைப் பூர்த்தி செய்வான்;" என்றும் காணப்படுகிறது.

நபிபெருமான் (ஸல்) அவர்கள் சமூகத்தில், ஒருநாள் ஒரு பெண் வந்து 'தான் பெற்றெடுக்கும் பிள்ளைகள் அத்தனையும் ஜீவித்திருப்ப தில்லை' என்று வருந்தி முறையிட்டபோது, "**இனி நீ பெறப்போகும் பிள்ளைக்கு 'முஹம்மது' என்ற பெயரை வைப்பேன், என அல்லாஹ்வுக்காக விதியாக்கிக்கொள்**" எனக் கூறினார்கள். அப்படியே அந்தப் பெண் நிர்ணயித்துக் கொண்டாள். அதன் பின்னர் அவள் பெற்ற பிள்ளைகள் அத்தனையும் ஜீவித்திருந்தன.

**'முஹம்மது'** அல்லது **'அஹ்மது'** என்று பெயர் வைத்து அழைக்கப்படுபவனுடைய பெயர் விசேசத்தால், அவனோடு கூடியிருந்து அருந்தும் உணவுப் பண்டங்கள் பொலிவு பெறும் என்றும், அதுபோலவே நலமான காரியங்களில் அந்தப் பெயருடையோனிருந்தால் பரக்கத்தும் வெற்றியும் ஏற்படுமென்றும், இந்த மகத்துவத்தால் **'முஹம்மது'** என்ற நாமத்தையும், அந்த நாமமுடையோனையும் வலுப்பத்துடன் பெருமைப்படுத்துவது அவசியம் என்றும், கற்ற மேதைகள் கூறுகின்றனர்.

**''அப்ளலுல் அஸ்மாஇ மாசும்மிய பில் மஉபூதி தும்மபில் மஹ்மூதி.''** என்ற ஹதீதின்படி, பெயர்களிலே மிகவும் சிறந்தவை, வணங்கப்படுபவனை சம்பந்தப்படுத்தி, அதாவது, 'அஸ்மாவுல் உஸ்னாவை'ச் சேர்த்து, 'அப்துல்லாஹ்' 'அப்துர்ரஹ்மான்' 'அப்துல்கரீம்' என்பவைபோல, புகழப்பட்ட நபியுடைய பெயரைச் சம்பந்தப்படுத்தி வைப்பதுமாம்.

நாயகத்திருமேனியின் அடிமை என்ற கருத்தில் 'அப்துன் நபீ', 'அப்துர் ரசூல்', 'குலாம் ரசூல்', 'குலாம் நபி' என்று பெயர் வைத்துக் கொள்வதை 'சுன்னத் வல்ஜமாஅத்' உடைய அறிஞர்கள் அழகாகக் காண்கிறார்கள்.

## ஸலவாத்து ஓதுவதின் வரிசை

நபிகள் கோமான் (ஸல்) அவர்கள், தங்கள்மீது சதாவும் ஸலவாத்து ஓதி வருவதின் சிறப்புகளை பற்றிப் பின்வருமாறு மொழிந்துள்ளார்கள்:

**1.** ''**எ**வன் ஒருவன் என்மீது ஒரு தடவை ஸலவாத்துச் சொல்கிறானோ? அவன்மீது அல்லாஹுத பத்துத் தடவை ஸலவாத்துச் சொல்வான். ஒருவன் பத்துத் தடவை ஸலவாத்துச் சொல்வானானால், அல்லாஹுத அவன்மீது நூறுதடவை ஸலவாத்துச் சொல்வான். நூறு தடவை ஸலவாத்துச் சொல்வானானால், அல்லாஹுத அவனின் இரண்டு கண்களுக்கிடையில் முனாபிக் தனத்தை விட்டும், நரகத்தை விட்டும், உரிமை பெற்றான்; என்ற சீட்டை எழுதி இறுதி நாளில் அவனை ஷுஹதாக்களின் கூட்டத்தில் சேர்த்து வைப்பான்; ஆதலால், முஃமின்களே! என்னைத் திக்ரு செய்யும்போதெல்லாம், என்மீது ஸலவாத்தும் ஸலாமும் அதிகமாக ஓதுங்கள்; அது உங்களுடைய பாவங்களை அழிக்கக் கூடியதாகவிருக்கிறது.''



**2.** **எ**ன்னிடம் ஜிப்ரீல், மீக்காயீல், இஸ்ராபீல், இஸ்ராயீல் (அலை) ஆகிய நான்கு வானவர்களும் வந்தார்கள். முதலாவதாக: ஜிப்ரீல் (அலை) அவர்கள் என்னை நோக்கி, ''யாரேனும் ஒருவர் தங்கள்மீது பத்துத் தடவை ஸலவாத்துக் கூறுவாராயின், நான் அவரது கையைப் பிடித்து,'ஸிராத்துல் முஸ்தகீம்', பாலத்தின் வழியே கூட்டிச் செல்வேன்'' என்று கூறினார்கள்.

**இரண்டாவதாக:** 'மீக்காயீல் (அலை) அவர்கள், ''நான் அவருக்குத் தங்களின் 'ஹவ்லுல் கவ்தர்' என்ற அமிர்தத்தைப் புகட்டுவேன்'' என்று பகர்ந்தார்கள்.

**மூன்றாவதாக:** இஸ்ராபீல் (அலை) அவர்கள், ''நான் இறைவனுக்கு ஸுஜூது செய்வேன்; இறைவன் அவனது பிழையைப் பொறுக்கும்வரை,நான் அந்த ஸுஜூதிலிருந்து தலையை நிமிர்த்த மாட்டேன்''; என்று மொழிந்தார்கள்.

**நான்காவதாக:** இஸ்ராயீல் (அலை) அவர்கள் ''நான் நபிமார்களுடைய உயிரைக் கைப்பற்றுவதுபோல், அவருடைய உயிரையும் மிருதுவாகக் கைப்பற்றுவேன்'' என்று பகர்ந்தார்கள்.

**3.** ''**உ**லகத்திலுள்ள கல்குகளின் பேச்சுக்களையெல்லாம் கேட்டறியக்கூடிய தத்துவமுள்ள ஒரு மலக்கு, ஆண்டவன்பாலுண்டு. அவர், நான் உயிர் துறந்த பின் என்னுடைய கப்ரின்மீது நிலைத்திருப்பார்; ஒருவன் இருதயம் சுத்தமுள்ளவனாக என்மீது ஸலவாத்துச் சொன்னால், அந்த மலக்கு ''முஹம்மதே'! இன்னானுடைய மகன் இன்னான் தங்கள்மீது ஸலவாத்துச் சொன்னான்; என்று என்னிடம் சொல்லுவார்''; ''அப்போது அல்லாஹுதஆலா அந்த மனிதன் பேரில், அவன் சொல்லிய ஒவ்வொரு ஸலவாத்திற்கும், பிரதிபலனாக பத்துப்பத்து தடவை ஸல்வாத்துச் சொல்வான்; அந்த மனிதன் என்மீது ஸலவாத்தை அதிகப்படுத்திக் கொண்டிருக்கும் காலமெல்லாம், அல்லாஹுவும் அமரர்களும் அவன்மீது ஸலவாத்துச் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.''

**4.** "**எ**ன்னுடைய உம்மத்துக்களில் ஒருவன் என்மீது ஸலவாத்துச் சொல்வானாகில், அல்லாஹுு அவனுக்குப் பத்து நன்மைகளை அதிகரிப்பான். இன்னும் அவனது பத்துப் பாவங்களைப் பொறுப்பதோடு, அவனுக்குப் பத்துப் பதவிகளையும் அதிகப் படுத்துவான்; அந்தந்த ஸலவாத்தும் பத்து அடிமைகளை உரிமை விட்டதற்குச் சமமாகும்."

**5.** "**உ**ங்கள் குழந்தைகள் ஒரு வயது வரைக்கும் அழும்போது அவற்றைச் சினக்கவோ, அடிக்கவோ வேண்டாம்; ஏனெனில், திட்டமாக அந்தக் குழந்தையின் அழுகை முதல் நான்கு மாதங்கள் வரை **'லாஇலாஹ இல்லல்லாஹுு'** என்ற கலிமாவாக இருக்கும்; அடுத்த நான்கு மாதங்கள் நபி பெருமான் (ஸல்) மீது சொல்லும் **'ஸலவாத்'**தாக இருக்கும்; பிந்திய நான்கு மாதங்கள் பெற்றோர்களின் **'பிழை பொறுக்க'**த் தேடுவதாக விருக்கும்."

**6.** "**எ**வனொருவன் வெள்ளிக்கிழமை இரவிலாவது, பகலிலாவது என்மீது நூறு ஸலவாத்துச் சொல்வானாகில், அல்லாஹுு அவனுடைய நூறு ஹாஜத்து (விருப்பம்)களை நிறைவேற்றுவான். அன்றியும், அவனைக் கப்ரில் அடக்கும்போது, அல்லாஹ் ஒரு மலக்கைச் சாட்டுவான்; அந்த மலக்கு அவனுக்குச் சுவனபதியைக் கொண்டு நன் மாராயம் கூறுவார்."

**7.** "**நீ**ங்கள் ஒவ்வொரு ஜுஉம்ஆவிலும் என்மீது ஸலவாத்து ஓதுவதை அதிகப்படுத்துங்கள்; எவனொருவன் ஸலவாத்தால் என்னிடம் அதிகம் நெருங்குகின்றானோ? அவனுக்கு நான் இறுதி நாளில் சாட்சியாகவும், சிபாரிசு செய்கிறவனாகவும் இருப்பேன்."

இவைகளேயன்றி, இமாம்களுடைய வசனங்களிலும், ஸலவாத்தின் மகிமைகளைப்பற்றி விரிவாகக் காணலாம்.

அதாவது:- வணக்கங்களில் 'ரியா' (பாசாங்கு) புகுந்து விடுமாயின், அந்த வணக்கம் அங்கீகரிக்கப்படமாட்டாது. ஏனெனில், தொழுகையில் களங்கமற்ற நிலை ஏற்படாததுதான்; இறுதித் தீர்ப்பு தினத்தன்று, 'ரியா' குற்றம் குறுக்கிடும்போது, ஈடேற்றம் பெறுகிறவர்களெல்லோரும் ஸலவாத்தின் பொருட்டால் தான் ஈடேற்றம் பெறுவார்கள்.



எல்லா வணக்கங்களுக்கும் **'இக்லாஸ்'** என்ற கலப்பறுதல் தூய்மை அவசியமாக இருக்கிறது. ஆனால், ஸலவாத்துக்கு மாத்திரம், அது பாசாங்குக்காக அல்லது பொய்யாகச் சொல்லப்பட்டாலும், அதற்கான பலன் கிடைக்கிறது. காரணம் ஸலவாத்தைக் கொடுப்பவன் அல்லாஹுுவாகவும், அதனைப் பெறுவர், நபி (ஸல்) அவர்களாகவும் இருப்பதால், ஒரு மனிதர் எந்த எண்ணத்தோடு அதைச்சொன்னாலும் அல்லாஹுு அதை நிறைவேற்றிவிடுகிறான்.

தொழுகையின் பிந்திய 'அத்தஹிய்யாத்'திலும் ஜனாஸாத் தொழுகையிலும், குத்பாவிலும், மற்றும் எந்த நேரத்தில் நபியுடைய பெயரை அல்லது அவர்களின் புகழ்ச்சிகளை எவர் சொன்னாலும், சொல்பவர், முஸ்லிம், அல்லது காபிர், அல்லது மிருகம், அன்றி ஜின்ஷைத்தான் எவ்விதமானவராயிருப்பினும் சரியே, கேட்பவர் மீது ஸலவாத்துச் சொல்வது கடமையாகும்.

ஒரு மஜ்லிஸில் இதனைக் கேட்கும்போதெல்லாம் தொடர்ந்து ஸலவாத்துச் சொல்வதும் கடமை. (பர்ளு)

அபூ சுலைமானுத்தரானிய்யு என்ற பெரியார் கூறுகிறார்: இறைவன்பால் இறைஞ்சிக் கேட்கும் துஆவிற்கு முதலிலும், கடைசியிலும் ஸலவாத்துச் சொன்னால், அந்த துஆ விரைவில் கபூலாகும். ஸலவாத்துச் சொல்லவில்லையாயின் இறைவனால் அது ஒப்புக் கொள்ளப்படாமாட்டாது. இதற்காகவே அல்லாஹுுவினிடத்தில் தன்னுடைய நாட்டங்களைக் கேட்க நாடினால், நபி பெருமான் (ஸல்) அவர்கள்மீது ஸலவாத்தைக் கொண்டு ஆரம்பம் செய்து, பின் தன்னுடைய நாட்டத்தை இரந்து கேட்டு, இறுதியில் ஸலவாத்துச் சொல்லி முடிக்க வேண்டும். ஏனெனில், திட்டமாக அல்லாஹுு தனது ஹபீபுமீது ஓதப்பட்ட இரண்டு ஸலவாத்தையும் கபூல் செய்து கொண்டு, அதன் மத்தியிலிருக்கும் அடியானுடைய வேண்டுகோளை ஒப்புக் கொள்ளாமல் எங்ஙனம் நிராகரிக்க முடியும்? நிச்சயமாக, அவன் அந்த வேண்டுகோளையும் ஒப்புக்கொள்ளச் சித்தமுடையவனாகவே இருக்கின்றான்.

மகிமைமிக்க ஸலவாத்தின் வரிசைகளைப் பற்றிய இறை வசனங்களும், நபி பெருமான் (ஸல்) அவர்களின் பொன்மொழிகளும், அவற்றைக் கடைபிடித்தொழுகி பலன் பெற்ற மேதைகளின் அத்தாட்சிகளும், அதன் அளவற்ற நலன்களைப்பற்றிய ஆஷிகீன்களின் விளக்கங்களும் அதிகமாகயிருக்கின்றன.

நாமும் ஈருலக வாழ்வில் அளவற்ற நற்பயன்களைப் பெறும் பொருட்டு, நம் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும்,அவர்கள் ஆல் அஸ்ஹாபிகள் மீதும், அடிக்கடி ஸலவாத்தும், ஸலாமும் ஓதி வருவோமாக.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلِّمْ

"அல்லாஹும்ம ஸல்லி அலா ஸய்யிதினா முஹம்மதின் வ ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லிம்."

இரசூல் (ஸல்) அவர்கள் மீதுள்ள பிரியத்தின் பரவசத்தாலும், அன்பின் பெருக்காலும், தத்தம் நாட்டங்கள் நிறைவேறுவதற்கும், நோய் நொம்பலங்கள் தீர்வதற்கும், அல்லாஹ்வின் அளப்பரிய அருளை ஆசித்தும், மேதைகளான அறிஞர்களும், பக்தர்களும் பற்பல வகையில், சிறிதும் பெரிதுமான ஸலவாத்துக்களை இயற்றியுள்ளார்கள். அவைகளில்; மக்களால் போற்றப்பட்டு நடைமுறையிலிருக்கின்றதும், படித்து மனப்பாடம் செய்ய இலகுவானதும், இம்மையிலும் மறுமையிலும் பல நலன்களைத் தருவதுமான நான்கு 'ஸலவாத்து'க்களை மட்டும் இங்கு தருகிறோம். இவற்றுள் தொழுகையின் 'அத்தஹிய்யாத்'தில் ஓதப்படுகிற 'ஸலாதெ இப்ரா ஹீமிய்யா' மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அவை:-

## ஸலாதெ இப்ராஹீமிய்யா

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ
كَمَا صَلَّيْتَ عَلٰى سَيِّدِنَا اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ سَيِّدِنَا اِبْرَاهِيْمَ
وَبَارِكْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ كَمَا
بَارَكْتَ عَلٰى سَيِّدِنَا اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ سَيِّدِنَا اِبْرَاهِيْمَ
اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ ○



## மூலமும் உரையும்

**அல்லாஹும்ம ஸல்லி அலா ஸய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலி ஸய்யிதினா முஹம்மதின்** = யாஅல்லாஹ் (எங்கள் நாயகம்) ஸய்யிதினா முஹம்மது நபி (ஸல்) அவர்கள்மீதும், அவர்கள் கிளையார் மீதும் அருள்மாரி சொரிவாயாக. **கமா ஸல்லைத்த அலா ஸய்யிதினா இப்ராஹீம வஅலா ஆலி ஸய்யிதினா இப்ராஹீம**- ஸய்யிதினா இப்ராஹீம் நபி (அலை) அவர்கள் மீதும், அவர்கள் கிளையார் மீதும் அருள்மாரி சொரிந்ததுபோல்- **வபாரிக் அலா ஸய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலி ஸய்யிதினா முஹம்மத்**- இன்னும் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கும் அவர்கள் கிளையாருக்கும் அபிவிருத்திச் செய்தருள், **கமா பாரக்த அலா ஸய்யிதினா இப்றாஹீம வஅலா ஆலி ஸய்யிதினா இப்றாஹீம** = ஸய்யிதினா இப்றாஹீம் நபி அவர்களுக்கும் அவர்கள் கிளைருக்கும் நீ அபிவிருத்தி செய்ததுபோல், **இன்னக ஹமீதுன் மஜீது**- நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் தலைமை வாய்ந்தவனுமாக இருக்கிறாய்.

பீவி ஆயிஷாசித்தீகா (ரலி) அவர்கள் ஓர் இரவு விளக்கு வெளிச்சத்திலிருந்து சட்டை தைக்கும்போது, விளக்கு அணைந்ததற்காகக் கவலை கொண்டிருந்த நேரம், எம்பெருமானார் (ஸல்) அவர்கள் வந்து வீட்டினுள் நுழைந்ததும், அவர்களின் பிரகாசத்தால் ஊசியை எடுத்து மீதியைத் தைத்து முடித்து மகிழ்ச்சியோடு, ''அல்லாஹ்வின் திருத்தூதரே! தங்கள் திருமுகத்தின் வெளிச்சத்திற்கு நான் யாது சொல்வேன்'' என மொழிந்தார்கள். இதைக்கேட்ட நபி (ஸல்) அவர்கள் 'என் முகத்தைக் காணாதவனுக்கே கேடு' என்றதும், சித்தீகா (ரலி) அவர்கள் ''நாயகமே! தங்கள் முகத்தைக் காணாதிருப்பவன் யார்?'' என வேண்டியபோது, 'பகிலன் காணமாட்டான்' என நபியுல்லாஹ் கூறினார்கள். இதற்கு சித்தீகா (ரலி) அவர்கள் 'அது யார், பகிலன்!' என்றதும், 'என் நாமத்தைக் கேட்டும் ஸலவாத்துச் சொல்லாதிருப்பவனே அவன்' என அருளினார்கள்.

தொழுகைக்குப் பின்னும், மற்ற சமயங்களிலும் மிகுதமாக ஸலவாத்தை ஓதி ரசித்துக் கொண்டிருந்த பீவி ஆயிஷா நாயகி (ரலி) அவர்களுக்கு, ரசூலே கரீம் (ஸல்) அவர்கள், சுருக்கமாக ஓதி அதிகப் பயனை அடைவதற்குப் படித்து கொடுத்த ஸலவாத்து, இதற்கு 'ஸலாத்துல் ஆயிஷா' என்று பெயர்.

இந்த மேன்மை மிக்க ஸலவாத்தை தினம் 'இஷா'த் தொழுகைக்குப் பின்னும், 'ஜும்ஆ'த் தொழுகைக்குப் முன்னும் 101, தடவை ஓதி வருவதை வழக்கமாக்கிக் கொண்டால், எம்பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் காணலாம் என்று சொல்லப்படுகிறது.

**(அல்ஹம்துலில்லா(ஹ்)**

## ஸலாத்துல் ஆயிஷா

صَلَاةُ الْعَائِشَة

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ
عَدَدَ مَا فِيْ عِلْمِ اللّٰهِ صَلَاةً دَائِمَةً بِدَوَامِ مُلْكِ اللّٰهِ

**'அல்லாஹு"ம்ம ஸல்லி வஸல்லிம் வபாரிக் அலா ஸய்யிதினா முஹம்மதின் வஆலிஹீ வ ஸஹ்பிஹீ அதத மாபீ இல்மில்லாஹி ஸலாத்தன் தாயிமதன் பிதவாமி முல்கில்லாஹ்.'**

**உரை :**

யா அல்லாஹ்! எங்கள் அருமை நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது கிளைஞர், தோழர்கள் மீதும், உனது ஆட்சி நிலைத்திருக்கும் காலமெல்லாம், உனது அறிவிலுள்ள எண்ணப்படி எப்பொழுதும் ஸலவாத்தும் சலாமும் சொல்லிப் பொழிவாயாக.

## ஸலாத்துஷ் ஷிபாஇய்யா

صَلَاةُ الشِّفَائِيَّةِ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ طِبِّ الْقُلُوْبِ وَدَوَائِهَا وَعَافِيَةِ
الْاَبْدَانِ وَشِفَائِهَا وَنُوْرِ الْاَبْصَارِ وَضِيَائِهَا وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَبَارِكْ وَسَلِّمْ



**அல்லாஹு"ம்ம ஸல்லி அலா ஸய்யிதினா முஹம்மதின் திப்பில் குலூபி வதவாஇஹா வ ஆபியதில் அப்தானி வஷிபா இஹா வநூரில் அப்ஸாரி வளியாஇஹா வஅலா ஆலிஹீ வஸஹ்பிஹீ வபாரிக் வசல்லிம் அலைஹி.**

**உரை :-**

இறைவா! எங்கள் நாயகம் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும்; அவர்கள் கிளைஞர், தோழர்கள் மீதும் ஸலவாத்து என்னும் கருணையையும், சலாம் என்ற சாந்தியையும் சொரிந்தருள். அந்த நாயகத் திருமேனி (ஸல்) எத்தகையோர் என்றால் உடம்பு வலுவுற்றிருப்பதற்கும், சதா நோயற்றிருப்பதற்கும், கண்ணொளி பிரகாசித்திருப்பதற்கும் காரணமானவர்கள்.

இந்தச் ஸலவாத்து குதுபுல் அக்தா-பு கவ்து நாயகம் (ரலி) அவர்கள் ஓதி வந்ததால், இதற்கு 'ஸலாத்துல் கவ்திய்யா' என்றும் சொல்லப்படும். இதை வழக்கமாக ஓதி வருபவர்கள் 'ரீஹு" அஹ்மர்' என்ற செங்காற்றால் ஏற்படும் சகல நோய்கள், வருத்தங்கள், ஆபத்துகள் அனைத்தைவிட்டும் காக்கப்படுவார்கள். மேலும் கண்ணொளியையும் ஆரோக்கியத்தையும் கிடைக்கப் பெறுவர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஓதும் 'ஸலவாத்து', ஆகிரத்தில் அமளி, அதாபுகளை அகற்றிவைக்கும்போது, ஆலத்தில் ஏற்படும் வருத்தங்களை அகற்றிக் காப்பது அதற்குப் பெரிதல்ல, நிச்சயமாக அது நீக்கியே வைக்கும்.

## மகிமை மிக்க ஸலவாத்துந் நாரிய்யாவும் அதன் பயனும்

صَلَاةُ النَّارِيَّة

اَللّٰهُمَّ صَلِّ صَلَاةً كَامِلَةً وَّسَلِّمْ سَلَامًا تَامًّا، عَلٰى سَيِّدِنَا مُحَمَّدِنِ الَّذِيْ تَنْحَلُّ بِهِ الْعُقَدُ وَتَنْفَرِجُ بِهِ الْكُرَبُ وَتُقْضٰى بِهِ الْحَوَائِجُ وَتُنَالُ بِهِ الرَّغَائِبُ وَحُسْنُ الْخَوَاتِمِ وَيُسْتَسْقَى الْغَمَامُ بِوَجْهِهِ الْكَرِيْمِ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ فِيْ كُلِّ لَمْحَةٍ وَّنَفَسٍ بِعَدَدِ كُلِّ مَعْلُوْمٍ لَّكَ

**அல்லாஹும்ம ஸல்லி ஸலாத்தன் காமிலதன் வஸல்லிம் ஸலாமன் தாம்மன், அலா ஸய்யிதினா முஹம்மதினில்லதீ தன்ஹல்லு பிஹில் உகத், வதன் பரிஜு பிஹில் குரப் வதுக்ளா பிஹில் ஹவாயிஜ் வதுனாலு பிஹிர் ரகாயிப் வஹுஸ்னுல் கவாதிமி வயுஸ் தஸ்கல் கமாமு பிவஜ்ஹிஹில் கரீம் வ அலா ஆலிஹீ வஸஹ்பிஹீ பீகுல்லி லம்ஹதின் வனபஸின் பி அததி குல்லி மஃலூமின் லக.**

**எ**ங்கள் ஆண்டவா! எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள்மீதும், அவர்கள் கோத்திரத்தார் தோழர்கள்மீதும், நீ அறியும் அளவிற்கு ஒவ்வொரு வினாடியும், நிறைந்த ஆசியையும், பூரண சோபனத்தையும் பொழிவாயாக. அந்த நாயகத்தின் மகத்துவத்தின் பொருட்டால், சிக்கல்கள் எடுபடும்; கஷ்டங்கள் நீங்கி சந்தோஷ முண்டாகும்; தேவைகள் பூர்த்தியாகி முடிவுகள் அழகுறும்; கார்மேகங்கள் மழையைச் சொரியும்.

### பலன்

இந்த மேன்மைமிக்க ஸலவாத்திற்கு 'ஸலாத்துத் தப்ரீஜிய்யா'- 'மிப்தாஹ் கன்ஸில் முஹீத்து'- 'ஸலாத்துஸ் சய்பு' என்ற பெயர்கள் சொல்லப்பெறும். மேலும், இதற்கு தாவிப் பிடிக்கும் சுவாலைக் கொப்பான வாழ்த்து எனப் பொருள்படும் **'ஸலாத்துந் நாரிய்யா'** என்ற புகழே வழங்கப்பெறுகின்றது.



இந்த மகத்தான பிரார்த்தனையை தினம் நாற்பது தடவை ஓதி வந்தால் விண்ணிலிருந்து இறங்குவது போலும், மண்ணிலிருந்து வெளியாகுவது போலும், ஆச்சரியப்படத்தக்க விதமாக உணவுப் பெருக்கத்தைக் காணலாம். மேலும், ஒவ்வொரு பர்ளு தொழுகைக்குப் பின்னும் நியமமாக 11 தடவை ஓதி வந்தால், மிகுந்த செல்வங்கள் வாய்க்கப் பெறும். இந்த **'ஸலவாத்துந் நாரிய்யா'**வை எழுதித் தண்ணீரில் கரைத்து வியாதியத்தர் பருகினால், அவர்கள் சகல நோய்களிலிருந்தும் நீங்கி சுகத்தைப் பெறுவார்கள்; ஷைத்தான் தொட்டவர்களுக்குக் கொடுத்தால், ஷைத்தான் விலகும்; கர்ப்ப வதிகளுக்குக் கொடுப்பின் வருத்தம் இலேசாகி, சுகப் பிரசவமாகும். இது பலமுறை சோதித்தறிந்த உண்மை. இதில் யாதொரு ஐயமு மில்லை என்பதாக 'தைநூரி' என்ற பெரியார் உறுதி கூறியிருக்கிறார்.

அன்றியும் இதைச் சோதித்தறிந்த மார்க்க அறிஞர் பலர், ''ஷரீஅத்திற்கு மாற்றமில்லாத- உலக நன்மையைப் பெறக் கருதுபவர்கள் 7 அல்லது 11 வணக்கமுள்ள விசுவாசிகளைக் கொண்டு, தங்களில்லத்தில் நபர் ஒன்றிருவருக்கு இவ்வளவென்று பகிர்ந்து, மொத்தம் 4444 தடவை ஒரே மஜ்லிஸில், 'ஸலாத்துந் நாரிய்யா'வை பூர்த்தியாக ஓதச் செய்து, தாங்களும் திரிகரண சுத்தியோடிருந்து, தங்கள் நாட்டத்தை இறைவன்பால் மன்றாடிக் கேட்பார்களேயானால், அக்கினியானது மற்ற பொருள்களைத் தாவிப்பிடிப்பது போன்று தங்கள் நாட்டத்தில் பூரண வெற்றியைக் காண்பார்கள்.''

இந்த முறையையே 'மஃரிப்'- மேற்கு தேசத்துடையவர்கள் அடிக்கடி கடைப்பிடித்து, தங்கள் தங்கள் நாட்டத்தைத் தீவிரமாகப் பெற்றுக் கொள்கின்றனர். இதற்காகவே இதற்கு 'ஸலாத்துந் நாரிய்யா' என்ற பெயர் சொல்லப்படுகிறது என்றும் கூறியுள்ளனர்.

**'ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.'**

# இருவகை மரணம்

## 2

மௌத்தாகு முன்னே மவ்த்தாகவும்
மாகை முழுக்குமுன் முழுகெனவும்
சவுத்தால் உயர்ந்தோர் சொல்சாரமதை
சகலரும் விளங் காரறியார்
மௌத்து ஹகீகிய்யும் இறாதிய்யுமாம்
மௌத்து உடலுக்கு ரூஹுக்கில்லை
மௌத்தை யறியாதோர் மடையரென்று
மணலில் கதம்தோயா நபிமொழிந்தார்

**அரும்பதவுரை:**

மௌத்து- மரணம். மவுத்தாகவும் - மரணிக்கவும். சவுத்தால் - தொனியர். மௌத்து ஹகிகிய்யி - இயற்கை மரணம். மௌத்து இறாதிய்யி- பாவனை மரணம். ரூஹு- ஆன்மா. கதம்- பாதம்.

مُوْتُوْا قَبْلَ اَنْ تَمُوْتُوْا

**"மரணத்திற்கு முன் மரணித்துக் கொள்ளுங்கள்."** ஹதீஸ்

மரணம் இருவகைப்படும். 1. உடலை விட்டும் உயிர் நீங்கி விடுதல்; இது இயற்கை (ஹகிகிய்யி) மரணம் எனப்படும்.

2. உலகச்சம்பந்தங்களிலிருந்து நப்சு (மனம்) பிரிந்துவிடுதல்; இது பாவனை (இறாதிய்யி) மரணம் எனப்படும்.

மரணம் உடலுக்கே அன்றி ஆன்மாவுக்கன்று; ஆதலின், அல்லாஹுவின் கட்டளைக்கும், ரசூல் நாயகம் (ஸல்) அவர்களின் சொல் செயலுக்கும் இணங்க, உடலையும் ரூஹையும் நற்கிரியைகளில் பழக்குதல் வேண்டும். இவ்வாறு பழக்குவதால், மனிதன் மரணத் தறுவாயிலும்கூட பரிசுத்த (முஃமின்) விசுவாசியாக, மரணிக்கிறான்.



அதாவது:-

மனிதனுக்கு (ஜனாபத்) கட்டாயமாகக் குளிப்பது ஆறு காரியங்களில் ஏற்படும். அவை 1. ஸ்கலிதம் 2. சேர்க்கை 3. மதம் மாறுதல் 4. மாத விடாய் பேறு 5. மரணம் 6. தன் உணர்வு மாறுதல்.

இவற்றுள், மரண நிலையில் இந்திரியம் வெளியாகவோ, போதம் கெடவோ செய்யுமாயின், அப்போதும் முழுக்கு கடமையாகி விடும். ஆகவே, ஒருவன் தனது ஜீவியத்தில் தன் மனம், வாக்கு, காயம் இவற்றை இறைவனால் விலக்கப்பட்டவைக்கு இடங்கொடாமல் பேணித் தனது சுவாசத்தை நல்வழியில் செலுத்திக் கட்டுப்படுத்தி வருவானாயின், மரணவேளையில் அவனுக்கு இந்திரியம் வெளி யாகாது; தன்னுணர்வும் மாறாது; அதனால் அது சமயம், அவன் முழுக்காளி ஆகமாட்டான்.*

இந்தநிலை ஏற்படுவதற்குத் தன்னை அறியவேண்டும். அல்லாஹுவை அறிவதற்குத் திறவுகோல், மனிதன் தன்னுடைய நப்ஸை அறிவதேயாகும். இதனை வலியுறுத்த,

**"மன் அரப நப்ஸஹு பகத் அரப ரப்பஹு".**

***'தன்னை அறிந்தவன் தன் தலைவனை அறிவான்'*** என்பதை நோக்குவீர்களாக. ஹதீஸ்

மௌத்தாகிய ஒருவன், உயிரோடிருக்கும்போது, அன்பும் பிரியமும் கொண்ட அவனது மனைவி,மக்கள், செல்வம் இன்னும் இன்பப் பொருட்கள் யாவற்றில் நின்றும் எவ்வாறு விடுதலை பெறுகின்றானோ? அவ்வாறே நீயும், உனது ஜீவிய காலத்தில் (உடலும் உயிரும் ஒன்றாயிருக்கும்போது) உலகப் பற்றிலிருந்து விடுதலை பெறுதல் வேண்டும்; இன்னும் மௌத்துடைய வேளையில் நன்மையான வணக்கங்களின் மேல் தேட்டமும் நாட்டமும் உண்டாவதுபோல், நீயும் உன் வாழ்நாள் முழுவதும் தியானத்தில் நாட்டமும் தேட்டமும் கொள்ளுதல் வேண்டும்; ஆண்டவன் (ஹக்கு) வேறு, படைப்பு (கல்கு) வேறு, என்று வேற்றுமை பாராட்டாது, எல்லாம் அவனே என்றும், அவன் பக்கமே சார்ந்து மனத்தின் இச்சைகளுக்கு வசப்படாமல், அவற்றிற்கு

* மையித்தை குளிப்பிப்பது முதலிய கடமைகள் இருப்பவர்கள் மீது பரனாகும்.

விரோதமாய் 'ரியாளத்'மனோ அப்பியாசங்களாலும், நபி பெருமான் (ஸல்) அவர்களின் 'ஷரீஅத்' படியும் கட்டாயம் நடந்து வரவேண்டும். அந்த விதம் நடந்து வருபவனுக்கு அல்லாஹுவால் பூரண வெற்றி கிடைக்கிறது. அந்த வெற்றியால் இருதயம், சுத்தியடைந்து (நூரானி) ஏக ஜோதியாய்ப் பிரகாசித்துத் தன்னை அறிந்து கொள்வதுடன், தன் ரப்பாகிய அல்லாஹு ஜல்ல ஷஃனுஹு வதஆலாவையும், அறிந்து கொள்கிறான்; என்பதாம்.

***"மரணத்தின் உண்மைகளை நன்கு விளங்கி நடவாமல் விதண்டாவாதம் பேசித் திரிபவர்கள் மடையர்களாவர்"*** எனப் பூமியில் திருப்பாதங்கள் பதியாத நமது நபி முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

## ஹலரத் லூக்மானின் பொன்மொழி

### 3

முன்னாள் லூக்மான்தன் மக்களிலே
    முவ்வர்க்கும் செய்வ ஸிய்யத்திது
மன்னான் றன்னையும் மௌத்தினையும்
    மறவா திருங்களென் றாரதிலே
அந்நாளிந்நா ளெந்நாளும் சொல்லும்
    அறிவு சகலதும் புகுந்திட்டதால்
உன்னாவி விடும் மவ்த்ததனை
    உன்றன் கண்ணின்முன் நிறுத்திக் கொள்வாய்.

**அரும்பதவுரை:-**

லூக்மான்- ஒரு ஞான மேதை. வஸிய்யத்து- இறுதி உபதேசம். மன்னான்- இறைவன்.

وَلَقَدْ آتَيْنَا لُقْمَانَ الْحِكْمَةَ أَنِ اشْكُرْ لِلَّهِ

***"நிச்சயமாக நாம் லூக்மானுக்கு தத்துவ ஞானத்தைக் கொடுத்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும்படி கூறினோம்." ——— 31-12***



***ஹஸ்ரத் 'லுக்மான்' ஹகீம் (அலை):-*** அவர்கள் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் சந்ததியில் தோன்றியவர்கள், அல்லாஹ்வால் அகமிய ஞானங்கள் நன்கொடையாகப் பெற்ற மேதாவி. இவர்கள் ஆயிரம் வருஷங்கள்வரை உலகில் ஜீவித் திருந்ததாகக் கூறப்படுகிறது. அந்தக் காலத்து மக்களுக்கு நேர்வழி காட்டுவதே தங்கள் தொழிலாகக் கொண்டிருந்தார்கள். இடையிடையே ஏற்படும் சோதனைகளுக்கெல் லாம், இறைவன்பால் நம்பிக்கை பூண்டு, மிகுந்த சகிப்புத் தன்மை யோடு வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் பல நபிமார்களின் போதனை களுக்கிணங்க செவ்வைப்படுத்திப் பின்னுள்ள மக்களுக்கு எடுத்துக் காட்டிய மகான் எனப் பல கிதாபு-நூல்களில் கூறப்பட்டிருக்கிறது.

கல்வத்து நாயகம் அவர்கள் தமது ***'ஹம்தன் இலாஹீ தஆலா'*** என்ற பாடலில் இவர்களை நபி என்று கூறுகிறார்கள்.

இங்கு தத்துவ ஞானம் என்பது அல்லா(ஹ்)வுக்கும், அவனது தூதர்களுக்கும், மற்றும் மனிதர்களுக்கும், தமது மனச்சாட்சிக்கும் விரோதமில்லாத முறையில் கையாளப்படும் புத்தி விசாலமேயாம். இதற்கு அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஓர் உதாரணம் காட்டுகின்றோம்.

ஹலரத் 'லூக்மான்' ஹகீம் (அலை) அவர்கள் தமது சிறு பிராயத்தில் ஒரு வியாபாரியின் கீழ்வேலை பார்த்து வந்தார்கள். ஒரு சமயம் எஜமானன் தனது வேலைக்காரர்களிடம் தோட்டத்தில் போய்ப் பழங்கள் பறித்து வரும்படி கட்டளையிட்டான். 'லூக்மான்' (அலை) அவர்கள் மற்றவர்களைப்போல் பெருமை, கோள், பொய் இவை போன்ற கெட்டகுணங்களில்லாது, சாந்த குணமுடையோராக இருந்தமையால் எஜமான், இவர்களைக் குறைவாக மதித்து மிகக் கீழ்ப்பதவியில் வைத்திருந்தான். ஹலரத் 'லூக்மான்' உட்பட வேலைக்காரர்கள் தோட்டத்தில் புகுந்து பழங்களைப் பறித்தார்கள். ஹலரத் லூக்மான் அவர்களைத் தவிர ஏனைய வேலையாட்கள் எல்லோரும் ஒன்றுகூடி, பறிக்கப்பட்ட கனிகளில் போதிய அளவு தின்று, தோலையும் வித்தையும் ஓரிடத்தில் குவித்து வைத்துவிட்டு, எஜமான னிடம் சென்று லூக்மானே தின்றதாகப் புகார் செய்தனர். எஜமானன் மிகக் கோபத்தோடு தோட்டத்தில் புகுந்து, ஹலரத் அவர்களை அழைத்துக் கேட்டபோது, அவர்கள், தாம் அந்தப் பழங்களில் ஒன்றேனும் தின்றது கிடையாதென்றும், மற்ற வேலையாட்களே தின்றுவிட்டுத் தம்மீது பழி சுமத்துகிறார் களென்றும் மறுமொழி பகர்ந்தார்கள்.

புத்திசாலியான எஜமானன் அவர்களில் யாருடைய வார்த்தையில் உண்மை இருக்கும் எனச் சிந்தித்துக் கொண்டிருந்த போது, ஹலரத் அவர்கள், எஜமானனை நோக்கி, ''தாங்கள் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டுமாயின், எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரே அளவு வெண்ணீரைக் கொடுத்து குடிக்கச் சொல்லி, பின்னர் ஒரு குறிப்பிட்ட தூரம்வரை ஓடச்செய்யுங்கள். அப்போது உண்மை வெளியாகும்'', என்று வேண்டினார்கள். எஜமானன் ஆச்சரியமுற்று அவ்வாறே சூடான தண்ணீரைக் கொடுத்து ஓடச் செய்தபோது, எல்லோரும் வயிறு குமட்டி வாந்தி எடுத்தனர். பழங்களை புசித்தவர்களின் வாந்தியில் பழங்களின் அம்சங்கள் காணப்பட்டன. ஹலரத் அவர்களின் வாந்தியில் சுத்த நீரே காணப்பட்டது. உண்மையைத் தெரிந்துகொண்ட எஜமானன் குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை கொடுத்தான். ஹலரத் அவர்களைக் கண்ணியப்படுத்தியதோடு, அவர்களின் பதவியையும் உயர்த்தினான். அவர்களால் இதுபோன்ற அநேக நுண்ணறிவுகளைக் கற்றுக் கொண்டான். இதுவே பூராயம் எனப்படும்.

மகான் லுக்மான் (அலை) அவர்கள் தமது அருமைப் புதல்வர்கள் 'மாதான்', 'அன்அம்', 'அஷ்கம்' இந்த மூவருக்கும் பல புத்திமதிகளும் உபதேசங்களும் போதித்துள்ளார்கள். அவற்றுள் முக்கியமானவை:-

**''நீ அல்லாஹ்வுக்கு இணை வைக்காதே! எந்தச் சமயத்திலும் இறைவனையும் மரணத்தையும் நினைவில் வைத்து, தொழுகையைக் கடைப்பிடித்து, பெற்றோரைப் பேணி, பாபங்களை விட்டொழிய வேண்டும்.''** என்பதுவே.

நண்பர்களே! நமது ஆயுள் முழுவதிலும் நமக்கு உதவக்கூடிய நல்லுபதேசங்கள், மேற்கூறிய வசனத்தில் தெளிவாக அமைந்திருக்கின்றன. நமது ஆவி நாளுக்கு நாள் குறைந்து குறைந்து முடிவில் மரணத்தை எட்டிவிடுகிறதை நன்கு சிந்தித்து, மரணத்தின் தன்மையை நம் கண் முன்னால் நிலைநிறுத்திக் கொள்வோமாக.

ஹலரத் லுக்மானின் போதனைகளை இந்த நூலில் சிற்சில இடங்களில் எழுதியுள்ளோம். அன்பர்கள் படித்துப் பலன் பெறுவார்களாக.



## மரணத்தின் பண்பு

## 4

மௌத்தைப் படையாவிட்டா லெவரும்
மவ்லாவை நாய னென்றறியார்
மௌத்தை ஹயாத்துக்கி ரண்டாயிரம்
வருடத்தின் முன்னே வகுத்ததனால்
மௌத்தை தட்ட வல்லப மெவர்க்கும்
மனாமிலு மில்லை என்றறிவாய்
மௌத்து அப்லாத்தூன் ஜாமாஸ்துவை
மருட்டிப் பிடித்ததை உற்றுப்பாரே.

**அரும்பதவுரை:-**

மௌத்து - இறப்பு, மவ்லா- எஜமான், ஹயாத்து- ஜீவியம், மனாம்- கனவு, அப்லாத்தூன்- ஒரு தத்துவஞானி.

مِنْهَا خَلَقْنٰكُمْ وَفِيْهَا نُعِيْدُكُمْ وَمِنْهَا نُخْرِجُكُمْ تَارَةً اُخْرٰى ○

**''பூமியிலிருந்தே நாம் உங்களைச் படைத்தோம்; பின்னர் அதிலேயே நாம் உங்களைச் சேர்த்து விடுவோம்; மற்றொரு தடவையும் (உங்களுக்கு உயிர் கொடுத்து) அதிலிருந்தே நாம் உங்களை வெளிப் படுத்துவோம்.''** *(20-55)*

**''பூமியிலுள்ள யாவும் அழிந்தே போகும்; (55-26) மிக்க கண்ணியமும் பெருமையும் வாய்ந்த உமது இறைவன் மட்டிலும் (அழியாது) நிலைத் திருப்பான்.''** *(55-27)*

**''ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை அனுபவிக்க வேண்டிய தாகவே இருக்கின்றது. (எனினும்) உங்கள் (செயல்களுக்குள்ள) கூலிகளை, நீங்கள் பூரணமாக அடைவதெல்லாம் மறுமை நாளில்தான். ஆகவே (அந்த நாளில்) எவர் (நரக) நெருப்பிலிருந்து அப்புறப் படுத்தப்பட்டுச் சுவர்க்கத்தில் புகுத்தப்படுகிறாரோ அவர், நிச்சயமாக பெரும் பாக்கியத்தை அடைந்துவிட்டார். இந்த உலக வாழ்க்கை, மயக்கக் கூடிய (அற்ப) இன்பத்தைத் தவிர வேறில்லை.''** *(3-185)*

அல்லாஹ் திருமறையில், பல இடங்களில் சந்தேகமின்றி மரணத்தைப் பற்றி நமக்கு எச்சரிக்கை செய்துள்ளான். நம்மிடையில் மரணித்தவர்களை நாம் ஒவ்வொரு நாளும் வழியனுப்பிக் கொண்டிருக்கிறோம்; அன்றியும், அன்னோருக்குப்பின் நாமும் அந்த வழி என்றேனும் ஒருநாள் நிச்சயமாகச் செல்லக்கூடியவர்களாகவே இருக்கிறோம்.

وَأَنَّ السَّاعَةَ آتِيَةٌ لَّا رَيْبَ فِيهَا وَأَنَّ اللَّهَ يَبْعَثُ مَن فِي الْقُبُورِ

***"விசாரணைக் காலம் நிச்சயமாக வரக்கூடியதே; அதில் யாதொரு சந்தேகமுமில்லை; (அந்தநாளில்) சமாதிகளில் (புதைந்து) கிடப்போரை நிச்சயமாக அல்லாஹு (உயிர்கொடுத்து) எழுப்புவான்."* (22-7)**

மேற்கண்ட வசனங்களில் இறைவன் இறுதி நாளில் மானிடவர்க்கம் தன்னிடத்திலேயே மீளுவதின் உண்மையை, பகுத்தறிவுடைய எந்த மனிதனும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கிக்கொள்ளும் பொருட்டு வலியுறுத்திக் கூறியுள்ளான்.

## இப்ராஹீம் நபி கண்ட காட்சி:-

ஒரு சமயம் இப்ராஹீம் நபி அவர்கள் கடற்கரையோரமாகச் செல்லும் போது, அங்கு ஓரிடத்தில் ஒரு பிரேதம் அலைகளால் கரையில் தள்ளப்படுவதும் அதனை ஓநாய், காகம், கழுகுகள் பிய்த்துத் தின்பதும்; மறு அலை வந்து அதனைக் கடலில் இழுத்துச் செல்வதும், அதனை அங்குள்ள மீன்கள் புசிப்பதுமாக, இவ்வாறு பலமுறை பிரேதம் வந்து போய், கடைசியில் அது சிதறிப்போயிற்று. அதனைக் கண்ட இப்ராஹீம் நபி அவர்கள் ஆச்சரியப்பட்டு,

## இறைவன்பால் நபியின் வேண்டுகோள்.

**"என் இறைவா! இறந்தவர்களை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கின்றாய்? (அதை) நீ எனக்குக் காட்டுக." என வினவியபோது இறைவன் (இதை) "நீர் நம்பவில்லையா?" என்று கேட்டான். (அதற்கு) 'மெய்தான்' (நான் நம்பியே இருக்கின்றேன்.) ஆயினும் (அதனை என் கண்ணால் கண்டு) என்னுடைய இருதயம் திருப்தி அடையும் பொருட்டு (அதனைக் காட்டுக)" எனக் கூறினார். (அதற்கவன்) "நான்கு பறவைகளைப் பிடித்து நீர் அவைகளைப் பழக்கி, பின்னர் (அவைகளைத் துண்டாக்கி) அவற்றில் ஒவ்வொரு பாகத்தையும், ஒவ்வொரு மலையின்மீது வைத்துவிட்டு, (மத்தியிலிருந்து கொண்டு) அவைகளை நீர் கூப்பிடும்; அவை உம்மிடம் பறந்து வந்து சேரும்" (எனக் கூறினான்.) (20-260)**



அல்லாஹு வின் கட்டளைப்படி நபி இப்ராஹீம் (அலை) அவர்கள், மயில், காகம், கழுகு, சேவல் இந்த நான்கு பறவைகளையும் பிடித்து, முதலில் கழுத்தை அறுத்துப் பின்னர் இறகுகளைப் பிடுங்கி அவயவங்களைத் துண்டுகளாக்கி, எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து அவற்றின் தலைகளை மாத்திரம் அண்மையில் வைத்துக் கொண்டு, அந்தத் துண்டுகளை நான்கு மலைகளின் உச்சிகளில் சமமாக வைத்து விட்டு இறங்கி வந்து, அந்த மலைகளிலிருக்கும் மாமிசத் துண்டு களைப் பார்த்து "அல்லாஹு வின் உத்தரவின்படி வாருங்கள்" என்று அந்தப் பறவைகளின் பெயர்களைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். அப்போது ஆச்சரியப்படும்படியாக அவைகளின் இறகு, எலும்பு, துண்டுகள் எல்லாம் தங்களுடைய மற்ற துண்டுகளோடு பொருந்தி, ஆகாயத்தில் தலையில்லாப் பட்சிகளாகப் பறந்து நபி அவர்களின் முன் வரவும், தங்களிடமிருந்த தலையை அவைகளுக்குக் காண்பிக்க, தன் தன் தலையைப் பொருந்தி முன்போல் பறவைகள் ஆயின. அப்பால் இறைவன்:

**"(இப்ராஹீமே!) நிச்சயமாக அல்லாஹு வல்லோனும் நுண்ணறிவுமுடையோனுமாக இருக்கின்றான் என்பதை நீர் உறுதியாக அறிந்து கொள்ளும்" (எனக் கூறினான்.) (2-260)**

நாம் அருந்தும் உணவுகளில் மிகுதமும் (நமக்கு ஆகுமாக்கப்பட்ட) கால்நடைகள், பறவை இனங்கள் இவைகளின் மாமிசங்களை உட்கொண்டு, பின்பு கழித்துவிடுகிறோம். பல ரூபத்தில் அழிந்துபட்ட இவைகளையும் அல்லாஹு இறுதி நாளில் உயிர்ப்பிக்கச் செய்கிறான் என்பதனை குர்ஆன் வலியுறுத்துகிறது.

**"பூமியில் ஊர்ந்து திரியக்கூடியவைகளும், தன்னுடைய இரு இறக்கைகளால் (ஆகாயத்தில்) பறக்கக்கூடியவைகளும் உங்களைப் போன்ற (ஜீவனுள்ள) படைப்புகளேயன்றி வேறில்லை. (இவைகளில்)**

**ஒன்றையுமே** (நம்முடைய பதிவுப்) **புத்தகத்தில்** (-லவ்ஹுல் மஹ்பூளில்) **குறிப்பிடாது நாம் விட்டு விடவில்லை. பின்னர்** (ஒருநாளில்) **இவைகளும் தங்கள் இறைவனிடம் கொண்டு வரப்படும்."** ***(6-38)***

## நூறு வருடங்கள் உறங்கிய உஸைறு நபி (அலை)

பூர்வகாலத்தில் பனீ இஸ்ராயீல் கூட்டத்தார் தங்கள் தேவாலயமாகிய பைத்துல் முகத்தஸில் பல அக்கிரமங்கள் செய்தனர். அவர்கள்மீது அல்லாஹு 'புக்து நுஸ்ஸர்' என்ற (மஜூஸி) கொடுங்கோல் அரசனை ஏவினான். அவன் படையெடுத்து வந்து யூதர்களை வென்று அடிமைப் படுத்தி பைத்துல் முகத்தஸ் நகரையும் அழித்துப் பாழாக்கினான். இந்தச் சம்பவத்தை அறிந்த உஸைறு என்ற நபி அவர்கள் பைத்துல் முகத்தஸைப் பார்வையிடுவதற்காக வந்தார், நாசப்பட்டு அழிவுற்ற காட்சியைக் கண்டு பரிதவித்து ''ஆ! முகடோடு விழுந்து அழிந்துபட்டிருக்கும் இந்தநகரத்தில் மக்களையும் வஸ்துக்களையும் 'அல்லாஹு' எவ்வாறு வளம்பெறச் செய்யப் போகின்றான்'' எனக் கூறியவர்களாக, சற்று தூரத்தில் ஓர் மரத்தின் கீழ் ஒதுங்கி, பிரயாண அலுப்பினிமித்தம் சவாரி செய்து வந்த கழுதையை அந்த மரத்தில் கட்டிவிட்டு, கொண்டுவந்த கட்டுச் சாதத்தையும், குடிப்பையையும் மரத்தின் மேல் தொடங்கவிட்டு நித்திரை கொண்டனர்.

எனவே, அவருடைய இந்தச் சந்தேகத்தை நிவர்த்திக்கும் பொருட்டு, **"அல்லாஹு** (நித்திரையிலிருந்த) **அவரை நூறு வருடங்கள் வரை மரணிக்கச் செய்தான்,"** எழுபது வருடங்களுக் கிடையில் 'புக்து நுஸ்ஸர்' என்ற அரசனும், அவனுடைய கூட்டத்தாரும் மாண்டுபோயினர். அப்பால் யூதர்கள் மறுபடி பைத்துல் முகத்திஸில் குடியேறி, ஊரை முன் இருந்ததைப் பார்க்கினும் பன்மடங்கு நல்ல முறையில் வளப்படுத்தி, முப்பது வருடங்களாக பரிபாலனம் செய்து கொண்டிருக்கும்போது, அல்லாஹு **"பின்னர் உஸைறு நபியை உயிர்ப்பிக்கச் செய்து"**, (அவரை நோக்கி) ('உஸைரே'!) **"இந்த நிலையில் நீவிர் எவ்வளவு காலம் இருந்தீர்"**? எனக்கேட்க, **"ஒரு நாள்**



**அல்லது ஒரு நாளின் சிறிது பாகம் இருந்திருப்பேன்,"** எனக் கூறினார். (அதற்கவன்) **அல்ல;நீவிர் நூறு வருடங்கள்** (இந்தநிலையில்) **இருந்தீர்** (இதோ!) **உமது ஆகாரத்தையும் பானத்தையும் பாரும்;** (அவை இதுவரை) **கெட்டுப் போகவில்லை;** (ஆனால்) **உம்முடைய கழுதையைப் பாரும்** (அது இறந்து எலும்பெல்லாம் மக்கிக் கிடக்கின்றது) **இன்னும் உம்மைப்போன்ற மனிதர்களுக்கு ஒரு திருஷ்டாந்தமாக ஆக்குவதற்காக** (கழுதையின் உக்கிப் போன) **எலும்புகளையும் நீவிர்** (கவனித்துப்) **பாரும். எவ்வாறு அவைகளைக் கூடாகச் சேர்த்து, அதன்மீது மாமிசத்தை அமைக்கின்றோம்,** எனக் கூறி (அவ்வாறே உயிர்ப்பித்துக்காட்டி)னான். (இவை யாவும்) **அவர் முன் தெளிவாக நடைபெற்றபோது** (அவர்) **"நிச்சயமாக அல்லாஹு யாவற்றின் மீதும் மிக்க ஆற்றலுடையோன் என்பதை உறுதியாக அறிந்துகொண்டேன்" என்று கூறினார்.** ***(2-259)***

உஸைறு நபி, உயிர் பெற்றெழுந்த கழுதையின்மீது சவாரி செய்து சீர்பெற்று விளங்கிய பைத்துல் முகத்திஸைப் பார்வை செய்து, ஆச்சரியத்தில் மூழ்கியவராக எல்லாம் வல்ல ஆண்டவனைப் புகழ்ந்து கொண்டே தமது ஊர் வந்தடைந்தார். அங்கு அடையாளம் தெரியாத சில மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. ஒரு வீட்டை அடுத்துப் பார்க்கும்போது, இரு கண்கள் குருடாகவும் கால் கை முடமுமுள்ள ஓர்கிழவியிருப்பதைக் கண்டு, அவளிடம், ''இது உஸைறுடைய வீடல்லவா?'' என்று வினவ, அதற்கவள் ''ஆம்; நூறு வருடங்களாக உஸைறுடைய பெயரைச் சொல்லுவாரில்லையே! நீவிர் யார்?'' என்றபடியே ஏங்கி அழுதாள். அதற்கவர் ''அழ வேண்டாம் நான்தான் அந்த உஸைறு'', எனக் கூறியபோது, ''ஸுப்ஹானல்லாஹி நீர் எப்படி உஸைறு ஆகுவீர்? எனக்குச் சொல்லும்'', என்று அந்தக் கிழவி கேட்க, அதற்கவர் ''அல்லாஹு ஒரு சோதனைக்காக என்னை நூறு வருடங்கள்வரை மரணிக்கச் செய்து, இப்போது ஹயாத்தாக்கினான்'' என்றார். இது கேட்ட அந்தக் கிழவி மகிழ்ச்சியோடு ''அப்பா உம்முடைய பிரார்த்தனையை ஆண்டவன் ஒப்புக் கொள்பவனாக விருப்பதால், உம்மை நான் கண்ணாரக் கண்டு மகிழ்தவதற்கு எனது கண்கள் வெளிச்சமாகும் பொருட்டு நீவிர் இறைவனிடம் பிரார்த்தனை செய்யும்'' என வேண்டினாள்.

அப்படியே அவர் இறைவன்பால் துஆ இரந்து அவரின் இரு கண்களிலும் தமது கைகொண்டு தடவ, கண்கள் திறந்து முன்போல்

பார்வை கிடைக்கப்பெற்றாள். பின்பு அந்தக் கிழவியின் கையைப் பிடித்து "அல்லாஹ்வின் உத்தரவின்படி எழும்" என்றார்; உடனே அவளது முடமாகியிருந்த கால் கைகள் செம்மையாகி எழுந்தாள். அந்தக்கிழவி அவரைப் பார்த்து, "நீர் உஸைறு என்பதாக பனீ இஸ்ராயீல் கூட்டத்தினரிடம் நான் போய் சாட்சி கூறுகிறேன்" என விரைந்து சென்று, உஸைறுடைய 118 வயதான மகனிடமும், பேரர்களிடமும், தனக்கு நேர்ந்த சம்பவங்களைக் கூறினாள். அந்தக் கூட்டத்தில் பலர் நிச்சயமாக உஸைறு வந்து விட்டாரென்று, ஆரவாரித்து, அவரை நம்பினர்; சிலர் அவரை நம்பவில்லை. எனவே, அந்தக் கூட்டத்தாரில் சில பெரியார்கள் உஸைறு நபியிடம் "நீவிர் நிச்சயமாக உஸைறு என்றிருப்பின், உமது வலது தோள் புயத்திற் கிடையில் கறுத்த மறு ஒன்று இருத்தல் வேண்டும்; அது உஸைறு டைய அடையாளங்களில் ஒன்று' என அவரை நெருங்கிப் பழகிய வர்கள் சொல்லியிருப்பதால், உமது புயத்தைக் காண்பியும்" எனக் கூற அவர் காண்பித்தார். அவர்கள் கூறியபடியே பெரிய மறு ஒன்று இருக்கக் கண்டு, இவர் அல்லாஹ்வின் நபி உஸைறு தான் எனச் சாட்சி கூறி அவருக்கு வழிப்பட்டார்கள். (தப்ஸீர்)

***"உங்களில் நல்ல நடத்தையுடையோர் எவர்களென்று உங்களைச் சோதிக்கும்பொருட்டே அவன் மரணத்தையும் வாழ்க்கையையும் சிருஷ்டித்திருக்கின்றான்; அவன் (யாவற்றையும்) மிகைத்தோன், மிக்க மன்னிப்புடையோன்."*** (67-2)

"மனிதப் படைப்பைச் சிருஷ்டிப்பதற்கு 2000-ம் வருடத்திற்கு முன்னமேயே மரணத்தை இறைவன் ஆயத்தம் செய்துள்ளான்; இத்தகைய மரணமாகிய மீளா யாத்திரையை மனிதனுக்கு விதிக்கப்படாதிருப்பின், ஆண்டவன் ஒருவன் உள்ளான்; என்ற எண்ணமே யாருக்கும் வராது." (ஹதீஸ்)

மரணத்தை விலக்கச் சக்தி வாய்ந்தவர் யாருமே இருக்கப் போவதில்லை. மரணத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளச் சூழ்ச்சிகள் செய்து, இறுதியில் படுதோல்வியுற்ற ஒரு சிலரின் சரிதைகளைக் கீழே தருகிறோம்.



## எமனை வெல்ல முயன்றோர்

فَمَآ اَغْنٰى عَنْهُمْ مَّا كَانُوْا يَكْسِبُوْنَ ۝

***"அவர்கள் (தங்களை இரட்சித்துக் கொள்ளச்) செய்திருந்த வைகளில் ஒன்றுமே அவர்களுக்குப் பயனளிக்கவில்லை."***

அந்தக் காலத்தில் மலக்குல் மவ்த்து (அலை) மனிதர்களிடம் மனித உருவத்தில் நேராகச் சென்று, உயிர்வாங்கும் சட்டம் இருந்து வந்தது. ஹஸ்ரத் சுலைமான் (அலை) அவர்கள் காலத்தில், அவர்கள் தர்பாரில் நடந்த சம்பவமொன்றை மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) அவர்கள் தமது 'மஸ்னவி ஷரீப்' என்ற இலக்கிய நூலில் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்கள். அந்தச் சம்பவத்தைச் சுருக்கமாக உங்கள் கவனத்திற்குத் தருகின்றோம்.

## வரும் விதி வந்தே தீரும்

ஒருநாள் காலை நபி சுலைமான் (அலை) அவர்கள் தர்பாரில், ஒரு சாது ஓடோடி வந்து சேர்ந்தார். அவர் முகம் கவலையால் மஞ்சளாகவும், உதடுகள் நடுக்கத்தால் நீலமாகவுமிருந்தன. சுலைமான் (அலை) அவர்கள் அவரைப் பார்த்து "ஓ மனிதரே! உமக்கு என்ன நேரிட்டது? இவ்வாறு ஓடிவரக் காரணம் என்ன?" என்று கேட்டார்கள்; அதற்கு அவர், "எமதூதர் கோபாவேசத்தோடும், பயங்கரத் தோற்றத்தோடும் என்னைக் கூர்ந்து நோக்கினார்" என்று விடையளித்தார்.

சுலைமான் (அலை) அவர்கள் அவரை நோக்கி, "சரி இப்போது உமக்கு வேண்டுவதென்ன?" என்றார்கள். "ஓ உயிர் காப்பாளரே! என்னை இங்கிருந்து ஹிந்துஸ்தானம் கொண்டு போகும்படி காற்றுக்கு உத்தரவு கொடுங்கள். இந்தத் தொண்டன் அந்த இடத்துக்குப் போனால், உயிர் தப்பித்துக் கொள்வான்" என மன்றாடினார். ஆகவே, நபி சுலைமான் (அலை) அவர்கள், அவர்மீது இரங்கி, காற்றுக்குக் கட்டளையிடவும், அது அந்த மனிதரை ஆகாய மார்க்கமாக விரைவில் ஹிந்துஸ்தானில் 'சோமனாத்' என்னும் ஊரில் கொண்டு போய்ச் சேர்த்தது.

அடுத்தநாள் நீதி விசாரணைச் சமயத்தில் ஹல்ரத் சுலைமான் (அலை) அவர்கள் 'இஸ்ராயில்' (அலை) (எமதூதர்) அவர்களை வினவினார்கள். அதாவது:- ''ஓ இறைச் சேவகரே! அந்தச் சாதுவை எதற்காகக் கோபாவேசத்தோடு உற்றுப் பார்த்தீர்? ஒருவேளை அவர் வீட்டை விட்டு நாடோடியாகப் போகட்டுமென்று நீவிர் இந்த வேடிக்கை செய்தீர் போலும்!'' என்று கூறவும்; அதற்கு எமதூதர், ''ஓ அகிலத்தின் அதிபரே! அவர் தன் புத்தி விகற்பத்தால் என்னைக் கோபாவேசமாக இருந்ததாக எண்ணி இருக்கலாம். ஏனெனில், எம்மிறைவன் இந்த மனிதரின் உயிரை, இன்று ஹிந்துஸ்தானில் கைப்பற்றும்படி ஏவினான். ஆனால், அவர் இந்த இடத்தில் இருப்பதைக் கண்டு அதிக வியப்புற்று, அவர் உயிரைக் கைப்பற்றும் யோசனையில் கலக்கமுற்றேன். இந்த மனிதருக்கு நூறு இறகுகளிருந்தாலும் ஹிந்துஸ்தானம் செல்வதற்குச் சாத்தியமாகாதே! என்று அதிசயித்தேன். முடிவில் இறைவன் கட்டளைப்படியே ஹிந்துஸ்தான் சென்று, அவரை அங்கு கண்டுபிடித்து, அவர் உயிரைக் கைப்பற்றினேன்'' எனப் பகர்நதார்கள்.

## ஒரு தனவந்தரின் கதி

ஏராளமான செல்வங்கள் தேடி, களிப்படைந்த ஒரு தனவந்தன், தனது வாழ்நாட்களை உல்லாசமாகவும், சந்தோஷமாகவும் கழிக்க எண்ணங்கொண்டு அழகிய மாளிகை ஒன்று கட்டி முடித்தான். தனது உற்றார் உறவினரை வரவழைத்து அறுசுவை உண்டிகளால் மகிழ்வித்துப் பின் ஒரு சோபாவில் வீற்றிருந்து தன் மனத்துக்குள்ளே:-

''ஏ இதயமே! உன் பொருட்டு அளவற்ற சொத்துக்களும் திரவியங்களும் தேடிக் குவித்துள்ளேன். இனி நீ ஏக சுகபோகமாய் அனுபவித்து சந்தோஷ சாகரத்தில் மூழ்கி இருக்கக் கடவாய்.''

என்று பெருமை பாராட்டிக் கொண்டிருக்கும்போது, ஒரு பரதேசி அந்த மாளிகையின் அண்மையில் வந்து வாயிலைத் தட்டினார். வேலையாட்கள் வந்து கதவைத் திறந்து பார்க்க, பரதேசியாக இருப்பதைக் கண்டு வெகுண்டு,

''ஓய், பரதேசி! இங்கு நில்லாதேயும்; இந்தச் சமயத்தில் உமக்கு இங்கு என்ன வேலை, போம்'' என்று விரட்டினர். அப்போது அந்தப் பரதேசி அன்னோரைப் பார்த்துமிகச் சாந்தமாக, ''உங்கள்



எஜமானரோடு சிறிது பேசவேண்டியிருக்கிறது; அவர் அவசியம் வரத்தான் வேண்டும்; நான் காத்திருப்பதாகப் போய்ச் சொல்லுங்கள்,'' என்று வேண்டிக்கொண்டார். அதைக் கேட்டு வேலைக்காரர்கள்:-

''ஓய் பரதேசி! எங்கள் எஜமானின் நிலைஎன்ன! உம்முடைய நிலை என்ன! உம்மைப்போன்ற பரதேசியைப் பார்க்கவா வருவார்? அதிலும் இந்தச் சமயத்திலா? புத்தி கெட்ட பரதேசி! போம்! போம்!'' என்று கடிந்து கூறிக் கதவை மூடிக் கொண்டு எஜமானனிடம் அறிவித்தனர்.

**எஜமானன்:-** ''என்னைப் போன்ற பிரபுவைப் பார்ப்பதற்கு ஒரு அற்பப் பரதேசியா வந்தான்? அவனுக்கு எவ்வளவு துணிவு! அவனை ஏன் சும்மா விட்டீர்கள்? கட்டிவைத்து நையப் புடைத்து உதை கொடுக்கலாகாதா?'' என்று கோபாவேசத்தோடு அதட்டிக் கொண்டிருக்கையில், வெளியே நின்ற பரதேசி கதவில் ஓங்கி அடித்து, ''என்னை யார் என்று நினைத்தீர்கள்! நான் 'எமன்' என்பது ஞாபகம் இருக்கட்டும். உங்கள் எஜமானனிடம் போய்ச் சொல்லுங்கள்'' என்று கர்ச்சனை செய்தார். இந்தவிஷயம் காதில் எட்டியதுதான் தாமதம், உடனே வேலை ஆட்களும் எஜமானனும் இடிவிழுந்ததுபோலத் திடுக்குற்று மலைத்து நின்று விட்டனர்.

பின்னர் எஜமானன் ஒருவாறு மயக்கம் தெளிந்து, மெல்ல எமதூதரிடம் வந்து, அடிதொழுது தலைசாய்த்து வணங்கி நின்று, இரகசியமாக, ''எனக்குப் பகரமாக என்னுடைய வேலையாட்களில் ஒருவனுடைய உயிரை வாங்கிக்கொண்டு போங்கள். என்னை அன்புகூர்ந்து விட்டுவிடுங்கள்;'' என்று கெஞ்சிக் கேட்டு அழ ஆரம்பித்தான். எமதூதர் எதையும் செவியில் வாங்கிக் கொள்ளாமல் உள்ளே புகுந்து,

''இனி உனது வஸ்துக்களையும் பொருட்களையும் பற்றிய விவகாரங்களை முடித்துச் செய்யவேண்டியவற்றையும் முறைபோல் செய்துகொள். நான் உனது உயிரைக் கைப்பற்றியல்லாது திரும்புவதில்லை'' என்று கட்டாயப்படுத்தினார். இது கண்ட எஜமானன் புத்தி தடுமாறித் தனது பொன்னையும் பொருளையும் எல்லாம் கொண்டுவந்து குவித்து மிகவும் மனவருத்தத்தோடு, ''நான் அரும்பாடுபட்டுத் தேடிய ஆசைச் செல்வங்களே! உங்களை அல்லாஹ்வின் சாபம் இப்போது சூழ்ந்து கொண்டது. நீங்களல்லவா!

என்னை இறைவனுக்கு வழிபட்டு நடக்கவொட்டாமல் மதிமயங்கிக் கேடான பாதையில் இழுத்து முடிவில் இந்தப்படுமோசமான நிலைக்குக் கொண்டு வந்தீர்கள்,'' என்று வருந்திக் கூறினான்.

இங்ஙனம் கூறக்கேட்ட பொருட்கள் இறைவனது வல்லமையால் பேசத் தொடங்கின.

''நீ எங்களைத் தூசிப்பானேன்? இராசாக்கள்,பிரபுகளுக்காகவும், பெருமைக்காகவுமல்லவா நீ எங்களைப் பயன்படுத்தினாய்; நல்லடியார்க்கும் ஏழையெளியவர்க்கும், மற்றும் நல்ல காரியங்களுக்கும் எங்களை நீ பங்கிட்டுக் கொடுத்தாயில்லை. உனது மனத்திற்கிசைந்த மங்கையரோடு சுகபோக வாழ்வுக்கும், டாம்பீகத்திற்கும், மற்றும் தீய நடத்தைகளுக்கும் ஊதாரித்தனமாகச் செலவு செய்தாய். எங்களை நல்வழியில் செலவு செய்திருந்தால், நாங்கள் உனக்கு எப்போதும் பயன்பட்டிருப்போமல்லவா. இப்போது எங்களால் என்ன செய்ய முடியும்?'' என்று சொல்லி முடித்ததும், எமதூதர் அவனது உயிரைக் கைப்பற்றினார். அவன் உடல்தானே அடியற்ற மரம்போல் தரையில் சாய்ந்து உயிர் நீங்கினான். சந்தோஷத்தில் மூழ்கியிருந்த அந்த மாளிகை துன்ப சாகரத்தில் மூழ்கியது.

(திக்ருல் மௌத்)





## விதியும் மதியும்

**'ஹகீம் அபலாத்தூன்'**: முற்காலத்தில் வாழ்ந்திருந்த இவர், ஒரு நல்ல வான சாஸ்திரியாகவும், பல கலைகளில் நிபுணராகவும் இருந்தார். இவர், இறந்தோரை உயிர்ப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, ஆன்மாவின் அந்தரங்கத்தை அறிந்து கொள்ளும் அளவிற்குப் பெரும் அறிஞர் எனச் சொல்லப்படுகிறது.

தனது ஆராய்ச்சியின் மூலம், தமக்கு மரணம் ஏற்படும் சமயத்தைக்கூட தெரிந்திருந்த இவர், அதைத் தடுப்பதற்குப் பல ஏற்பாடுகளும் செய்து கொண்டிருந்தார். சமயம் (எமன்) வந்ததும், அவருடைய முயற்சிகள் எதுவுமே பயனளிக்காமல் மரணத்தில் சிக்கிக்கொண்டார். இவரைப்போன்று 'ஜாலிநூஸ்' என்பவரும் ஒருவராவார். இதனையே இமாம் மாப்பிள்ளை ஆலிம் அவர்கள் 4-வது பாடலில் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் 'இல்யாஸ்' (அலை) அவர்களிடம் மலக்குல் மவ்த்து (அலை) வந்து,உங்கள் உயிரைப் பிடிக்கும்படி அல்லாஹு என்னை ஏவியுள்ளான் என்றார்கள். இதனைக் கேட்ட நபி அவர்கள் அதிர்ச்சியுடன், ஏங்கி ஏங்கி அழுதனர். ''அல்லாஹ்வின் நபியே! இந்த அழுகை துனியாவின் பேரிலா? அல்லது மரணத்தின் பேரிலா? என்று மலக்குல் மவ்த் (அலை) கேட்டதற்கு ''இவைகளைப் பற்றி அழவில்லை, எனக்குப் பின்னர், அனேக சாலிஹான நல்லடியார்கள் அல்லாஹுவை இபாதத்து (வணக்கம்) செய்து கொண்டும், 'திக்ரு' செய்து கொண்டுமிருப்பார்கள். நான் இப்போது இறந்துவிட்டால், அந்த நற்செய்கைகள் செய்வதற்கு எனக்கு வாய்ப்பு (நஸீபு) இல்லாமலாகிவிடும் என்பதை நினைத்துத்தான் அழுகிறேன்'' என்றார்கள். அப்போது அல்லாஹு அறிவித்தான், 'ஏ! மலக்கும் மவ்த்தே! நம்முடைய நபி இல்யாஸ்' என்னை மிகுதமாக வணங்குவதற்கும், துதி செய்து கொண்டிருப்பதற்கும் ஆதரவு வைத்ததனால் அவருடைய உயிரைப் பிடிக்க வேண்டாம். அவரை இறுதி (கியாமத்) நாள்வரையும் ஹயாத்துடையவராக ஆக்கிவிட்டோம்'' என அறிவித்தான்.

நபி இல்யாஸ், இத்ரீஸ்,கிள்ரு, ஈஸா அலைஹிமுஸ்ஸலாம். இந்தநால்வரும் இறுதி நாள்வரை உயிருடன் இருந்து அப்பால் மரணிப்பார்கள்.

(தூர்றத்)

விதி இரு வகைப்படும் 1. 'முஹ்கம்'+ (நிச்சயத் தீர்ப்பு) 2. 'முப்றம்' (செய்கையின் பொறுப்பில் நிகழும் தீர்ப்பு) இரண்டாவது வகையிலுள்ள தீர்ப்பை மதி நுட்பத்தால் (அதாவது:- நற்செய்கைகளைச் சமயத்திற்கு ஏற்றவாறு செய்தல், இல்லாதவர்களுக்கு ஆடை, ஆகாரம் கொடுத்தல், செய்த குற்றம் உணர்ந்து மன்னிப்புக் தேடல், பெற்றோர், மற்றும் பெரியோர்களின் துஆப் பேற்றினைப் பெறுதல் முதலியவைகளால்) விதியை வெல்லுதல் இயலும்.

**அல்லாஹ¬ எதை நாடுகின்றானோ, அதை அழிக்கவும், நிலைக்கவும் செய்கின்றான். அசல் பதிவு (லவ்ஹ¬ல் மஹ்பூள்) அவனிடமே உள்ளது. *(134-40)***

அல்லாஹ¬ எந்தவகைப் படைப்பையும், அவை பூலோகத்தின் கண் தோன்றுவதற்கு முன்னமேயே, ஏதோ ஒருவிதப் படைப்புடனே படைத்துவிடுகிறான். அவ்வாறே ஒரு பீடையையும் படைக்கின்றான். பின்னர் யாருக்கு வேண்டி அப்பீடை படையுண்டதோ, அவர்மீது அதைச் சாட்டுகின்றான். அவரிடமிருந்து நன்மொழி, நற்செய்கை (ஈகை) முதலியன மேலோங்கும்போது, அது, அந்தப் பீடையைத் திருப்பிவிடுகிறது. சில வேளை மரணம் வரும் சமயம், நன்மைகள் எதிரே சென்று, அந்த மரணத்தைத் திருப்பிவிடுகிறது. இதனையே பெருமானார் (ஸல்) அவர்கள்:-

**லாயுரத்துல் கலாஉ இல்லத் துஆஉ வலாயஸீது பில்உம்றி இல்லல் பிர்று.**

''விதியைப் பிரார்த்தனை (துஆவை)யேயொழிய வேறொன்றும் தட்டாது; வாழ்நாளை நீடிக்கச் செய்வது, உபகாரங்களே யொழிய வேறொன்றுமில்லை'' எனக் கூறியுள்ளார்கள். இதிலிருந்து:- அல்லாஹ்வுக்குகந்த நற்செயல் புரிவதேயன்றி, வேறு எந்த உபாயத்தாலும் விதியை வெல்லமுடியாது என்பது தெளிவு.



## எங்கு ஒளிந்தாலும் மரணம் விடாது

أَيْنَ مَا تَكُونُوا يُدْرِكْكُمُ الْمَوْتُ وَلَوْ كُنْتُمْ فِي بُرُوجٍ مُشَيَّدَةٍ

**''எங்கு (ஒளிந்து) இருந்த போதிலும், மரணம் உங்களை அடைந்தே தீரும்; மிகப் பலமான உயர்ந்த கொத்தளத்தின் மீதிருப்பினும் சரியே.''**

முஜாஹித் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:-

முன்னொரு காலத்தில் ஒரு சீமாட்டியிடம் வேலையாள் ஒருவன் இருந்தான். அந்தச்சீமாட்டிக்குக் குழந்தை ஒன்று பிறந்தது. அப்போது தன் வேலையாளிடம் விளக்கு ஏற்றி வரும்படி ஏவினாள். அப்படியே அவன் விளக்குக் கொண்டு வரும்போது, வாசலில் ஒரு பரதேசி நின்று கொண்டு ''அப்பா! இங்கு என்ன குழந்தை பிறந்தது?'' என்று வினவினார். அதற்கவன் ''பெண் குழந்தை'' எனப் பதில் கொடுத்தான். அதற்கவர், ''இந்தக்குழந்தை பருவம் அடைந்ததும் நூறு ஆண்களுடன் விபசாரம் செய்து, இறுதியில் இந்த வீட்டில் இப்போது வேலை பார்த்து வருபவனைத் தனது கணவனாகக் கொண்டு வாழ்க்கை நடத்துவாள். அந்தக்காலத்தில் ஓர் சிலந்திப் பூச்சியின் விசத்தின் காரணமாகவே மரணிப்பாள்,'' எனக்கூறி மறைந்தார். இதைக்கேட்ட அவன் பிரமித்து, 'இந்த விபசாரியையா நான் மணந்துகொள்ள வேண்டும்? எனக்கு அது அழகல்லவே!' என்ற முடிவில் வேகமாய்ச் சென்று அந்தக் குழந்தையின் வயிற்றைக் கிறிவிட்டு யாரும் அறியாவண்ணம் கப்பலேறி தூரதேசம் சென்றான்.

பெற்றோர்கள் பரிதவித்து குழந்தையின் வயிற்றைச் சுகப்படுத்திப் பாதுகாத்து வளர்த்து வந்தனர். அந்தக் குழந்தை வளர்ந்து யௌவன பருவம் அடைந்ததும் பெற்றோரைப் பிரிந்து கடலோரப் பட்டினம் வந்து, தனது இச்சைக்கிசைந்தவாறு விபசாரத் தொழிலில் ஈடுபட்டிருந்தாள். சில காலத்திற்குப் பின் அந்த வேலைக்காரன் மிகுந்த செல்வத்துடன் திரும்பிவந்து, அந்தப் பட்டினத்திலேயே ஒரு கிழவியின் ஆதரவில் வீடு ஒன்றெடுத்து, அதில் வசித்தான். பிறகு, அவன் அந்தக் கிழவியிடம் தனக்கு விவாகம் செய்து கொள்ள நல்ல பெண் ஒன்று பார்க்கச் சொல்ல, அவள் ''இந்த ஊரில் ஒரு பெண்

ணிருக்கிறாள்; அழகும் பொருளும் தனிமையுமுடையவள்; அவளை மணம் செய்ய ஒப்புக் கொள்ள வைக்கலாம்'' என்று கூற, அதற்கவன் அந்தப் பெண்ணைத் தன்னிடம் அழைத்து வரும்படி ஏவினான்; அந்தக்கிழவி அவளிடம் சென்று அவனின் பணப்பெருக்கையும் விசேஷ குணத்தையும் எடுத்துக் கூறினாள். இதைக்கேட்ட அவள், ''இன்றோடு எனது கெட்ட பழக்க வழக்கங்களை விட்டும் விலகிக் கொண்டேன். உங்கள் சொற்படி அவருக்கே வாழ்க்கைப்பட்டு இல்லறம் நடத்து கிறேன்'' என்று அவளிடம் வாக்குக் கொடுத்தபின், இருவருக்கும் விவாகம் நடைபெற்றது.

கணவன் மனைவியாக இருவரும் மகிழ்வோடு வாழ்க்கை நடத்தும்போது ஒருநாள், அவன் தனது முந்திய விசயங்களை மனைவியினிடம் சொல்ல, அதைக்கேட்டு பிரமித்தவளாக ''இது என்ன ஆச்சரியம்? நான்தான் அந்தக்குழந்தை; இதோ! என் வயிற்றைப் பாருங்கள்; நீங்கள் வெட்டிய அடையாளம் கூட இருக்கிறது. மற்றைய விசயங்களும் உண்மையே; நான் வேசியாக இருந்தேன். என்னை மன்னித்தருள வேண்டும்'' என்று மன்றாடினாள். அப்போது அவன்:- தன்னோடு வாழ்ந்து வரும் நேர்மையில் அவளைப் புறக் கணிக்கவில்லை. முன்னர், ஒரு பரதேசி இவள் சிலந்திப் பூச்சி விஷத்தின் காரணமாக மரணிப்பாளென்ற விஷயம், அவன் நினைவுக்கு வரவே, அதையும் அவளிடம் சொல்லி, அவள் பயப் படாதவாறு தேற்றினான். பின்னர், அவளின் உயிருக்குப் பாதுகாப்பாக காட்டில் சிறு மலைக்குன்று ஒன்றில் கல்லைக் குடைந்து அதில் ஓர் மண்டபம் அமைத்து, பூச்சிப் புழுக்கள் ஒன்றும் புகாமல் சகல வசதிகளோடு அவளை அதில் வசிக்கச் செய்தான். சில நாட்களுக்குப் பின் அந்த மண்டபத்தில், ஓர் சிலந்திப் பூச்சி எப்படியோ வந்திருப்பதைக் அவள் கண்டு திடுக்கிட்டு ''நீ என்னைக் கொல்லவா வந்தாய்! இதோ உன்னைக் கொன்று விடுகிறேன்'' என்றபடி அதை அடித்தாள். அது கீழே விழுந்து துடிக்க, அதைத் தனது காலின் பெரு விரலால் மிதித்து நசுக்கினாள்; அதன் விஷம் நகக் கண்வழியாக ஏறி, கால் கறுத்து, அந்த வியாதியால் சரீரம் முழுதும் மாறுபட்டு மரணித்தாள்.

மனிதன் முன்யோசனையும் முயற்சியும் செய்கின்றான். ஆனால் ஊழ்வலி அவன் செய்த செய்வித்த எல்லாவற்றையும் நிர்முலமாக்கி விடுகின்றது.



இதன் முன்னூல் (ஹத்யா மாலை) ஆசிரியர்:-

போக்கால முற்றவன் போனானே
போன வழிதனில் மீளானே
சாக்காலம் ஏதென் றிருந்தானே
சண்டாளப் பாவி சறாமடயன்

போதும் பொருளென நம்பிக்கொண்டோன்
போகும்போ தெதைக் கொடுபோவன்
ஏதுமுண்டா வென கேட்கில் அவன்
என்ன சொல்வானோ நான்ஏது சொல்வன்

கல்லைக் குடைந்து கனகோடி
கட்டிய மண்டபத் துள்ளோடி
இல்லு ஈதென்று சதந்தேடி
இருந்தோரையும் பிடித்தாரே எமன்

என்று பாடியிருப்பதுபோல, விதிக்குப் பயந்து எங்கேனும் ஓடி ஒளிக்கும் அடியான், மறபடியும் அந்த விதியினுள்ளேயே சிக்குகின்றான்.

''மரணம் உங்கள் இன்ப சுகங்களைக் கெடுத்து, உங்கள் பலத்தையும் குறைத்து, உங்கள் அக்கம் பக்கத்தாரையும்விட்டுப் பிரித்து விடுமுன்னே, அந்த மரணத்தை சதா ஞாபகம்செய்து நல்வணக்க ஒழுக்கங்களை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள்.''

(ஹதீஸ்)

## நித்திரை மரணத்தின் சோதரன்

## 5

மரணத்தில் ஷக்கு வைத்தாயானால்
வல்லஉறக்கம் எவ்விதம் வந்தது
இரணமெவ்விதம் பசியும் தாகம்
இல்லாமலாக்கு தென்று பாரு
உறங்கி முடிந்தபின் விழிப்பெவ்விதம்
உனக்கு வந்தது சொல்லுமப்பா?
உரலில் அகப்பட்ட கரத்தையவன்
உலக்கையால் ஏதும் செய்திடுவான்.

**அரும்பதவுரை:-**

ஷக்கு - சந்தேகம். கரம் - கை. இரணம் - உணவு.

اَللّٰهُ يَتَوَفَّى الْاَنْفُسَ حِيْنَ مَوْتِهَا وَالَّتِيْ لَمْ تَمُتْ فِيْ مَنَامِهَا ۚ
فَيُمْسِكُ الَّتِيْ قَضٰى عَلَيْهَا الْمَوْتَ وَيُرْسِلُ الْاُخْرٰۤى اِلٰۤى اَجَلٍ مُّسَمًّى ۚ

**''மனிதர்கள் மரணிக்கும் பொழுதும், மரணிக்காமல் நித்திரையிலிருக்கும் பொழுதும், அல்லாஹு¬வே அவர்களுடைய உயிரைக் கைப்பற்றுகிறான்; பின்னர் எவர்கள்மீது மரணம் விதிக்கப்பட்டதோ, அவர்களுடைய உயிரைத் (தன்னிடமே) நிறுத்திக் கொள்கின்றான்; மற்றவர்களின் (உயிர்களை) குறிப்பிட்ட காலம் வரையில் (வாழ) அவனிடமே அனுப்பி விடுகின்றான்.''**

நண்பர்களே! மரணத்தைப்பற்றி இதுவரைக் கூறிவரப்பட்ட உண்மைகளை நீங்கள் நன்கு விளங்கிக் கொண்ட பின்பும், உங்களுக்கு மரணத்தின்மீது சந்தேகம் உண்டாகுமாயின், மேற்கூறிய திருமறை வசனத்திற்கு ஒப்ப, உங்கள் சரீரத்தின் தன்மையை நன்கு கவனித்துப் பாருங்கள். **''நித்திரை மரணத்தின் சோதரன்''**, என்ற நாயக வாக்கின் கருத்தையும் ஆராய்ந்து பாருங்கள். நித்திரையானது உங்களை உலக அலுவல்களிலிருந்து நீக்கிவிடுகின்றது. நரம்புகளில் சோர்வு ஏற்படுவதால் தேக உறுப்புகள் அசைவற்றுப் போகின்றன. உட்கரணங்கள் ஊக்கம் குன்றிப்போகின்றன. எதிர்பாராத விதத்தில் நித்திரை உங்களை, உட்கொண்ட உணவுகள் ஜீரணமாகியவுடன் பசி, தாகம் முதலியவைகள் உண்டாகி, உங்களைத் திரும்ப எழுப்பி விடுகின்றன. நீங்கள் விழித்தெழுந்து உணவும் தண்ணீரும் அருந்திக் கொள்வதால், நித்திரை மயக்கம் தெளிந்துவிடுகிறது. இவைகள் எல்லாம் எந்த இறைவனது செ கை என நீங்கள் உங்கள் நுண்ணறிவால் உணர்ந்து தீர்ப்புச் செய்வீர்களோ? அந்த இறைவனே; மரணத்திற்கு அறிகுறியாக நித்திரையைச் படைத்துள்ளான்.

நித்திரைக்குப் பின், அதிகாலையில் அவரவர் தொழிலும் வழக்கமும் தன்னிடமே வந்து விடுவதுபோல், கியாம நாளிலும் ஒவ்வொரு செய்கையும் அதைச் செய்தவரிடமே சேர்ந்துவிடும்.

''எந்த நிலைமையில் வாழ்க்கையை நடத்தினீரோ, அந்த நிலைமையிலேயே மரிப்பீர். எந்த நிலைமையில் நீர் மரிப்பீரோ, அதே



நிலைமையிலேயே எழுப்பப்படுவீர்'' என்பது பெரியோர் வாக்கியம். ஆகையால் ஒருவனது வாழ்க்கையில் எத்தகைய செயல், எத்தகைய பழக்க வழக்கம் அளவு கடந்திருந்தனவோ, அவற்றை அனுசரித்த உருவத்திலேயே அவன் எழுப்பப்படுவான்.

''உங்கள் உயிர் அவன் வசமே இருக்கிறது. அவன் உங்களை எந்தச் சமயத்திலும் ஆக்கவும் அழிக்கவும் வல்லமை உள்ளவன்'' என்று தெளிவு பெற்று, மவுத்தைப் பயந்து நல்அமல்களில் ஈடுபடுவீர்களாக.

## மரணத்தின் அவலநிலை

## 6

**ஷக்கானதில் மௌத்தைப் போலொன்றில்லை**
**ஷக்கில்லாத்தது மதுபோ லில்லை**
**இக்கான திலது தீர்ச்சை யாகும்**
**ஏழுவாரியை யமுத மாக்கி**
**உக்காவாகவே புகட்டு கிலும்**
**ஒழியாததன் கசப் பொருகாலமும்**
**பக்கா ஆலிமாம் யாபியீதான்**
**பகர்ந்தா ரிதுகளை இர்ஷாதிலே**

**அரும்பதவுரை:-**

ஷக்கு - சந்தேகம். இக்கா - இனிப்பு, வாரி - கடல், உக்கா - அமுதசுரபி, பக்கா ஆலிம் - தேர்ந்த அறிஞர். யாபியீ - ஒரு பெரியார். இர்ஷாத் - ஒரு தத்துவ ஞான நூல்.

وَجَآءَتْ سَكْرَةُ الْمَوْتِ بِالْحَقِّ ؕ ذٰلِكَ مَا كُنْتَ مِنْهُ تَحِيْدُ ۝

**''மரணத்தின் கஷ்டம் மெய்யாகவே வந்துவிடுமாயின் (அவனை நோக்கி) நீ தப்பிவிடக் கருதிய அவஸ்தை இதுதான்.'' (எனக் கூறப்படும்.)**

உலகத்தில் மனிதர்களுக்கிடையில் சாதாரணமாக யாரும் மரணத்தைப் பற்றிச் சிந்தனை கொள்வதில்லை; எந்தச் சமயத்திலும் மரணம் உண்டு என்ற ஞாபகமே இருப்பதில்லை. மரண அவஸ்தைப்

படுகின்ற நம் பந்துக்கள், பெற்றோர்கள், நண்பர்கள், மனைவி மக்கள் ஆகியவர்களைக் கண்ணால் கண்டும்கூட உணர்ச்சி பெறுவதில்லை. ஆனால், உயிர் நீங்கியவுடன் உடலுக்கு (மையித்) இந்த அவஸ்தை நிலை நீங்கி விடுகின்றது;

தூங்கையிலே வாங்குகின்ற மூச்சு- அது
சுழிமாறிப் போகையிலே போனாலும் போச்சு
பாங்கான திருநாளும் ஆச்சு- அங்கு
பலபேர்கள் கூடிக் கதைபேச லாச்சு (தூங்கையிலே)

என்றபடி, நேற்றுவரை பல இன்ப சுகங்களை அனுபவித்துக் கொண்டும், பலவித உலக காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டும் இருந்தவன், அடுத்த கணப்பொழுதில் எந்தவித முன்னறிவிப்பும் மரணத்தின் குறியும் இல்லாமலே உயிர் நீங்கிவிடுகிறான்.

துக்கம் விசாரிக்கச் செல்லும் மனிதர்கள் அங்கு கும்பலாகக் கூடியிருந்து, உலக வம்புகளை அளக்கின்றார்களேயொழிய, மரணத்தின் இயல்புகளைப்பற்றி சிந்திக்கவோ, ஒரு வார்த்தைகூடப் பேசவோ செய்கிறார்களில்லை. இதிலிருந்து மனிதர்கள் பொதுவாக மரணத்தைப் பற்றிய ஞாபகமே இல்லாதிருக்கின்றனர் என்று அறிந்துகொள்கிறோம்.

மரணமாகியவனுக்கு நேர்ந்த கதி, தனக்கும் எந்த நேரத்திலாவது சம்பவிக்குமெனப் பயந்து தன்னை எந்தச் சமயத்திலும் அதற்கு வேண்டித் தயார் செய்து கொண்டிருப்பவனே வெற்றிபெற்ற உண்மை விசுவாசி யாவான்.

''மரணத்தின் வேதனை மனிதர்களுக்குத் தெரிந்திருப்பது போன்று, விலங்கினங்களுக்குத் தெரிந்திருக்குமாயின், அவை மரணத்தை நினைந்து மெலிந்து, தசையும் கொழுப்பும் கரைந்து உருகி, வெறும் தோலும் எலும்புமாகக் காட்சி அளிக்கும்'' இன்னும் ''மரணத்தருவாயில் உண்டாகும் வேதனையானது உயிரோடிருக்கும் மனிதனைக் கூரிய வாளால் எழுபது தடவை வெட்டுவதைக் காணக் கடினமாக இருக்கும்.'' (நாயக வாக்கியம்)

அம்ரிப்னு ஆஸ் (ரலி) அவர்களின் புதல்வர் கூறியிருப்பதாவது:- மனிதனுக்குப் பேச நாவும், யோசிக்கப் புத்தியும் உண்டாகியிருக்க, மரணம் வரும்போது அதன் வேதனை இன்னவிதம் என்று ஒரு சிறிதளவேனும் எடுத்துச் சொல்ல அவனால்



முடிவதில்லை. எனது தந்தையார் மரணத்தருவாயில் உசாராக இருந்ததைக் கண்ட நான், ''தந்தையே! உங்களுடைய வேதனையைச் சிறிது எடுத்துக் கூறுங்கள்'' என்று வேண்டி நின்ற போது அவர்கள்:-

''மகனே! வார்த்தைகளால் விளக்கிக்காட்ட முடியாத நிலை, எனினும் சிறிது சொல்கின்றேன் கேள்; ஆண்டவன் பேரில் ஆணையாகச் சொல்கிறேன்; என் வேதனைகளில் 'ரன்வா' என்ற பிரமாண்டமான மலை சுமத்தப்பட்டிருப்பதுபோலும், எனது உயிர் ஊசித் துவாரத்திற்குள் நுழைந்து இழுக்கப்படுவது போலும், பூமியும் வானமும் ஒன்றோடொன்று உராய, அவற்றிற்கிடையில் அகப்பட்டு நெருக்கப்படுவதுபோலும், நான் இப்போது அவத்தைப்படுகிறேன்'' என்றுரைத்தார்கள்.

மரணம் அணுகும்போது, உலக சுகங்கள் யாவற்றையும் விட்டுப் பிரியப்போகும் கவலை ஒருபக்கம்; மனிதர்களுக்கிழைத்த அக்கிரமங் களும்,அநீதங்களும், அடாச் செயல்களும், முறை கேடுகளும் ஒன்றாய்த் திரண்டு, அப்போது மனத்தை நோவிக்கும் சிந்தனை ஒருபக்கம்; எமதூதர் சமீபித்துக் கொண்டிருக்கும் விரைவின் வேகத்தால் கலங்கும் இருதயத்தின் கலக்கம் ஒரு பக்கம், ஷைத்தானாகிய இப்லீசு லஃனதுல்லா(ஹ்)வால் ஏற்படும் சூழ்ச்சியின் ஏமாற்றம் மற்றொரு பக்கம்; அவயவங்கள் தத்தம் சக்தியில் நின்றும் தளர்ந்து, பார்க்கவோ, கேட்கவோ, பேசவோ உணர்வற்றிருப்பது ஒரு பக்கம்; இவ்வாறான துன்பங்களால் ஏக்கமுற்று தடுமாறிச் சமாளிக்க முடியாத நிலைமையில் தத்தளிக்கும் போது, தாகம் மற்றொரு பக்கம், அவனது நாக்கை இழுத்துச் சுருட்டிக் கொண்டு விடுகிறது. அப்போது ஏழு கடல் நீரையும் அமிர்தமாக்கி அவனுக்கு ஊட்டப்படினும் அவனது மரணத்தின் கசப்பு சிறிதளவேனும் குறையாது. அவன் தனது ஆசாபாசங்கள் யாவும் ஈடேற முடியாமல் அப்போது நிர்க்கதியாகிவிடுவான். அவனது பரிதவிப்பு, கூப்பாடு யாவும் பயனற்று, முடிவில் மரணவாளுக்கு இரையாகி விடுகிறான். இவ்வாறு நம் இமாம் ஷாபீயீ(ரஹ்) தங்கள் 'இர்ஷாத்' என்னும் நூலில் விவரித்துள்ளார்கள்.

## ஹத்யா விளக்கம்

## 7

நிலையில்லா துன்யா தன்னைவிட்டு
　　நீங்கும்போது நாற்பது ஹதியா
பலனாய்க் கொடுபோவ தெவர்மீதினும்
　　பெரிய பருளாகும் ஏதுக்கானால்
நலத்தைப் பயிர்செய்தோர் நலம்பெறுவார்
　　நஞ்சைப் பயிர்செய்தோர் நட்டமாவார்
உலகத்தா ரெல்லா மறியவேண்டி
　　உரைத்தேன் ஹத்யாவை அறிந்துகொள்வாய்.

**அரும்பதவுரை:-**

துன்யா- உலகம், ஹத்யா - இனாம், பருளு - கடமை.

أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَاكُمْ عَبَثًا وَأَنَّكُمْ إِلَيْنَا لَا تُرْجَعُونَ ○

**''நான் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காகவென்றும், நீங்கள் நம்மிடம் (திரும்ப) கொண்டு வரப்படமாட்டீர்களென்றும் எண்ணிக் கொண்டீர்களா?''** ***(23-115)***

இறைவன் நம்மை நோக்கி வினவும் இந்த வினாவிற்கு, ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பதில் கூறியே ஆகவேண்டும்; அதாவது உலக இரட்சகா! நீ என்னை வீணுக்காகப் படைக்கவில்லை; நிச்சயமாக நான் உன்னிடம் கொண்டு வரப்படுவேன்; என்பதாம்.

இந்த வசனத்தின் மூலம் அல்லாஹ் நம்மை அழகான வடிவத்தில் புத்தியும் திடமுமுள்ள மனிதனாகப் படைத்ததின் நோக்கமாவது:- அவனுக்குப் பொருத்தமான நல் வணக்க ஒழுக்கங்களில் சதா ஈடுபடுவதற்கும், அந்த வணக்கங்களின் மூலம், மரணத்திற்குப் பின் மறுமையுலகில் ஏற்படவிருக்கும் பயங்கர வேதனைகளைவிட்டும் விலகி அந்த வல்லோனின் திரு ''லிகா''வை அடைவதற்குமேயாகும்.

ஆரிபீன் (மெய்ஞ்ஞானி)களில் ஒருவர் கூறுகிறார்:-

''ஏ! சகோதரனே!! நீ உன் தாயின் உதிரத்தில் ஜனித்து இந்த உலகிற்கு வரும்போது, முதன் முதலில் அழுதுகொண்டே



பிறக்கின்றாய், அப்போது உனது வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்த உன் பெற்றோர், சுற்றத்தார் முதலானோர், மகிழ்ச்சியோடு சிரித்தவர்களாகவே உன்னை வரவேற்கின்றார்கள். அப்பால் நீ, வளர்ந்து வாழ்ந்து, உனது ஆயுள் முடிவுற்றதும் மரணம் அடைகின்றாய்; அதுசமயம் உனது மனைவி மக்கள் உறவினர்கள் அனைவரும் உனது பிரிவுக்காகத் துக்கித்து அழுகின்றார்கள். அப்போது நீயோ மகிழ்ச்சியோடு சிரித்தவனாக மறுமை உலகிற்குச் செல்ல வேண்டும், அப்பொழுதுதான் நீ வெற்றி பெற்ற பூரண மனிதனாவாய்.'' இதற்காகவேதான்;

நிலையற்றதும் சொற்பகால வாழ்வையுடையதும், மாயைகளால் நிறைந்ததுமான இந்தப் பிரபஞ்சத்தைவிட்டுப் பிரியுமுன் (மரணத்திற்குமுன்) ஒவ்வொரு மனிதனும் நாற்பது ஹத்யாக் (நன்கொடை)களை, தனது சொர்க்கத்தின் ஆதரவுக்கு வேண்டித்தயார் செய்து கொள்ளுதல் மிகமிக முக்கியமும் கடமையுமாகும்.

**''ஆணாயினும், பெண்ணாயினும், விசுவாசம் கொண்டு நற் கருமங்களை எவர் செய்தாலும், நிச்சயமாக நாம் அவர்களை (இம்மையில்) நல்ல வாழ்க்கையாக வாழச்செய்வோம். அன்றி (மறுமையிலோ) அவர்கள் செய்து கொண்டிருந்ததைவிட மிக்க அழகான கூலியையே நிச்சயமாக அவர்களுக்குக் கொடுப்போம்.''** ***(16-67)***

இந்த உலகத்தில் நாம் செய்யும் நன்மைக்கும் தீமைக்கும் தீர்ப்புத் தினத்தன்று கைம்மாறு கிடைப்பது நிச்சயமாதலின், நல்அமல்களில் ஈடுபட்டு நன்மைகளைத் தேடிக்கொண்டால் மட்டுமே நற்கூலி கிடைக்கப் பெறுவோம். எனவே, இறைவன் பணித்த ஏவல் விலக்கல்களைக் கடைபிடித்தொழுகுவதோடு, இங்கு கூறப்படும் நன்கொடைகள் தகுந்த மோட்ச சாதனங்களாக இருப்பதால், அவற்றைப் பெறும் தகுதி பெற்றோர்கள் ஆவர் என்றும், அவரவர்க்குச் செல்ல வேண்டிய உரிமைகள் இன்னின்னவையென்றும் தெரிந்து, உறுதி கொண்டு அதன்படி ஒழுகி வந்தால் அந்த நன்கொடைகள் சுலபமாகச் சித்திக்கும்.

**(இறுதி நாளில் இறைவன் மனிதனை நோக்கி) ''மெய்யாகவே என்னுடைய வசனங்கள் உன்னிடம் வந்தன; அவைகளைப் பொய்யாக்கினாய்; கர்வங்கொண்டாய்; அதனை நிராகரிப்பவனாகவே இருந்தாய்.'' (என்று கூறாமலிருப்பதற்காக, உங்கள் இறைவனால் உங்களுக்கு இறக்கி வைக்கப்பட்ட கட்டளைகளைப் பின்பற்றுங்கள்.)** ***(39-59)***

எனவே இந்த உலகிலுள்ள ஆண் பெண் இரு பாலாரும் அல்லாஹ்-ரஸுலின் கட்டளைக்கிணங்க நடந்து ஈடேற்றமும் நற்பதவியும் அடைந்து கொள்ளும் பொருட்டு, நற்குண நற் செயல்களில் நன்கு பழகி, அவற்றிலிருந்து இரத்தினமணிகளைப் போன்ற நாற்பது நன்கொடைகளைச் சேகரித்தல் வேண்டும். நபர் ஒன்றுக்கு நான்கு வீதம் பத்து நபர்களுக்கு அந்த நாற்பது நன் கொடைகளைக் காணிக்கையாகச் சமர்ப்பிப்பதற்காக (மறு உலகிற்கு)க் கொண்டு செல்ல வேண்டும்.

அந்தப்பத்து நபர்களினருக்காகச் சேகரிக்க வேண்டிய நன்கொடைகளைப் பற்றி பின்வரும் பாடல்களின் அத்தியாயங்களில் காணலாம்.

## பத்து ஹதியா பெறும் தகுதியாளர்களுக்குரிய நாற்பது ஹத்யாக்கள்

### 8

பத்துபேரி லொவ்வொரு வருக்கு
பங்கு நவ்வாலாய் கொடுப்பதறி
தத்துவமுள்ள இஸ்றா லுக்கும்
தரையாம் கப்ரு முன்கர்நகீருக்கும்
சற்றும் காபிர்மீ துருக்கம் வையா
சங்கை மாலிக்கு ரிள்வானுக்கும்
ஹத்து ஸய்பான ஸிராத்துமீஸான்
ஹாதிக்கும் ருஹு மவ்லாக்குமாம்

**அரும்பதவுரை:-**

இஸ்ராயீல்- எமன். கப்ரு - கல்லறை. முன்கர் வனகிர்- கேள்வி கணக்குக் கேட்கும் அமரர். காபிர்- விசுவாசம் கொள்ளாதவர், மாலிக்கு - நரகத்தின் அதிபர். ரிள்வான் - சுவனத்தின் அதிபர். ஹத்து- ஒழுங்கு. ஸிராத்து - பாலம், மீசான்- தராசு, ஹாதி- நேர்வழி காட்டுபவர். ருஹு - ஆன்மா. மவ்லா- இறைவன்.



## ஹத்யாக்களுக்குரிய பத்துப் பேர்கள்

1. மனிதனின் உயிரை வாங்குவதற்கு இறைவனால் ஏவப்பட்டுள்ள ''மலக்குல் மௌத்'' (அலை) (எமதூதர்)
2. உயிர் நீங்கிய உடலை அடக்கப்படும், 'கப்ரு' என்ற (புதைகுழி.)
3. கப்ரில் புதையுண்ட சில நிமிட நேரத்தில் அந்தக் கப்ராளியிடத்தில் நன்மை தீமைகளைக் குறித்துக் கேள்விகள் கேட்டுப் பதிவு செய்வதற்குப் பிரசன்னமாகும் 'முன்கர் வனகீர்' (அலை) என்ற இரு அமரர்.
4. ஏவல் விலக்கல்களை அறிந்தும், மாறாக நடக்கின்றவர்மீது இரக்கமின்றி செயலாற்றும் நரகத்தின் அதிபராகிய அமரர் 'மாலிக்' (அலை).
5. சுவனபதியின் அதிபராகிய அமரர் 'ரிள்வான்' (அலை).
6. 'ஸிராத்துல் முஸ்தகீம்' என்ற செவ்வையான பாதை.
7. அவரவர் செய்த நன்மை தீமைகள் குறிக்கப்பட்ட ஏடுகள் நிறுக்கப்படும் 'மீஸான்' என்ற தராசு.
8. உலக மக்களுக்கு நேர்வழி காட்டும்படி இறைவனால் அனுப்பப்பட்ட நபிகள் நாயகம் 'முஹம்மது' (ஸல்) அவர்கள்.
9. நம் உடலோடு சம்பந்தப்பட்டுள்ள 'ரூஹு' (ஆன்மா).
10. நம்மைப் படைத்து இரட்சிக்கும் ஆண்டவன் 'அல்லாஹு' ஜல்ல ஷஃனஹு.

ஆக இந்தப்பத்து நபர்களுமே ஹத்யாக்(நன்கொடை)களுக் குரியவர்கள். இந்த நபர்களின் விளக்கங்களும், அவரவர்களுக்குரிய ஹத்யாக்களும், 'குர்ஆன்', 'ஹதீஸ்' ஆகியவற்றின் ஆதாரங்களைக் கொண்டும், ஆரிபீன்களின் சொற்கோவைகளிலினின்றும் ஆங்காங்கே தருகின்றோம்.

# 1-வது தகுதியாளர் எமதூதர்

## 9

மலக்குல் மவ்த்தான இஸ்ராலுக்கு
        மவுலக்கேளுமே ஹத்யா நான்கு
வழக்காளி தன்னை பொருத்தமாக்கல்
        மவ்த்துக் காயித்தப் படுவதுவும்
விலக்க முடியாத மவ்த்ததனை
        விரும்புவது மூன்றாம் நான்காவது
பிலக்கேடால் தப்பிப்பேன அமல்
        பேணிகளா செய்வதிது நான்குமாம்.

அரும்பதவுரை:-

மலக்கு- அமரர். இஸ்ராயீல்- எமன். அமல்-வணக்கம், களாச் செய்தல்-விடுபட்ட கடமைகளைத் திரும்ப நிறைவேற்றல்.

### அமரர்களின் பண்பு

لَا يَعْصُونَ اللّٰهَ مَآ اَمَرَهُمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُوْنَ ○

***"அல்லாஹு அமரர்களுக்கு ஏவியதில் (அவர்கள்) ஒரு சிறிதும் மாறு செய்யார்; அவர்கள் தங்களுக்கிடப்பட்ட கட்டளைகளையே செய்து வருவார்கள்." (66-6)***

மானிட ஜென்மமெடுத்த நாம் மண்ணால் படைக்கப் பட்டிருப்பது போன்று;, அமரர்கள் ஒளியினால் படைக்கப் பட்டுள்ளார்கள்; நாம் உணவுகளை உட்கொள்ளுகிறோம்; ஆனால் அமரர்கள் உண்பதுமில்லை; உறங்குவதுமில்லை. அல்லாஹுத் தஆலாவின் கட்டளைகளை நிறைவேற்றுவதும், அவனை தஸ்பீஹு (தோத்திரம்) செய்வதும்தான் அவர்களது தொண்டாகும். அவர்களுக்கு மனைவி, மக்களில்லை; அவர்கள் இறைவனின் பரிசுத்த நல்லடியார்களாவர். அவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அல்லாஹு தானறிவான். திருக் குர்ஆனில் அவர்களில் பதினொரு கூட்டத்தார்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.



*1. முகர்ரபூன் 2. ஹாபூன் 3. ஹம்லத்துல் அர்ஷ் 4. கர்றுபிய்யூன் 5. கிராமுன்காதிபீன் 6. ரகீபுனு அதீது (7, 8) முன்கர் வ நகீர் 9. மாலிக் 10. ரிள்வான் 11. ஹப்ளத், (ஹாபிளீன்).*

இவர்கள் யாவரிலும் முதன்மை பெற்றவர்கள் 1. ஜிப்ரீல் 2. மீக்காயில் 3. இஸ்ராயீல் 4. இஸ்ராபீல் (அலைஹிமுஸ்ஸலாம்) அன்றி 5. முன்கர் 6. நகீர் 7. ரகீப் 8. அதீத் 9. மாலிக் 10. ரிள்வான் (அலைஹிம்) ஆக இந்த 10 பேரின் பெயர்களை அவரவர்களின் 'தரஜா' வரிசையின்படி மனப்பாடம் செய்து கொள்வது கடமையாகும்.

இவர்கள் அல்லாஹுவின் கட்டளைக்கு மாறாக நடக்கவும், பாவமான காரியங்களைச் செய்யவுமாட்டார்கள். மனிதன் முதலிய சீவராசிகளைப் பாதுகாத்தல், மனிதன் செய்யும் நன்மை தீமைகளை எழுதி வைத்தல், நபிமார்களுக்கு இறைவனின் கட்டளைகளை அறிவித்தல் முதலிய காரியங்களையும், இன்னும் மனிதர் மற்ற சீவராசிகள் மரணிக்கும்போது, அந்தந்த உயிர்களைக் கைப் பற்றுவதுமாகும். மழை பொழிவித்தல், காற்று, குளிர், உஷ்ணம் முதலியவற்றை நிகழச்செய்தல். கர்ப்பத்தில் சிசுக்களைக் காத்து, வெளிப்படுத்துதல் ஆகிய எல்லா அலுவல்களையும் அல்லாஹ்வின் அனுமதிப்படி இவர்களே செய்து வருகின்றனர்.

சுவர்க்கம், நரகம் இவைகளுக்கு அதிபதியாக ஆக்கப் பட்டிருப்பவர் களும், மனிதன் மரித்த பிறகும், கப்ருகளில் தோன்றி, அன்னாரிடம் கேள்வி கணக்குக் கேட்பவர்களும், எல்லாப் பொருள் களையும் பாதுகாப்பவர்களும், உலக முடிவுக்காக (சூர்) எக்காளம் ஊதுபவர்களும் இவர்களேயாவர். ஆகவே அமரர்களைக் கொண்டு விசுவாசிப்பது, ஈமானின் அம்சங்களில் ஒன்றாகும். இதுபற்றி இந்த நூலில் ஈமான் என்ற பாடத்தில் விரிவாகக் காணலாம்.

### எமதூதரின் விளக்கம்

قُلْ يَتَوَفّٰكُمْ مَّلَكُ الْمَوْتِ الَّذِيْ وُكِّلَ بِكُمْ ثُمَّ اِلٰى رَبِّكُمْ تُرْجَعُوْنَ ○

***"(நபியே!) நீர் கூறும்; உங்கள்மீது (உங்கள் இறைவனால்) சாட்டப்பட்டிருக்கும் 'மலக்குல் மௌத்' (என்ற அமரர்) தான், உங்களுடைய உயிரைக் கைப்பற்றுகின்றார்; பின்னர் உங்கள் இறைவனிடமே நீங்கள் திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள்."(32-11)***

'மலக்கல் மௌத்' (அலை) அவர்களின் தோற்றம் காண்பதற்கு மிகப் பயங்கரமாகவும், குரூரமாகவும் இருக்கும். மனத்துக்கு

அச்சத்தையும், நடுக்கத்தையும், மருட்சியையும் கொடுக்கும். பாவியாக இருப்பவர்களுடைய உயிரைக் கைப்பற்ற வரும்போது, எத்துணை பலசாலிகளாக இருப்பினும் எமதூதரின் வடிவத்தைக் காண்பதற்குச் சக்தி பெறமாட்டார்.

ஒரு அடியான் விசயத்தில் ஆண்டவனுக்குத் திருப்தி உண்டாகுமாயின், அவன் எமதூதரிடம், ''எனது அடியானிடம் போய் அவனது உயிரைக் கைப்பற்றுவீராக. அவன்மேல் எனக்கு மிகவும் உகப்பு உண்டாகியிருக்கிறது. அவனது வணக்கம் எனக்குப் போதுமானதாகும். நான் அவனை இதுவரையில் சோதித்துள்ளேன். எனக்குப் பிரியமான பதவியில் அவன் இருக்கின்றான்'' எனக் கூறுவான், உடனே எமதூதர் சில அமரர் சகிதம் நறுமணங்கமழ கிருபா நோக்குடன் சென்று வாழ்த்துக் கூறி அவனது உயிரை மிக இலகுவான முறையில் கைப்பற்றுவார். *(நா-வா)*

நபி இப்ராஹீம் (அலை) அவர்கள், மலக்குல் மௌத்தை நோக்கி ''ஒருவன் கிழக்கிலும், மற்றொருவன் மேற்கிலும், சிலர் கொள்ளை நோயிலும், பலர் படைக்களத்திலும், உயிர்நீத்தல் ஏற்பட்டால், ஏககாலத்தில் அங்கங்கே உள்ள உயிர்களை நீவிர் எப்படிக் கைப்பற்றுவீர்?'' என்று வினவியபோது, எமதூதர், ''உயிர்கள் எங்கு இருப்பினும் சரியே; நான் போகத்தகாத வேளைகளில் அவற்றை நன்கு ஞாபகஞ்செய்து கூர்ந்து நோக்குவேன். உடனே அவை எனது வலைக்குள் வந்து சிக்கிக் கொள்ளும்,'' என்றார்.

ஸய்திப்னு அஸ்லம் (ரஹ்) அறிவித்திருப்பதாவது:-

''**ம**லக்கல் மௌத் (அலை) தினம் ஐந்து வேளை எல்லா இடங்களுக்கும் சென்று, ஆதமுடைய மக்களின் முகத்தைப் பார்ப்பார். அந்தப் பார்வையால்தான் சில சமயம் மனிதன் திகிலடைந்து போகின்றான். இன்னும் அவர் மனிதனை அவனது, தொழுகை நேரங்களில் வந்து பார்வை இடுகின்றார். அவன் தொழுகையின் விதிகளைப் பேணி நடப்பவனாகவும், தமக்குரிய ஹத்யாக்களைச் சேகரித்தவனாகவும் இருக்கக் கண்டால், அவன் மரணிக்கும்போது, அவனிடம் மிக்க வாஞ்சையோடு அணுகுவார். அவனோடு வாதாடிக் கொண்டிருக்கும் ஷைத்தானை விரட்டிவிட்டு, அவனுக்கு; ''லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி'' என்ற 'தையிப் கலிமா' மூலமொழியை ஞாபகமூட்டி வைப்பார்.'' *(ஹதீஸ்)*



# எமதூதருக்குரிய ஹத்யாக்கள் நான்கு

## 1-வது ஹத்யா

## வழக்காளியைச் சமாதானப்படுத்துதல்

إِنَّمَا الْمُؤْمِنُونَ إِخْوَةٌ فَأَصْلِحُوا بَيْنَ أَخَوَيْكُمْ وَاتَّقُوا اللَّهَ
لَعَلَّكُمْ تُرْحَمُونَ ○

***''நிச்சயமாக விசுவாசிகள் யாவரும் சகோதரர்களே! ஆகவே உங்கள் சகோதரர்களுக்கிடையில் (பிணங்குமானால்) ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலைநிறுத்துங்கள். (இதில்) அல்லா(ஹ்)வுக்குப் பயந்து நடவுங்கள்; (இதன் காரணமாக) அவனுடைய அருளை நீங்கள் அடைவீர்கள்.'' (49-10)***

மேலேகாட்டிய ஆயத்தின்வழி, ஒரு தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகளைப்போல் ''ஈமான் கொண்ட முஸ்லிம்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரர்களாவர்'' என்று இறைவன் அறிவித் திருப்பதால், நாம் நமக்குள் விரோதமும் குரோதமும் கொள்ளாமலும், வேற்றுமை பாராட்டாமலும், களங்கமற்ற இருதயத்துடன் ஒருவருக் கொருவர் மனம், வாக்குக் காயங்களால் உதவி ஒத்தாசையோடு நடந்து கொள்வதும், எவர்களுக்கிடையிலாவது பிணக்கு ஏற்பட்டால் இயன்ற அளவு பிரயாசை எடுத்து இணக்கி வைப்பதும் அல்லா(ஹ்)வுக்கு அஞ்சி நடப்பதும் அவசியமாகும்.

''**அ**ல்லா(ஹ்)வின் நல்லடியார் அனைவரும் பிணக்கமின்றி ஒரே சகோதரராக வாழ்தலே எனது சுன்னத். (நல்வழி)நான் மக்கா வாசிகளுக்கும், மதீனா வாசிகளுக்கும் இடையில் சகோதரராக இருக்கிறேன்.''

''**ஒ**ரு மைல் தூரமாயினும் நடந்துபோய் நோயாளிகளைக் காணுங்கள்; இரண்டு மைல் தொலைவாயினும் கடந்து சென்று சகோதரர்களைச் சந்தியுங்கள்; மூன்று மைலானாலும் முன்வந்து பிணங்கியுள்ள கூட்டத்தாரைச் சமாதானம் பண்ணி வையுங்கள். அல்லா(ஹ்)வுக்கு வேண்டி இந்த விஷயங்களில் ஈடுபடுவோனது ஒவ்வொரு சொல்லுக்காகவும் ஓர் அடிமையை அவனது எஜமானனி

டமிருந்து போதிய விலை கொடுத்து மீட்டி விடுதலை செய்த பலனைக் கொடுக்க இறைவன் காத்திருக்கிறான்.''

''நோன்பின் பலனைப் பார்க்கிலும், தொழுகை, ஜகாத் இவற்றின் பலனைக் காட்டிலும், மேலானதொரு வணக்கத்தை நான் உங்களுக்குத் தெரிவிக்கக் கூடுமானால் அது பிணங்கிப் பிரிந்திருப்பவருக்கிடையில் சமாதானம் செய்துவைப்பதேயாகும்.''

''ஒருவர் தம்முடைய சகோதரரின் நாட்டத்தைப் பூர்த்தி செய்து வைக்கப் பிரயத்தனப்பட்டு, அந்தக் காரியத்தில் அவர் வெற்றியோ அல்லது தோல்வியோ, அடைந்த போதிலும் அவருடைய பாவங்களை யெல்லாம் அல்லாஹுத ஆலா மன்னித்து விடுவான்.'' (நா-வா)

சகோதரர்களே! பிணக்கு எங்கு உண்டாகியிருப்பினும் சரி, அங்கு சிரமத்தைக் கருதாமல் சென்று, கஷ்ட நஷ்டங்களையும் பொருட் படுத்தாமல், சமாதானம் பண்ணி வைப்பீர்களாக. சிலர் பிணக்கை உண்டு பண்ணி, அதனால் சண்டை சச்சரவு முதலிய பல கெடுதிகள் விளையத் தக்க அளவுக்கு அதில ஈடுபடுகின்றனர். இது அவர்களின் அறியாமையே ஆகும். இங்ஙனம் கெடுதிகள் உண்டுபண்ணுதல் பெரிய பாவம் என்பதை அவர்கள் உணர்வதில்லை.

இறைவன் கூறுகின்றான்:-

**''விசுவாசிகளில் இருவகுப்பார் தங்களுக்குள் சச்சரவு செய்து கொண்டால், அவர்களுக்கிடையில் சமாதானப்படுத்துங்கள்; அவர்களில் ஒரு வகுப்பார், மற்றொரு வகுப்பாரின்மீது வரம்புமீறி அக்கிரமம் செய்தால், அக்கிரமம் செய்தவர்கள் அல்லாஹுவினுடைய கட்டளை வரும் வரையில் அவர்களுடன் நீங்கள் எதிர்த்து நில்லுங்கள்; அவர்கள் (அல்லாஹுவின் கட்டளையின்பக்கம்) திரும்பிவிட்டால், நியாயமான முறையில் அவர்களுக்கிடையில் சமாதானம் செய்து நீதமாகத் தீர்ப்பளியுங்கள்; நிச்சயமாக அல்லாஹு நீதி செய்வோரை நேசிக்கின்றான்.''** ***(49-9)***

அல்லாஹு நம்மீது அன்புகூர்ந்து அருளியுள்ள இந்த உபதேசத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து, அல்லாஹ்வுக்கு அஞ்சி செயலாற்றுதல் வேண்டும்.



## 2-வது ஹத்யா
## மரணத்திற்கு ஆயத்தமாகுதல்

وَلَنْ يُّؤَخِّرَ اللّٰهُ نَفْسًا اِذَا جَآءَ اَجَلُهَا

**''ஒரு ஆத்மாவுடைய (மரணத்தின்) தவணை வரும்போது அதனை அல்லாஹு பிற்படுத்தவேமாட்டான்.''** ***(63-11)***

இந்த உலகில், நீங்கள் யாத்திரை செய்பவர்களைப் போலாவது அல்லது வழிப்போக்கர்களைப் போலாவது இருந்து கொள்ளுங்கள்; மேலும் மரணமடைந்தவருள், உங்களைச் சேர்த்து எண்ணுங்கள். மரணமானது முஸ்லிமுக்கு ஓர் அனுக்கிரகமாயிருக்கிறது. (நா-வா)

நண்பர்களே! நாம் மரணம் அனுபவிப்பது நிச்சயம்; நமது ஒதுங்குமிடம் கப்ரு என்பதும், நமது தோழர்கள் புழுக்கள் என்பதும், நமது விசாரணைத் தலம் 'கியாமம்' என்பதும் உறுதி.

எவன் ஒருவன் தன் முடிவு எந்த விதத்திலும் மரணம் என்றும், அதை விட்டுத் தப்புவது முடியாதென்றும், கப்ரினுள் தன்னிடம் கேள்வி கணக்குக் கேட்பவர் முன்கர் வனகீர் என்றும், அறிந்தானோ அவனே உண்மையை உணர்ந்தவனாவான்; அவனுக்கு மரணத்தின் நினைவேயன்றி வேறு எந்த நினைவும் முக்கியமாக இராது. அன்றியும் மரணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களின் முயற்சியை அல்லாமல் வேறு எந்த முயற்சியையும் அவனிடத்தில் அதிகம் காணப்படமாட்டாது. உதாரணமாக ரசூல் நாயகம் (ஸல்) நவின்றுள்ளார்கள்:-

''எவன் தன் நப்ஸை வசப்படுத்தி, மரணத்திற்குப் பின் உதவுவதற்குத் தயாரிப்பு பொருளான நல் அமல்களையும், தியானங்களையும் செய்தானோ? அவன் உண்மையில் தன் நப்ஸை சுவனபதியின் பூங்காக்களில் ஒரு பூங்காவாகக் காண்பான்; எவன் மரணத்தை மறந்து, அதற்கான ஆயத்தங்களைச் செய்யாது, உலக ஆசாபாசங்களில் சிக்குண்டு, மனம்போன போக்கில் நடந்து, ஆகிரத்திற்கு வேண்டிய சேகரிப்பை மறந்தவனாக இருப்பானோ? அவன் தன் நப்ஸை நரகத்தினுடைய பொதும்புகளில் ஒரு பொதும்பாகக் காண்பான்.''

**''உலக இன்ப சுகங்களில் பற்றுடையோர்களே! அந்த இன்பங்களை நிர்மூலமாக்குகின்ற மரணத்தை அதிகமாக நினைத்துக் கொண்டிருங்கள்.''** (நா-வா)

ரசூல் (ஸல்) அவர்களின் இந்தப்புனித மொழிகளைத் தன் வாழ்க்கையில் உணர்ந்து நடப்பவனது சொல், செயல் அனைத்தும் அல்லாஹுவின் விருப்பத்திற்கு ஆளாக்கும். ஆகவே, உலக சுகபோகங்களைப் பெரிதாகக் கருதாது, இறைவனது வழிபாட்டில் ஈடுபட்டு ஆகிரத்திற்கு வேண்டிய அனுகூலங்களை ஒவ்வொரு நாளும் புதிது புதிதாகச் சேகரம் செய்வதே மரணத்திற்கு ஆயத்தமாவதாம்.

## 3-வது ஹத்யா விட்டுப்போன வணக்கங்களைத் திரும்பச் செய்தல்

وَالْبٰقِيٰتُ الصّٰلِحٰتُ خَيْرٌ عِنْدَ رَبِّكَ ثَوَابًا وَّخَيْرٌ اَمَلًا ○

**''என்றுமே (தவறாது) நிலைத்திருக்கிற நல் வணக்கங்கள்தான், உம் இறைவனிடத்தில் நற் கூலியையும், நன் நம்பிக்கையையும் கொள்வதற்கு மிக்க மேலானவையாகும்.''**

இஸ்லாத்தின் இன்றியமையாக் கடமைகளாகிய, ஈமான் என்னும் தவ்ஹீதை மொழிதல், தொழுகை என்னும் இறைவணக்கம், ஸதகத் என்னும் தானதர்மம், நோன்பு என்னும் ஆன்ம பரிசுத்த விரதம், ஹஜ் என்னும் மக்காவை நோக்கிச் செல்லும் ஆத்மார்த்த புண்ணிய யாத்திரை ஆகிய கடமைகளில் தம்மால் நிறைவேற்றப்படாது தப்பிப் போனவற்றை ஞாபகம் செய்து, அவற்றைத் திரும்பத் தவறாமலும் பிந்தாமலும் நிறைவேற்றுதல் வேண்டும். இவ்வாறு செய்வதனால் தனது தவறை உணர்ந்து, மேலும் அந்தத் தவறுகள் நிகழாதிருக்கக் கருதிக் கொள்ளவும், அப்போதைக்கப்போதுள்ள கடமைகளைத் தவறாது செய்யவும் தூண்டுகிறது. நமது ஷரீஅத்தும் இதனையே வலியுறுத்துகின்றது.

ஈமான், தொழுகை, ஜகாத்து இவைகள் பற்றிய விளக்கம், இந்த நூலில் இடம் பெற்றுள்ளதால் நோன்பு, ஹஜ்ஜு இவற்றைச் சிறிது தெரிந்து கொள்வோம்.



## நோன்பின் மாண்பு

**''விசுவாசிகளே! உங்களுக்கு முன்னுள்ளவர்கள்மீது நோன்பு கடமையாக்கப்பட்டிருந்ததைப்போல், உங்கள்மீதும் கட்டாயப் படுத்தப்பட்டிருக்கிறது. (ஏனெனில்) நீங்கள் (அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்கும்) பரிசுத்தமானவர்களாக ஆவதற்காக வேண்டியே.''** *(2-183)*

''ரஜபு மாதம், அல்லாஹுவை அடியார்கள் அதிகம் வணங்குவதற்காக வேண்டி நிறுவப்பட்ட மாதமென்றும், ஷஃபான் மாதம் நபி (ஸல்) தமக்குரிய மாதமென்றும், ரமலான் மாதம் தம்முடைய உம்மத்துகளுக்குச் சொந்தமாக வணங்குவதற்குரிய மாதமென்றும்'' ரசூலேகரீம் (ஸல்) நவின்றுள்ளார்கள்.

உலக பிதா ஆதம் (அலை) அவர்களைப் படைப்பதற்காக மண் கொண்டு வரச்சொல்லி இஸ்ராயீல் (அலை) மண் கொண்டு வந்தது ரஜபு மாதம் முதல் நாள் என்றும், அவற்றைக் குழைப்பதற்காக மழையைப் பொழியவைத்து உருவம் செய்ய ஆரம்பித்தது, ஷஃபான் மாதம் பத்தாம் நாள் என்றும், மலக்குகள் பலவித கோலங்களைச் செய்து அல்லாஹ்விடம் காண்பிப்பதும், அல்லாஹு அவைகள் சரியில்லை என்பதைக் கொண்டு அவைகளை குலைத்து விடுவதுவுமாக இருந்து, முடிவில் ''பராஅத்'' அன்று அல்லாஹுவின் நாட்டத்திலிருந்த, அந்த ரஹ்மானுடைய சூரத்தைத் தன் குதறத்து என்ற கை கொண்டு படைத்து முடித்தது ரமலான் மாதமென்றும் சொல்லப்படுகிறது.

இந்தமூன்று மாதங்களும் வருடத்தில் சிறப்புப்பெற்ற மாதங்களாகும். எனவே இந்த மூன்று மாதத்திலும், மற்ற மாதங்களில் செய்வதைவிட அபரிமிதமான வணக்கங்களை முஸ்லிம்களெல் லோரும் செய்து வருதல் வேண்டும்.

ரஜபு மாதத்தின் 27-வது இரவில்தான் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹுவின் அழைப்பிற்கிணங்க, ஆலமே மலக் கூத்துக்கு மிஃராஜ் சென்று அல்லாஹுவின் திருச்சன்னிதானத்தில் தம் உம்மத்தோருக்காகப் பல நலன்களையும் பெற்றுக்கொண்டு வந்தார்கள் என்று நம் மார்க்கக் கிதாபுகள் சான்று கூறுகின்றன.

''ஷஃபான் மாதம் மத்திய (பராஅத்) இரவு வந்துவிட்டால், நீங்கள் அந்த இரவில் நின்று வணங்குங்கள்; அன்றைய பகலில் நோன்பு வையுங்கள்'' என்று பெருமானார் (ஸல்) அருளியுள்ளார்கள்.

நபிமார்களின் ஞானோதயத்துக்கெல்லாம் நோன்பென்பது தான் ஓர் அத்தியாவசிய சாதனமாகக் கருதப்பட்டு வருகின்றது. ஈஸா நபி (அலை) நாற்பது நாள் நோன்பு நோற்ற பின்னரே இறை ஞானத்தை அருளப் பெற்றார்கள். இவ்வாறே மூஸா (அலை) அவர்களுக்கும் தங்களுக்குரிய கடும் விரதத்துக்குப் பிறகே இறைவனின் தரிசனம் பெற்றார்கள். இவை போன்றே இருபத்தேழு நாட்கள் இரவு பகல் கடுந்தவ நோன்பு நோற்று ஹிரா மலையில் அருந்தவம் புரிந்த பின்னரே ரசூலே கரீம் (ஸல்) அவர்களுக்கும் குர்ஆன் ஷரீப் வெளியாக்கப் பட்டது. இந்த ரமலான் மாத நோன்பால் இந்த உலக, மறு உலக நன்மைகளெல்லாம் விளையக் கூடியதாக இருக்கின்றன.

''நோன்பு ஷைத்தானைத் தடுக்கக்கூடிய ஓர் திரையாக இருக்கிறது. நோன்பு காலத்தில் ஷைத்தான் விலங்கிடப்படுகிறான்'', என்று ஹதீதில் வந்திருப்பதால், தன்னை ஷைத்தானைவிட்டும் தடுத்துக் கொள்ள வேண்டியவர்கள் அனைவரும் அவசியம் நோன்பு வைத்துக்கொள்வது கடமையாகும்.

**ஷை**த்தான் என்பது இரண்டு வகையுடையதாக இருப்பதால், இங்கு சொல்லப்பட்டிருப்பது மனத்தின் தூய்மையைத் தடுக்கும் ஷைத்தானேயாகும். மேலும் ''ஷைத்தான் மனிதனின் உடலில் இரத்தம் செல்லக்கூடிய இடங்களிலெல்லாம் சென்று வருகிறான்'', என்று அண்ணலெம் பெருமானார் (ஸல்) மொழிந்துள்ளார்கள்.

நோன்பைக்கொண்டு உடலிலுள்ள கெட்ட இரத்தங்களெல்லாம் வற்றிப்போவதால் ஷைத்தானுக்குரிய வாசல்கள் மூடப்பட்டு விடுகிறதுடன், அதனைத் தடுத்துக் கொள்வதற்கு நோன்பு ஓர் ஆயுதமாகி விடுகிறது.

''நோன்பு வைத்தவனது நித்திரையானது வணக்கம். அவனது வாய்மூடி இருத்தல் 'தஸ்பீஹ்', அவனது அமல்களின் சன்மானத்தை இரட்டிப்பாக்கப்படும். அவன் அல்லாஹுவினிடத்தில் இறைஞ்சுவதை ஒப்புக்கொள்ளப்படும். அவனது பாவங்கள் பொறுக்கப்படும்'', என அல்லாஹுவின் திருத்தூதர் (ஸல்) நவின்றுள்ளார்கள்.

''நோன்பாளியை விஷப்பூச்சிகள் தீண்டுவதில்லை. மனிதர்கள் ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் தீங்குகளுக்காக கியாமத் நாளில் பாதிக்கபபட்டவருக்கு தீங்கு செய்தவரின் நன்மைகளைப் பறித்துக் கொடுக்கப்படும். ஆனால் நோன்பின் பலனை மாத்திரம் அவ்வாறு செய்யப்படமாட்டாது'' இது நோன்பின் மாண்பாகும். (நாயக வாக்கியம்)



## புனித ஹஜ்ஜு

***'எவர்கள் (பைத்துல்லாவுக்கு) யாத்திரை செல்ல சக்தி வாய்ந்தவர்களாக இருக்கிறார்களோ, அத்தகைய மனிதர்கள்மீது, அல்லாஹ்வுக்காக (அங்கு சென்று) அந்த ஆலயத்தை ஹஜ்ஜு செய்வது கடமையாக்கப்பட்டிருக்கிறது''. (3-96)***

ஹஜ்ஜு செய்வது இஸ்லாத்தின் ஐந்து கடமை (பர்ளு)களில் ஒன்றாகும். இதனை முற்காலத்து முஸ்லிம்கள் ஆர்வத்தோடும், மனமகிழ்ச்சியோடும் நிறைவேற்றி வந்தனர். அந்தக் காலத்தில் போக்குவரத்து வசதிகள் மிகக்குறைவு. போகும் வழிகளில், கொலை, கொள்ளை செய்பவர்களின் பயங்கரச் செயல்கள் தாண்டவமாடி வந்தன. இவைகளை எல்லாம் பொருட்படுத்தாமல், அல்லாஹ்வின் மீது தவக்கல் வைத்து, கடமை உணர்ச்சிமிக்கவர்களாக 5, 6 மாதங்கள் வரை நடந்தும், அப்போதுள்ள வசதி இல்லா வாகனங்களில் பிரயாணம் (சவாரி) செய்தும், ஹஜ்ஜின் கடமையை நிறைவேற்றித் திரும்பினரென்றால் அவர்களின் பக்திப்பெருக்கை என்னவென்றுரைப்பது.

இந்தக்காலத்திலோ அவ்வாறன்று. தம்முடைய வசதிக்கேற்ப போக்குவரத்து வசதிகள், பயமின்றிச்செல்ல வழிகளில் பாதுகாப்பு, உணவிற்கான ஏற்பாடுகள், சென்றுவர குறைந்த நாட்கள், இவ்வளவு வசதிகளிலிருந்தும்கூட, செல்வந்தர்களும், நடுத்தரவாதிகளும் இந்தக் கடமையைச் செய்துமுடிக்கத் தயங்குகின்றனர், ஏனோ!

சிலர் அடுத்த ஆண்டு போய்வரலாமென்று கூறுவதைப் கேட்கின்றோம். அதுவரை உயிரோடு இருப்போமா? என்பதனை அவர்கள் நினைப்பதில்லை. நாளை என்பது நம் கையிலில்லையே.

சுருங்கக் கூறினால் ஒரு மனிதனுக்கு கடன் இல்லாமலிருந்து, தான் ஹஜ்ஜு செய்து வரும் வரை மனைவி மக்களுக்குப் போதுமான பணம் செலவுக்குக் கொடுக்கவும், தனக்கு வழிச்செலவுக்குள்ள பணமும் இருப்பவருக்கு ஹஜ்ஜின் கடமை ஏற்பட்டுவிடுகிறது.

"கொல்லன் உலையானது, இரும்பின் துருவை நீக்குவது போல, ஹஜ்ஜுடைய உம்ராவும் வறுமையையும், பாவங்களையும் நீக்கிவிடும். மேலும் 'ஹஜ்ஜு யாத்'திரை செய்பவன் செல்லும் பொழுதும், மீளும் பொழுதும் அல்லாஹுவின் காவலில் இருக்கின்றான்''. என்று ரசூலே அக்ரம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மொழிந்துள்ளார்கள். எனவே:-

இதனைக் கவனிக்காமல் இருப்பவர் தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொண்ட குற்றத்திற்குள்ளாகிவிடுகிறார். எனவே, தகுதியுடைய ஒவ்வொரு முஸ்லிம் ஆணும் பெண்ணும் ஹஜ்ஜின் கடமையைக் காலம் கடத்தாமல் நிறைவேற்றிவிட வேண்டியது அவசியமாகும்.

## 4-வது ஹத்யா
## மரணத்தை விரும்புதல்

فَتَمَنَّوُا الْمَوْتَ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ۝

**''நீங்கள் நேர்மையானவர்களாக இருந்தால் மரணத்தை விரும்புங்கள்.''** ***(62-6)***

மரணத்தையும் அதன் தருணத்தையும், பற்றிச் சிந்தியுங்கள். 'என் மரண காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது; அதுவும் இன்றோ, நாளையோ அல்லது சற்று நேரத்திலோ மரணம் வரக்கூடும்' என்ற உணர்ச்சியோடு, தன் மனத்துக்குள் சொல்லிக்கொள்ள வேண்டியது; இவ்வாறு சதா மரணத்தைச் சிந்திப்பதில் விருப்பம் ஏற்பட்டுவிட்டால், பாவச் செயல்களை விட்டு நீங்குவதற்கும், முன் செய்த பாவங்களுக்காக பட்சாதாபப்பட்டு மன்னிப்புக் கோருவதற்கும் ஏதுவாகும்.

சிலர் உலக மாயையில் ஈடுபட்டு நீண்டகாலம் இந்த உலகில் வாழ்ந்திருப்போம்; என்ற நினைவில், கடமைகளையும் நற்காரியங்களையும் பொடுபோக்காக விட்டு, வீண் கேளிக்கைகளிலும், குதர்க்கங்களிலும் ஈடுபட்டு, மரணத்தின் கெடுவை உணராதவர்களாக இருக்கின்றனர்.



நாம் உலகத்திற்கு வரும்போது, வெறுமனே வந்தது போன்று, உலகத்தை விட்டுப் போகும்போதும், வெறுமனே போகவேண்டியது நிச்சயமானதால், மரணத்திற்குப் பின், சோதனைகளால் உண்டாகும் தீங்குகளுக்காளாகாமல், அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்குரிய நன்னடத்தைகளைக் கைக்கொண்டு, இறைவன்பால் ''ஏ இறைவா! மரணத் தறுவாயில் ஏற்படும் வேதனைகள், வருத்தங்கள் முதலியவைகளை என்னை விட்டும் அகற்றி, மரணத்தை இலகுவாக்கி வைத்தருள்; என்று மனமிரங்கி பிரார்த்தனைப் புரிந்து வருதல் வேண்டும்.

மேற்கூறிய இந்த நான்குமே எமதூதரைப் பிரீதிபடுத்தும் ஹத்யாக்களாகும்.

## 2-வது தகுதியாளர் கப்று

**10**

இருளறையான கப்ருக்கு நாலு
        இயம்பக் கேளுமே ஒன்றாவது
சிறுநீர் மலத்நஜீ ஸினைப்பேணலும்
        சிறிய மௌத்தினைக் குறைப்பதுவும்
குர்ஆனை உவந் தோதுதலும்
        கூறும் ஹத்யாவில் மூன்றாவதாம்
சர்வரும் படுத்துறங்கு நேரம்
        சாளயப் பாடாய் தொழுவதுமே.

*அரும்பதவுரை:-*

கப்ரு - புதைகுழி. நஜீஸ் - அசுத்தம். சிறிய மௌத்து- தூக்கம். சர்வரும் - எல்லோரும். தொழுதல் - இறை வணக்கம், சாளயப்பாடு - பக்தி.

### கப்றின் விளக்கம்

يُثَبِّتُ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا بِالْقَوْلِ الثَّابِتِ فِى الْحَيٰوةِ
الدُّنْيَا وَفِى الْاٰخِرَةِ ۚ

**''விசுவாசம் கொண்டவர்களை; (கப்ரிலும்) மறுமையிலும், இம்மையிலும் சரி (''கலிமா தையிப்'' என்னும்) உறுதியான வாக்கைக் கொண்டு அல்லாஹ்ஹு அவர்களை உறுதிப்படுத்துகின்றான்.'' *(14-27)***

**''நீங்கள் கப்ருகளை சந்திக்கும் வரையில், (பொருளை) அதிகப்படுத்திக் கொள்ளும் பேராசை (அல்லாஹுவை விட்டும்) உங்களைப் பராக்காக்கிவிட்டது.'' *(102-1:2)***

ரசூல் நாயகம் (ஸல்) அவர்கள்:- ''கப்ரானது சொர்க்கத்திலுள்ள அழகிய பூங்காக்களில் ஒன்றாக இருக்கும் அல்லது நரகத்திலுள்ள பயங்கரக் கிடங்குகளில் ஒன்றாக இருக்கும். பரலோக வாசத்துக்கு நம்முடைய புதைகுழிதான் முதற்படியாக இருக்கிறது.'' என்று மொழிந்துள்ளார்கள்.

இந்தச் சிறப்பான ஹதீதின் தாத்பரியமாவது:- எவன் ஒருவன் கப்ரை நினைந்து நல்லுணர்வு பெற்று, இடைவிடாத வணக்கவொழுக் கங்களால் மனோ அடக்கம், மனத்தூய்மை, மன அமைதி இவற்றைத் தேடிக் கொண்டானோ? அவனுக்கு கப்ரின் வாசம் சுவனத்துப் பூங்காவைப் போல் மனோரம்மியமாக இருக்கும். கப்ரை மறந்து எவன் ஒருவன் உலகில் தன்னலம் கருதி பொருளாசையில் சிக்கி, தீய குணங்களிலும், தீய நெறிகளிலும் பழகி, முடிவில் மனக் கவலை களோடும், மனச் சஞ்சலங்களோடும், மனக் குறைவுகளோடும் கப்ரை அடைகிறனோ? அவன், அங்கு நரகத்தின் கொடிய கிடங்கில் பெரிய வேதனைகளையும் துன்பங்களையும் அனுபவிப்பான் என்பதே.

## மையித்திடம் கப்ரு கூறுவது

''மையித்தை கப்ரில் அடக்கியதும் ''ஏ ஆதமின் மகனே! உனக்குக் கைசேதம்! நீ என்னை மறந்து மருண்டு போயிருந்த காரணம் யாது? நான் ஒரு இடுக்கான, தனியான, இருளான, இக்கட்டான வீடாகவும், விஷப் பூச்சிகள் நிறைந்த தலமாகவும் இருக்கின்றேன் என்பது உனக்குத் தெரியாதா? நீ உலகில் என்னை மறந்திருந்தாய்; என்மீது நீ நடந்து செல்கையில் அச்சங்கொண்டவனைப்போல், ஒரு காலை முன்னும் மற்றொரு காலைப் பின்னுமாக வைத்தாய் அல்லவா?'' எனக்கேட்கும்; ஆனால், அவன் நல்லடியானாக இருந்தால், அவனுக்காக ஒருவர் தோன்றி கப்ரை நோக்கி, ''ஓ கப்ரே! நீ சொல்வது போலல்ல; இவர் நன்னடத்தையில் ஈடுபட்டிருந்தவர்; பரிசுத்தத்தோடு உறக்கம் விழித்து வணக்கம் செலுத்தியவர்; திருக்



குர்ஆனை அதிகமாக ஓதுவதிலும் மக்களை நன்மையைக் கொண்டு ஏவுவதிலும், தீங்கைக் கொண்டு விலக்குவதிலும் ஈடுபட்டவர்; அல்லாஹுவுக்கும், ரசூலுக்கும் (ஸல்) வழிபட்டு மரணத்திற்குப் பயந்து நடந்தவர்;'' என்று பரிந்து சொல்வார். அதற்கு கப்ரு: ''நான் அவருக்குச் சுகத்தைக் கொடுக்கக் கூடிய பூங்காவாக ஆகுதல் அவசியம்.'' எனக் கூறியபின், அவனது சரீரம் ஒளிமயமாகி, அவனது ஆன்மா மத்திய உலகுக்கேகிவிடும்'' என்று நபிபெருமான் (ஸல்) அருளியுள்ளார்கள்.

## கப்ரில் தோன்றும் பாம்புகள்

கப்ரினுடைய அதாபு (அவஸ்தை)க்குக் காரணம், உலகத்தின் மீது வைக்கும் உவப்பேயாகும்; அந்த அதாபு ஒரேவிதமானதன்று. உலகத்தினுடைய உவப்பிற்குத் தக்கபடி, சிலருக்கு அதிகமாகவும் சிலருக்குக் குறைவாகவுமிருக்கும்.

ஒருவனுக்கு உலகப் பொருட்களில் ஏதேனும் கொஞ்சமிருந்து அவற்றின்மீது அவன் பற்று வைத்திருந்தால், அவனுக்குண்டாகும் அதாபானது, நிதி, நிலங்களும், தோட்டங்களும், பணியாள்களும், கன்றுகாலிகளும், அதிகாரமும் மேலும் பல செல்வங்களுமிருந்து அவை ஒவ்வொன்றிலும் பற்றுதலுடையவனுக்குண்டாகும் அதாபுக்குச் சமமாகாது.

ஒரு சமயம் ரசூலே கரீம் (ஸல்) அவர்கள் கப்ரினுடைய வேதனைகளைப் பற்றிக் கூறும்போது: ''ஓ மக்களே! அல்லாஹு கூறுகின்றான்'':-

**''எவனொருவன் என்னுடைய தியானத்தை விட்டும் முகம் திரும்புவானாகில், அவனுக்குக் கஷ்டமான ஜீவிதமிருக்கிறது,''** என்பதாகும்.

இந்த ஆயத்து அருளப்பட்டது எதற்காக? என்பதை நீங்கள் அறிவீர்களா?'' என வினவ; அண்மையில் இருந்த அஸ்ஹாபுகள் (ரலி): ''அது பற்றி அல்லாஹுவும் அவனது ரசூலுமே மிக அறிந்தவர்களாவர்;'' எனப் பகர்ந்தார்கள்; அது கேட்டு நாயகம் (ஸல்) அவர்கள் கூறலுற்றார்கள்:-

''இந்த உலகில் அல்லாஹுவை மறந்து திரியும் பாவிகள் மீது கப்ரில் தொண்ணூற்றொன்பது பெரும் பாம்புகள் சாட்டப்படும்;

அந்தப் பாம்புகள் ஒவ்வொன்றிற்கும் ஒன்பதுவிதத் தலைகள் உண்டு. கியாமநாள்வரை அந்தப் பாவிகளைக் கடித்துக்கொண்டும், நக்கிக் கொண்டும், அவர்கள்மீது சீறி விழுந்துகொண்டுமிருக்கும்'' என்பதாம்.

இதற்கு இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் விளக்கம் வருமாறு:- ''ஆரிப் (அறிந்தவர்)கள் இந்தப் பாம்புகளை அகப் பார்வையால் பார்க்கிறார்கள். குதர்க்க வாதிகள் இதற்கு விதண்டா வாதம் பேசித் திரிவதோடு கப்ரில் **ஒன்றும்** நிகழ்வதில்லை. அவ்விதம் ஏதாவது நிகழுமாயின், **அதற்கு** நாங்கள் பரிகாரம் செய்து கொள்வோம்; எனக் கூறுகின்றனர். அந்தப் போலிகளுக்குக் கூறுங்கள். அந்தப்பாம்புகள் வெளியே இருந்து வந்தவைகளல்ல; அவை இறந்தவனுடைய உடலுக்குள் மறைந்திருந்தவை; அவன் அவற்றை அறியாதவனாக இருந்தான்; ஆகவே, அந்தப் பாம்புகள் இறந்த வனுக்குத் தென்படுகின்றன. வாழ்ந்திருப்பவர்களில் ஆரிபுகளேயன்றி மற்றையோர் இதைக்கண்டு கொள்ள முடியாது. ஏனென்றால், மறுலோகப் பொருட்களை வெளிக்கண்ணால் பார்க்க முடியாது. இறந்தவனுக்கோ மறு உலகப் பொருட்கள் தென்படுகின்றன. ஆகவேதான், அந்தப் பாம்புகள் அவனிடமிருந்தே உருவெடுத்து அவன் பார்வைக்குத் தோன்றுகின்றன.

நித்திரை செய்துகொண்டிருப்பவன் சொப்பனத்தில் சில சமயம் தன்னைப் பாம்புத் தீண்டியதாகக் கண்டு திடுக்கிட்டு விழிக்கின்றான். அவன் அருகில் விழிநிலையிலிருக்கும் மற்றவர்களுக்கு, இந்தச் சம்பவம் தென்படுகிறதில்லை. அது மற்றவர்களுக்குத் தென்படாம லிருந்தாலும் நித்திரை செய்தவனுக்கு அந்தக்காட்சி உண்மை யுள்ளதாக இருக்கிறது. அதனாலுண்டாகும் மனோ வேதனையை அவன் அனுபவிக்கின்றான்; விழித்திருப்பவன் அனுபவிப்பதில்லை. இவன் அந்தப்பாம்பைப் பார்க்காததினாலும், அது தீண்டாததினாலும், அதனால் ஏற்படும் வேதனை இவனுக்குக் கொஞ்சமுமில்லை. பின்பு நீ, இதை மறுத்து அவனுக்குத் தோன்றுவது உண்மையில் பாம்பு அல்லவென்றும், அது ஒரு நினைவாக இருக்கிறதென்றும் கூறுவாயாகில், அது உன் அறிவின் பிசகேயாகும். ஏனென்றால், அனுபவத்துக்கு வரும் பொருள் உள்ளதென்றும், அனுபவத்திற்கு வராத பொருள் இல்லாததென்றும் சொல்லுவது, நித்திரையில் கண்டு



அனுபவித்த பொருளை மற்றவர்கள் பார்க்காவிட்டாலும் அது உள்ளதாகவே இருக்கிறது.

இறந்தவன் விசயத்திலும்,நித்திரை கொள்பவன் விசயத்திலும், வேதனையும் அதற்குக் காரணமும் இருக்கத்தான் செய்கிறது. இறந்தவனுக்கும், நித்திரை கொள்பவனுக்கும் வித்தியாசமாவது: நித்திரையில் இருப்பவன் உடனே விழித்துக் கொள்வதினால், அந்த வேதனையில் நின்றும் தப்பித்துக் கொள்கிறான். மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வுக்கு முடிவில்லை. ஆதலால், இறந்தவன் அந்த அவதியிலிருந்து நீங்க வழியின்றி, அதிலேயே சிக்கிவிடுகின்றான். இந்த உலகத்தில் ஐயறிவிற்குப் புலப்படுகிற பொருட்கள் எப்படியோ, அப்படியே அந்த உலகத்தில் அந்தப் பாம்புகள் அவனோடு நிலைத் திருக்கும். மேற்கூறிய அதாபுகள் அவனுடைய தீயகுணங்களில் நின்றும் பிறந்தவைகளாகும். அதன் ஒன்பது தலைகள் என்பது அந்தத் தீய குணங்களின் கிளைகளாகும். ஆகவே, அந்தப் பாம்புகளின் உற்பத்திக்குக் காரணம், உலகப் பற்றினாலுண்டாகிற தீயகுணங்களின் எண்ணிக்கையின்படி அதன் தலைகள் முளைக்கின்றன.

அந்த ஒன்பதின் விளக்கமாவது:- 1. பொறாமை, 2. கபடம், 3. பாசாங்கு, 4. பெருமை, 5. அவா, 6. வஞ்சகம், 7. பகைமை, 8. பொருளாசை, 9. அதிகார விருப்பம் இவைகளாகும். அந்தப் பாம்பின் உற்பத்தியையும், அதன் ஒன்பது தலைகளையும் நுபுவ்வத், விலாயத் என்ற மெய்யொளியால் பார்க்கலாம். இயற்கையாகவே பாவிகளுடைய உடலுக்குள்ளே மறைந்து, அவர்களுக்குத் தெரியாமலிருந்த இந்தப் பாம்புகள் இப்போது கப்ரினுள் அவர்களுக்கு விரோதியாக வெளிப்பட்டன.

இந்தப் பாம்புகள் வெளியே இருக்குமாயின் சற்று நேரமாவது அவனுக்கு ஆறுதல் கொடுக்கும். இவை உடலுக்குள் குடி கொண்டவைகளாகவும், தீய குணங்களால் பிறந்தவையாகவும் இருப்பதால் அவற்றை விட்டும் தப்பிஓட இவனால் முடிவதில்லை.

உண்மையில் ஒவ்வொரு மனிதனும் தன் அதாபிற்கு மூல காரணமாக இருக்கின்றவைகளை, இந்த உலகத்திலிருந்தே சேகரித்துக் கொண்டு போகிறான்; அவை அவனுக்குள்ளேயே இருக்கின்றன. இதனாலேதான் நபி பெருமான் (ஸல்) அவர்கள்:-

**"இந்த அதாபாகிறது, நீங்கள் செய்த கெட்ட அமல்களாக இருக்கும்; அதை உங்களிடமே திருப்பப்பட்டது" என மொழிந் துள்ளார்கள்.**

**"கப்ரு** என்பது மனிதன் இறுதி நாளை நோக்கிச் செல்லும் பிரயாணத்தின் இடையில் தங்கிச்செல்லும் ஒரு சத்திரமாகும். அந்தச் சத்திரத்தில் நிகழும் சோதனைகளிலிருந்து அவன் மீட்சிபெறக் கூடுமாயின், அதற்குப் பின்னால் ஏற்படும் சோதனைகளை மிக இலகுவாய்க் காண்பான். அந்தச் சத்திரமாகிய கப்ரை விட்டுத் தப்பிச் செல்ல முடியாதவன் எங்கும் கடினமான சோதனைகளுக்கு ஆளாவான். அவனது பச்சாத்தாபங்கள் எல்லாம் ஒருவித பலனும் கொடுக்காத நிலையில் மிகவும் கலங்கிப் பரிதவிப்பான்" (நா-வா)

மேன்மை மிக்க நாயகம் (ஸல்) அவர்களின் செல்வப் புதல்வி, மாதர்க்கரசி, பீபி பாத்திமா ஸஹ்ரா (ரலி) அவர்கள் இறைவனது திருவுளப்படி, உயிர் நீங்கியவுடனே ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், இமாம் ஹஸன், ஹுஸைன் (ரலி) அவர்கள், அபூஸர்ருல் கப்பாரீ (ரலி) அவர்கள், ஆக இந்தநால்வரும் அவர்களது ஜனாசாவைத் தொழுவித்தபின், அநேக ஸஹாபாக்கள் சூழச் சுமந்து சென்று கப்றின் அருகில் வைத்து:-

"ஏ கப்ரே! இவர்கள் நபிகள் நாயகத்தின் செல்வப் புதல்வி; ஹஸ்ரத் அலீ அவர்களின் மனைவி; இமாம் ஹஸன், ஹுஸைன் அவர்களின் மாதா மாதர்க்கரசி ஸய்யிதத் பாத்திமா நாயகி என நீ அறிவாயா?" என்று அபூஸர்ரு (ரலி) அவர்கள் சப்தமிட்டுக் கேட்க, அல்லா(ஹ்)வின் தத்துவத்தால் கப்ரிலிருந்து பதில் சப்தம் கேட்கப்பட்டது:-

"நான் குலப் பெருமைக்குப் பணிந்து போகக்கூடிய வீடல்லேன். நற்கருமங்களின் மேலீட்டால் எவரது இதயம் பரிபக்குவம் எய்தியதோ அவரே என்னிடத்தில் ஆறுதல் பெறுவார்" என்பதாகும். இங்ஙனம் 'துர்ரதுன்னாசிஹீன்' என்ற நூலில் குறிக்கப்பட்டிருக்கிறது.



## கப்ருக்குரிய ஹத்யாக்கள் நான்கு

### 1-வது ஹத்யா
### சிறுநீர், மலம் முதலியவற்றை விட்டும் சுத்தமாதல்

وَاللّٰهُ يُحِبُّ الْمُطَّهِّرِيْنَ ۝

**"அல்லாஹ் பரிசுத்தவான்களையே நேசிக்கின்றான்".**

பரிசுத்தமே இஸ்லாத்தின் இலட்சணம். மனிதனைப் பரிசுத்தப்படுத்தவே இஸ்லாம் தோன்றியது. மனிதனது வாழ்க்கை, மனமொழி மெய்களால் பரிசுத்தமாக இருக்க வேண்டியதே இஸ்லாத்தின் நோக்கம்.

**மனச் சுத்தியாவது:-** தீய எண்ணங்களை ஒதுக்கி நல்லெண்ணங் களை விருத்திபண்ணுவதாகும்.

**மொழிச் சுத்தியாவது:-** யாரையும் நோவினைப்படுத்தாத இதமொழிகளையும், இனிய வசனங்களையும் நயமாகப் பேசுவதாகும்.

**மெய்ச் சுத்தியாவது:-** உடலாலும், உடலுறுப்புகளாலும் நல்லன செய்வதும், அந்த உடலில் அழுக்கு, அசுத்தம் தீண்டாதபடி எப்பொழுதும் அதனை இஸ்லாமிய விதிவிலக்குகளுக்கிணங்கிப் பாதுகாப்பதுமாகும்.

மேற்கூறப்பட்ட பத்தாவது செய்யுளில் கப்ருக்குரிய ஹத்யாக்களில் ஒன்று உடலின் பரிசுத்தம். இங்கு உடல் சுத்தங்களில் முக்கியம் வாய்ந்த மலபாதை, சலபாதை இவற்றின் துப்புரவு வேண்டப்படுகிறது.

தேகத்திலிருந்து கழியும் சிறுநீர், மலம் இத்தகைய அசுத் தங்களைக் தகுந்தபடி சுத்தம் செய்வதில் அசட்டை கூடாது. ஏனெனில் நம் நபி பெருமானார் (ஸல்) அவர்கள்:-

“இதயம், சரீரம், ஆடை, இடம் இவற்றின் சுத்தி விஷயத்தில் அசட்டையாக இருப்பது கப்ரின் வேதனைகள் அதிகரிப்பதற்குக் காரணமாகும்” என்று திருவுளம் பற்றியுள்ளார்கள்.

மலம் சலம் கழிப்பதிலும் அதனைச் சுத்தம் செய்வதிலும் இஸ்லாமிய மார்க்கச் சட்டங்கள் பிரகாரம் அனுசரிக்க வேண்டிய நடை முறைகளைக் கீழே தருகிறோம்:

## சலபாதை

சிறுநீர் பெய்துகொள்ள எண்ணம் கொண்டவுடன் முதலில் காய்ந்த பசுமையான மண்கட்டி ஒன்றை எடுத்துத் தரையில் மூன்று தடவை தட்டிக் கையில் வைத்துக்கொண்டு அல்லது ஈரத்தை உலர்த்தக் கூடிய சுத்தமான வேறு வஸ்துவையேனும் கையில் வைத்துக் கொண்டு, சுத்தமான இடம் பார்த்தும் மணல் தரை பார்த்தும் உட்காருதல் வேண்டும். சிறுநீர் மேலே தெறிக்காதபடி கவனித்துக் கொள்ள வேண்டும்; கிப்லாவின் திசையை (மேற்கு) நோக்கி, முகத்தையோ முதுகையோ காட்டி உட்காருதல் கூடாது. தரை வலுவாக இருந்தால், சிறிது உயரமான இடத்திலிருந்து பள்ளத்தில் சிறுநீர் பெய்தல் வேண்டும். பெய்து முடிந்தபின் இடது கையால் கட்டியைக் கொண்டு ஈரத்தை உலர்த்துதல் வேண்டும். பின்னர் கட்டியைப் பிடித்துக் கொண்டே எழுந்து கசியும் நீர், கட்டியில் இறங்கும் பொருட்டுக் குறைந்தது நாற்பது அடி தூரம் நடப்பதோடு ஆண் குறியை விரலால் அழுத்துதலும், தேகத்தை அசைத்தலும் வேண்டும். ஈரம் நன்கு உலர்ந்தபின் கட்டியைக் கீழே எறிந்து உடைத்து விடவும்; பிறகு தண்ணீரால் சுத்தி செய்யவும்.

## மலபாதை

மலபாதை சம்பந்தமாகக் கீழ்க்கண்ட கிரமங்கள் அனுசரிக் கப்படுகின்றன:

**முதலாவதாக:-** மூன்று காய்ந்த மண்கட்டிகளைப் பூமியின் மேல் மூன்று தடவை தட்டி எடுத்துக் கையில் வைத்துக்கொள்ள வேண்டியது. கூடுமாயின் தொழுகைக்கு உபயோகிக்கும் ஆடைகளை மாற்றிக் கொள்வது நன்று. சட்டை அணிந்திருந்தால், அதன் கைகளை உயர்த்தி வைத்துக் கொள்ளவும். தலை திறந்திருத்தல் தகாது. அல்லா(ஹ்)வின் திருநாமம் ரசூல் (ஸல்) அவர்களின் திருநாமம்



அல்லது குர்ஆன் வாக்கியம் எழுதப்பட்டுள்ள மோதிரம் அல்லது காகிதம் இருந்தால் அவற்றை மாற்றிக்கொள்ள வேண்டியது. உட்காரும்போது இடது காலை முன் தூக்கி வைத்து உட்காரவும். முழு நிர்வாணமாக இருப்பதும், மர்மத் தானத்தைக் தேவையின்றிப் பார்ப்பதும் கெட்ட பழக்கம். பேசுவதும், பாங்கு, தும்மல், ஸலாம் இவற்றிற்குப் பதில் சொல்லுவதும் ஆகாது. (சிறுநீர் பெய்வோரும் இந்தமுறையைக் கையாள வேண்டும்.) எழும்புமுன் மூலத்தில் அசுத்தம் இல்லாதபடி ஒவ்வொரு கட்டியால் துடைத்து விடவும். மூன்றாவதான கட்டியில் ஈரம் தெரியாதவரையில் சுத்தம் செய்து, சிறுநீரையும் முன் சொல்லியபடி உலர்த்தியபின், போதுமான தண்ணீரால் விரலின் நுனி படாதவாறு நன்கு தேய்த்து, அடி கழுவுதல் வேண்டும். கழுவும்போது கால் கைகளிலோ, பாத்திரத்திலோ தெறிக்காத விதம் சாக்கிரதையோடு கழுவியபின் இருகரங்களையும் மணிக்கட்டு வரை கழுவிவிட வேண்டியது.

கட்டி பிடிப்பதொன்றைத் தவிர, மேலேசொல்லிய மற்றக் கிரமங்களெல்லாம் பெண் பாலாரையும் கட்டுப்படுத்தக் கூடியன.

இதுகாலை நம் முஸ்லிம்களில் பெரும்பாலோர் மதாச்சாரங்களில் மிகப் பிற்போக்காளராகக் காணப்படுகின்றனர். இஸ்லாமிய நாகரீகம் பரிசுத்தத்தில் நிகரற்றது. நாம் முன்னர் கூறியதுபோல் இஸ்லாம் மதம், மனிதனின் இதயம், மொழி, மெய் இவற்றின் பரிசுத்தத்திற்கு வேண்டியே தோன்றியுள்ளது. சாத்தியமான எல்லாவிதப் பரிசுத்த பரிபக்குவ நடைமுறைகளுக்கும் வேண்டி இஸ்லாமிய வேதம் வகுத்துள்ள சட்டதிட்டங்களால் மனிதனுக்கும் அவனது சமூகத் துக்கும் அளவற்ற நன்மைகள் விளைகின்றன. முஸ்லிம்கள் இதை அலட்சியம் செய்து நடப்பது அறியாமையேயாகும். குளிப்பு, ஊண், உடை. இருப்பிடம் இவற்றில் நம் முஸ்லிம்கள் எத்துணைக் கவனம் செலுத்துகின்றார்களோ? அத்துணைக் கவனம் மலபாதை, சலபாதை சுத்தி விசயத்திலும் கவனித்தல் வேண்டும். இஸ்லாமியக் சட்டங்களைப் பின்பற்றுவதில் நம்மவர்கள் அசட்டையாயிருப்பது இழிவாகும்.

தற்கால முஸ்லிம்களில் சிலர் மலம் கழிக்கச் செல்லும் போதும், குளிக்கச் செல்லும்போதும், இன்னும் சாதாரண இடங்களிலும்கூட, தமது ஆடைகளை முட்டுக்கால்களுக்கு மேல் உயர்த்திக் கட்டிக் கொள்வதை ஒரு பெருமையாக நினைத்துக் கொள்கின்றனர். இது ஹராமா (விலக்கப்பட்ட)தாகும்.

எந்த ஒரு ஆணும் தொப்புளுக்கும் முட்டுக்காலுக்கும் இடைப்பட்ட இடத்தை வெளிக்காட்டுவதும், எந்த ஒரு பெண்ணும் தனது முகம் கைகள் உள்பட்ட எந்த உறுப்பையும் அன்னிய ஆண்களுக்கு வெளிக்காட்டுவதும் ஹராம். இது பற்றி இறைவன் திருமறையில்:-

***(நபியே!) ''விசுவாசிகளான ஆண்களுக்கு நீர் கூறும், அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ் நோக்கியே வைக்கவும், தங்கள் கற்பையும் இரட்சித்துக்கொள்ளவும் இது அவர்களைப் பரிசுத்தமாக்கி வைக்கும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவைகளை நன்கறிந்து கொள்கிறான்'' (24-30)***

***(நபியே!) ''விசுவாசமுள்ள பெண்களுக்கும் நீர் கூறும்; அவர்களும் தங்கள் பார்வையைக் கீழ் நோக்கியே வைத்துத் தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும். அன்றித் தங்கள் தேகத்தில் (பெரும்பாலும்) வெளியில் இருக்கக் கூடியவைகளைத் தவிர தங்கள் (ஆடை, ஆபரணம் போன்ற) அலங்காரத்தை வெளிக்காட்டாது மறைத்துக்கொள்ளவும், தங்கள் முந்தானைகளால் மார்பையும் மறைத்துக் கொள்ளவும்'' (24-31)***

அல்லாஹ் இட்ட இந்தக் கட்டளைக்கு மாற்றம் செய்தல் பெரும் குற்றமல்லவா!

தன்னந்தனிமையிலே இருக்கின்றபோது மட்டும் ஒரு தேவையின் நிமித்தம், அதுவும் காற்று வாங்குதல் போன்ற சிறிய தேவைக்காக வேண்டி மட்டும், மறைவான இடத்தைத் திறந்து கொண்டிருப்பது அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. தனிமையிலானாலும், காரணமில்லாமல் மறைவான இடத்தைத் திறப்பது ஹராமாகும்.

கூலி வேலை போன்ற நிர்ப்பந்தமான தேவைக்காக, முட்டுக்கு மேல் சிறிதளவு உயர்த்திக் கட்டிக் கொள்வது 'மாலிக்' மத்ஹபில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அவ்வாறு ஆடையை நீக்கிக் கொண்டிருப்பவரை பார்ப்பவரும், அந்த மத்ஹபின் படியே பார்க்கவேண்டும். அதனால் இச்சையுணர்வு எதுவும் ஏற்படக்கூடாது. இல்லாவிடில் மறைவிடத்தைப் பார்ப்பதும், காட்டுவதும் மொத்தமாகவே ஹராமாகும்.

இவ்வாறான சூழ்நிலைகள் ஏற்படும்போது கண்ணையும் மனத்தையும் கட்டுப்படுத்தும்படி ஏவப்படுகிறோம்.



## நபிகள் நாயகம் (ஸல்) நரகத்தில் கண்ட ஒழுக்கமற்ற பெண்களின் அவலநிலை

### ஸய்யிதினா அலி (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்:

ஒரு நாள் நானும் பாத்திமாவும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சமூகம் சென்றோம். அது சமயம் அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள். அதைக் கண்ணுற்ற பாத்திமா, கண்கலங்கி கலக்கமுற்று, ''அருமைத் தந்தையே! தாங்கள் அழுது கொண்டிருக்கக் காரணம் யாது?'' என வினவினார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் ''அருமை மகளே! நான் மிஃராஜ் சென்றிருந்த இரவிலே, நரகில் வேதனைப்படும் பல நங்கையரைக் கண்டேன். அவர்கள் வேதனைப்படுவதற்குரிய காரணங்களையும் அறிவிக்கப்பட்டேன். அதனை நினைத்துத்தான் அழுது கொண்டிருக்கிறேன்'' என்று உரைத்தார்கள். அப்போது பாத்திமா (ரலி) அவர்கள், ''அருமைத் தந்தையே! அந்தப் பெண்கள் எவ்வாறு வேதனை செய்யப் படுகிறார்கள்?'' என்று கேட்க, கீழ்க்கண்டவாறு கூறினார்கள்.

'ஒரு பெண் அவளின் கூந்தலைப் பிடித்து இழுத்துக் கட்டித் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டிருக்கிறாள். கீழே எரிந்து கொண்டிருக்கும் நெருப்பின் சூட்டால் அவளின் மூளை கொதித்து இளகி வடிந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பெண், அவளின் நாக்கை வெளியே இழுத்து அதனால் கட்டித் தொங்கவிடப்பட்டு, அவளின் இரு கைகளும் பின்புறமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அவளின் கொழுப்பு உருகி வாயின் வழியாக வடிந்து கொண்டிருக்கிறது. மற்றொரு பெண் அவளின் இரண்டு மார்புகளும், முதுகின் பக்கம் இழுக்கப்பட்டு அதனால் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கிறாள். திருகு கள்ளியின் சாறு அவளின் வாயின் வழியே ஊற்றப்படுகிறது. இன்னொரு பெண் அவளின் இரு கைகளும் கால்களும் முன் நெற்றி ரோமத்தால் கட்டப்பட்டுத் தொங்கவிடப் பட்டிருக்கிறாள். பெரும் பெரும் பாம்புகளும், தேள்களும், நட்டுவக்காலிகளும் அவளைப் பிடுங்கிக் கொண்டிருக்கின்றன.

இன்னொரு பெண், அவள் தன் சரீரத்தையே கடித்துத் தின்று கொண்டிருக்கிறாள். மற்றொரு பெண், அவளின் சரீரம் நெருப்புக் கத்தரியால் துண்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்னொருவன் முகம் கன்னங்கரேலென்று கறுத்திருக்கிறது. அவள் தன் குடலை

உருவித் தின்று கொண்டிருக்கிறாள். இன்னும் ஒரு பெண் செவிடாகவும், குருடாகவும், ஊமையாகவும் நெருப்புப் பெட்டியில் போட்டுப் பூட்டப்பட்டிருக்கிறாள், அவளின் மூளை உருகி மூக்கின் வழியாக வடிந்து கொண்டிருக்கிறது. அவளின் மேனியெல்லாம் கருங்குட்டம், வெண்குட்டத்தால் பொத்து வடிந்து, துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கிறது. இன்னொரு பெண் அவளின் தலை பன்றியின் தலைபோன்றும், உடல் கழுதையின் உடல் போன்றும் இருக்கின்றது. அவளின்மீது இலட்சோப லட்சம் வேதனைகள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பெண் நாயின் உருவத்தில் இருக்கிறாள். அவளின் வாயின் வழியாகவும், முன் துவாரத்தின் வழியாகவும், பாம்புகளும், தேள்களும் உள்ளே நுழைந்து பின் துவாரத்தின் வழியாக வெளியேறிக் கொண்டிருக்கின்றன. மலக்குகள் நெருப்புச் சம்மட்டியால் அவளின் தலைமீது அடித்துத் துன்புறுத்திக் ''கொண்டிருக்கிறார்கள்.'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி முடித்த மாத்திரத்திலே, பாத்திமா பதை பதைத்து, துடி துடித்து என் ''அருமைத் தந்தையே! என் இரு கண்களின் குளிர்ச்சியே! அந்தப் பெண்மணிகள் செய்த கொடிய குற்றங்கள்தான் என்ன? என்பதை இந்த அடியாளுக்கும் அறிவிப்பீர்களானால், அந்தக் குற்றங்களை விட்டும் நீங்கி இருக்க ஏதுவாகும். ஆகையால் அறிவிப்பீர்களாக'' என்று வேண்டினார்கள். அதன்படி பெருமானார் (ஸல்) அவர்கள் கீழ்க் கண்டவாறு விளக்கிக் கூறினார்கள்.

''என் அருமை மகளே! கூந்தலை இழுத்துத் தலைகீழாகக் கட்டி வேதனை செய்யப்படுகிறவள், தனது கூந்தலை அன்னிய ஆடவருக்கு முன் மறைக்காதவள், நாக்கை இழுத்துக்கட்டி வேதனை செய்யப்படு கிறவள், தன் கணவனை நாவால் திட்டித் துன்புறுத்தியவள்'' என்று கூறி இதற்கு விளக்கமாக, ''எவள் தன் கணவனை நாவால் துன்புறுத்து கிறாளோ, அவளின் நாக்கை மறுமையில் எழுபது முழ நீளம் வெளியே இழுத்து, அவளின் கழுத்திலே சுற்றிக்கட்டப்படும்'' எனக் கூறியபின்:

தனது இரு மார்புகளையும் முதுகின் பக்கம்கட்டித் தொங்கவிடப் பட்டிருப்பவள், தனது கணவனின் அனுமதி இல்லாமல் அன்னிய குழந்தைகளுக்குப் பால் கொடுத்தவள். தனது கைகளும் கால்களும் முன் நெற்றி ரோமத்தால் கட்டித் தொங்கவிடப்பட்டுப் பெரும் பெரும் பாம்புகளும், தேள்களும், நட்டுவக் காலிகளும் பிடுங்கப்பட்டுக்



கொண்டிருப்பவள், தொழுகவும் நோன்பு நோற்கவும், சக்தியும் வசதியும் இருந்துங்கூட அவைகளை நிறைவேற்றாதவள். மேலும் பெருந் தொடக்கை நீக்கக் குளிக்காமலிருந்தவள், கணவனின் உத்தரவின்றி வெளியில் சென்றவள், செவிடாகவும், குருடாகவும், ஊமையாகவும், இருப்பவள், விலக்கான விசயங்களைக் கேட்டும், அன்னிய ஆடவர்களைப் பார்த்தும், பொய் பேசிக் கொண்டு மிருந்தவள். பன்றியின் தலை போன்றும், கழுதையின் உடல் போன்றும் இருப்பவள், கோள் மூட்டுகிறவளாகவும், பொய் பேசுகிறவளாகவுமிருந்தவள். நெருப்புக் கத்தரியால் தன் சரீரம் துண்டிக்கப்பட்டுக் கொண்டிருப்பவள், தன் சரீரத்தைக் கடித்துத் தின்று கொண்டிருப்பவள், புறம் பேசித் திரிந்தவள். தன் முகம் கறுத்து, தன் குடலை உருவித்தின்பவள், பிற பெண்களின் குற்றங்குறைகளை அறிந்து, அவைகளை அம்பலப்படுத்தியவள். நாயின் உருவித் திலுள்ளவள், குழப்பக்காரியாகவும், கணவனிடம் கோபமாகப் பேசுகிறவளாகவும் இருந்தவள். மேலும் வேசியாகவும் இருந்தவள்,'' என்று கூறியபின், ''எவள் தனது கணவனைப் பார்த்து நான் உன்னிடம் ஒரு நலவையும் கண்டதில்லை எனக் கூறுகிறாளோ, அவள் இரவெல்லாம் நின்று வணங்கினாலும், பகல் எல்லாம் நோன்பு நோற்றாலும், அவளது எழுபது வருடத்திய அமல்களையெல்லாம் இறைவன் அழித்து விடுவான். எவள் தனது கணவனை நாவால் துன்பமடையச் செய்கிறாளோ, அவளை அல்லாஹ்வும் அவனது அமரர்களும் சபிக்கிறார்கள்'' என்று கூறினார்கள். (துர்ரதுல் வாயிளீன்)

இந்தக் குறுகிய உலகில், பீவி பாத்திமா (ரலி) அவர்கள் மீதும், அவர்கள் சந்ததிகள் மீதும், பிரியம் வைத்து அவர்களின் காவல்பாட்டினைப் பெறவும், மரணத்திற்குப்பின் நீண்டகால வாழ்வையுடைய மறு உலகில் அவர்களின் ஷபா அத்துடன், சுவர்க்கம் பெறவும் ஆதரவு வைக்கும் சோதரசோதரிகள், நரக வேதனைகளைச் சற்று நிதானத்தோடு படித்துத் தம்மால் நிகழ்ந்த குற்றத்திற்குப் பரிகாரம் தேடிய பின்னர், நற்செய்கைகளில் பழகி, எளிமை, பொறுமை, தாழ்வு, பணிவு, அடக்கம் முதலிய சற்குணங்களை மேற்கொள்ளல் வேண்டும். இல்லையேல் உங்களுடைய நடை (ஒழுக்கம்) உடை (உடுப்புகளின் நேர்மை) பாவனை (மனத்தூய்மை) இவைகளின் மாற்றத்தைக் கொண்டு, பாத்திமா நாயகி (ரலி) அவர்களையும், நபிகள் கோமான் (ஸல்) அவர்களையும் நீங்கள் வேதனை செய்து புண்படுத்திக் கொண்டிருக்கின்றீர்களேயன்றி வேறில்லை. அவ்வாறாயின் நீங்கள்

அவர்களின் ஷபாஅத்தையும், அல்லாஹ்வின் திருலிகாவையும் கிடைக்கப் பெறுவீர்களா? தீன்குலத்தோரே சிந்தித்துச் செயல் படுங்கள்.

## 2-வது ஹத்யா
## குறைந்த நித்திரை கொள்ளுதல்

قُمِ الَّيْلَ اِلَّا قَلِيْلًا ۝ نِّصْفَهٗۤ اَوِ انْقُصْ مِنْهُ قَلِيْلًا ۝

**"(நபியே!) இரவில் நீர் (தொழுகைக்காக எழுந்து) நில்லும் (கொஞ்சமல்ல) அதில் பாதி (நேரம்) நீர் சிறிது குறைத்தும் கூட்டியும் கொள்ளலாம்."** ***(73-2: 3)***

**"நிச்சயமாக இரவில் (தூக்கத்திலிருந்து) எழுந்திருப்பதைக் கைக் கொள்வது ஆன்மாவைப் பழக்கி (அடக்கி வைப்பதுடன்) எதனையும் மனம் வாக்கு ஒத்து உழைக்கும்படியும் செய்கிறது."** ***(73-6)***

பசித்திருப்பதில் நித்திரை குறையும். எல்லா முனாஜாத்து களுக்கும் திக்ரு, பிக்று போன்ற வணக்கங்களே மூலகாரண மாயிக்கின்றன, அதினினும் முக்கியமாக இரவு காலத்தில் அந்த வணக்கங்களைச் செய்வதும், ஸுப்ஹுத் தொழுகைக்குக் கொஞ்ச முன்னர் விழித்துக் கொள்வதும் சிறந்ததாகும்.

ஒருவன் அதிகமாக உணவை அருந்துவானாகில் அவனை நித்திரை தன் வசமாக்கும். அதன் காரணமாக அவனுடைய வாழ்க்கை பயனற்றுப் போய்விடும்.

"ஓ ஜனங்களே! உணவை மிகுதமாக அருந்தாதீர். அப்படி அருந்துவீர்களாயின், தண்ணீர் அதிகம் குடிக்க நேரிடும். அவ்விதம் குடிப்பதாலேயே நித்திரை அதிகரிக்கிறது." என்றிவ்வாறு அனுபவம் வாய்ந்த பல 'ஸித்தீகீன்'கள் ஒரே முகமாக கூறியுள்ளார்கள்.

ஆயுள் என்பது மனிதனுக்குப் பெரும் பாக்கியமாக இருக்கிறது; அதிலும் அவனது ஒவ்வொரு மூச்சும் இறுதி நாளுக்குரிய பதவியை அடையத்தக்க ஓர் இரத்தினமாயிருப்பதால், நித்திரை அந்த மூச்சுக்கு



விரோதியாக நட்டத்தை உண்டாக்கிச் சேதப்படுத்துகின்றது. அதனால் நித்திரையை கூடியமட்டும் குறைப்பதே சிறந்த வழி. வயிறு நிறைந்திருக்கும்போது ஒருவன் 'தஹஜ்ஜத்து'த் தொழுவானாயின் முனாஜாத்துடைய இன்பத்தைப் பெறமாட்டான். நித்திரை மேலிடும்; சில சமயம் 'இஹ்திலாம்' (சொப்பன ஸ்கலிதம்) ஏற்பட்டு இரவில் குளிக்கக் கூடாமல் ஜுனுபாளியாகி, அதனால் வணக்கத்தை விட்டு விடவும் ஏதுவாகிறது. நேரம் தாமதித்துக் குளிப்பதினால் குற்றவாளி யுமாகி விடுகிறான். இவ்வாறான உறக்கம் பிடித்த உணவாளிக்குப் பெண்கள்மீது கெடுதலான பார்வை விழும். இதனால் பல இன்னல் களும் உண்டாகின்றன.

அபூ சுலைமான் தரானிய்யி (ரஹ்) அவர்கள்:- "இஹ்திலாம் பெரிய இம்சையாக இருக்கிறது. அன்றியும் வயிறு நிறைந்து உறக்கம் பிடித்தும் இருப்பதே இந்த இம்சைக்குக் காரணம்." எனக் கூறியுள்ளார்கள். இதனாலேதான் வணக்கக்காரர்களான அறிவாளிகள் இரவில் இலகுவான ஆகாரங்களை மிகக் குறைவாகவே அருந்துகிறார்கள்.

லுக்மானுல் ஹகீம் (அலை) அவர்கள் தம் மகனுக்குச் செய்த உபதேசமாவது:-

"அருமை மகனே! நித்திரையைக் குறைத்துக்கொள்; நித்திரை ஒரு சிறிய மௌத்தாகும். அதிக நித்திரை மனிதனது புத்தியைப் போக்கி, ஆண்டவனை மறக்கச் செய்யும்; மேலும் இரவில் மிகுதி நேரம் விழித்திருப்பது ஒரு வணக்கமாகும். அந்த நேரத்தின் வணக்கம், இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது. அதன் பிரதிபலன் இவ்வளவென்று மதிப்பிடற்கரியது."

நபி சுலைமான் (அலை) அவர்களின் தாயார் தமது மகனைப் பார்த்து, "இறைவனின் தூதரே! இரவில் நித்திரையை அதிகப் படுத்த வேண்டாம். ஏனெனில் நித்திரையானது இறுதிநாளில் மனிதனை ஏழையாக்கி விடுகின்றது" என்று கூறியதாக அறிவிக்கப்பட்டி ருக்கிறது.

நபி பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒரு தோழர் வந்து "எனக்கு நித்திரை அதிகமாக வருகிறது. அதைக் குறைப்பதற்கு என்ன வழி?" என்று கேட்டார். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள்:-

“உமது ஆயுளின் பேரில் அல்லா(ஹ்)வைப் பயந்து கொள்ளும்” என்று விடையிறுத்தார்கள்.

ஆயிஷா சித்தீகா (ரலி) அவர்கள் “எவனொருவனை, அசறுக்குப் பிறகு நித்திரை புரிவதன் மூலம் பைத்தியம் பிடித்துக் கொண்டதோ? அவன் தன் மனத்தையே நொந்துகொள்ள வேண்டிய தன்றி வேறு யாரையும் நோகவேண்டியதில்லை” என்று கூறியுள்ளார்கள்.

மிதமிஞ்சிய “நித்திரையானது உயிரை உடலில் மிக ஆழமாகச் செலுத்தி உடலுக்குக் குளிரைக் கொடுக்கும். நித்திரை செய்யும்போது சில சமயங்களில் நாம் குளிரால் விறைத்துப் போர்வை கொண்டு மூடிக்கொள்வதும் இதனாலேதான்; மேலும் பகல் தூக்கம் உடலுக்குக் கேடு; அது உடலின் நிறத்தைக் கெடுத்துச் சோம்பலை வளர்க்கும். நடுப்பகலில் அவன் குறைந்த நித்திரையுடையவனாக இருத்தல் வேண்டும்.” என ஆரிபீன் (ஞானவான்)கள் கூறியுள்ளார்கள்.

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் இரவில் துயில் கொள்ளப் போகும்போது நித்திரையில் கெடுதி நேராதபடி, இறைவனிடம் பாதுகாப்புத் தேடிப் பின்னர் ‘குல்ஹுவல்லாஹு அஹத்’ ‘குல் அஊது பிறப்பில் பலக்’, ‘குல அஊது பிறப் பின்னாஸ்.’ இந்த மூன்று சூறாக்களையும் முடிவுவரை ஓதி, தங்கள் இரு கரங்களிலும் ஊதி சிரசிலிருந்து இரு கைகளுக்கும் எட்டியவரை சரீர முழுவதும் தடவிக் கொண்டு, நித்திரை செய்வார்கள். தங்கள் தோழர்களுக்கும் இவ்வாறு கற்பித்தார்கள். மேலும் ‘இந்தப் படி வழக்கமாக ஓதி நித்திரை செய்பவன், இரவில் இறந்து விட்டால் அவன் சன்மார்க்கத்தின் விசுவாசியாகிவிட்டான்” எனக் கூறியுள்ளார்கள்.

## 3-வது ஹத்யா

### குர்ஆன் ஷரீபைப் பேணுதலாக ஓதுதல்

وَرَتِّلِ الْقُرْاٰنَ تَرْتِيْلًا ○

**“இந்தக் குர்ஆனை நன்கு திருத்தமாக ஓதும்.”** *(7-34)*



**“மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து நிச்சயமாக ஓர் நல்லுபதேசம் வந்திருக்கிறது; அது (குர்ஆனாகும்) உங்கள் இருதயங்களிலுள்ள நோய்களுக்கு அது ஒரு சஞ்சீவியாகவும், விசுவாசம் கொண்டவர்களுக்கு நேர்வழி காட்டியாகவும், ஒரு அருளாகவும் இருக்கிறது.”** *(10-57)*

நாயகம் (ஸல்) அவர்கள்:- “இரும்பில் துருப் பிடிப்பது போன்று இருதயத்திலும் துருப்பிடிக்கும்” எனக் கூறியபோது, அண்மையி லிருந்த ஸஹாபாக்கள் “யாரசூலல்லாஹ்! அந்தத் துரு எதனால் நீங்கும்” என வினவ, ‘திருக்குர்ஆன் ஓதுவதினாலும், சதா மரணத்தை நினைப்பதி னாலுமே நீங்கிவிடுகிறது” எனப் பகர்ந்தார்கள்.

“நான் உலகத்தை விட்டுப் போகிறேன்; சாதாரணமாக உங்களுக்கு உபதேசம் செய்துகொண்டிருக்கும் இரண்டு பிரசங்கி களைத் தந்துள்ளேன். அதில் ஒருவர் பேச்சாளர், மற்றவர் மௌனி, பேச்சுடைய பிரசங்கி திருகுர்ஆனாகும். மௌனப் பிரசங்கி மரணமாகும்.”

“நீங்கள் குர்ஆன் ஷரீபை பயபக்தியுடன் ஓதுங்கள். ஒவ்வொரு ஹர்புக்கும் தனித்தனி பத்து நன்மைகளுண்டு” என்று இப்னு மஸ்ஊது (ரலி) கூறியுள்ளார்கள்.

அஹ்மது பின் ஹன்பல் (ரலி) அவர்களின் மொழியாவது:-

நான் அல்லாஹுவை கனவில் கண்டு, ‘என்னுடைய ரப்பே! உனது சமூகத்தில் எதன் மூலம் நெருங்குவது நலம்” எனக் கேட்டபோது, இறைவன், “என் கலாமாகிய குர்ஆன் ஷரீபை மிகுதமாக ஓதுவதால் முடியலாம்.” என்று திருவுளமானான். அதற்கு நான், “ஆண்டவனே பொருள் தெரிந்தும் தெரியாமலும் ஓதினாலுமா?” என்று வினவியபோது “பொருள் அறிந்தாலும் சரியே, அறியாவிட்டாலும் சரியே” எனப் பதில் கிடைத்தது.

எவன் குர்ஆனைப் படித்துக் கொண்டானோ? அவனது மேம்பாடு பெரிதாக இருக்கிறது; ஆகவே, அவன் குர்ஆனுடைய மேன்மையை கவனித்தல் வேண்டும். அனாச்சாரமான செயல்களை விட்டுத் தன்னைக் காக்கவேண்டும். எல்லா நேரங்களிலும் ஒழுக்கத் துடன் இருத்தல் வேண்டும். இந்த முறைகளைக் கையாளாவிட்டால், குர்ஆன் அவனுக்கு எதிரியாகிவிடும் எனக் கூறப்படுகிறது.

*''நிச்சயமாக இந்தக் குர்ஆன் (மனிதர்களுக்கு) நேரான வழியை அறிவிக்கின்றது; அன்றி விசுவாசம் கொண்டு நற்கருமங்களைச் செய்வோர்களுக்கு மிகப் பெரிய கூலியுண்டு என்றும் நன்மாராயம் கூறுகிறது.''*

*'மனிதர்கள் நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு இந்தக் குர்ஆனில் சகல உதாரணங்களையும் நாம் கூறியிருக்கிறோம்; அன்றி (அல்லாஹ்வுக்கு) பயந்துகொள்ளும் பொருட்டு, களங்கமற்ற இந்தத் திருமறையை (தெளிவான) அரபி மொழியில் வெளியாக்கினோம்.''*

*(39-27: 28)*

''ஆண்டவனுடைய மற்றையத் தூதர்கள் யாவரும், தங்கள் தங்களுக்குரிய சில அற்புதங்களைப் பெற்றிருந்தார்கள்; ஆனால் என்னுடைய அற்புதமோ குர்ஆனாயிருக்கிறது; மேலும் இந்த அற்புதம் என்றென்றும் நிலைத்திருக்கும்.''

(நா-வா)

## திரு குர்ஆனின் ஆகர்ஷண சக்தி

**(நபியே!) நீர் இதற்கு முன்னர் யாதொரு வேதத்தை ஓதி அறிந்தவருமல்ல; உம்முடைய கையால் நீர் அதனை எழுதி (ப் பழகி) யவருமல்ல. அவ்வாறு இருந்திருக்குமாயின், நிராகரிப்போர் (இதனை நீர் தாமாகவே கற்பனை செய்து கொண்டீரேயன்றி இறைவனால் அருளப் பெற்றதல்ல என்று) சந்தேகம் கொள்ளலாம்.**

**அவ்வாறன்று இது (இறைவனால்தான் அருளப் பெற்ற) தெளிவான வசனங்களாக இருக்கின்றன. ஞானம் கொடுக்கப் பட்டோரின் இருதயங்களில் இது பதிந்துவிடும். ஆகவே அக்கிரமக் காரர்களைத் தவிர (மற்றெவரும்) நம்முடைய இந்த வசனங்களை நிராகரிக்கமாட்டார்கள்.**

***(29-48:49)***

திருக்குர்ஆனின் சொன்னயமும், பொருட் செறிவும், நடையழகும், இலக்கண இலக்கியச் சிறப்பும் பிரசித்தி பெற்று விளங்குவது உலகமறிந்த விசயமாகும். அரபி தேசத்தில் மாபெரும் கல்விமான்களுக்கும், விசேச கவிவாணர்களுக்கும், புலவர்களுக்கும், பாவலர்களுக்கும், பேச்சாளர்களுக்கும் குறைவில்லை. அதிலும் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்தில், இத்தகைய பிரசித்தி பெற்ற வித்வான்கள் ஏராளமாக இருந்தனர். அவர்கள் திருக் குர்ஆன் வாக்கிய அமைப்பையும், பொருட் பொலிவையும் கண்டு பிரமித்துப்



போனார்கள். திருக் குர்ஆனுக்குப் போட்டியாக ஒரு வசனத்தை யேனும் அமைக்க வேண்டும் என்ற முயற்சியில் இஸ்லாத்தின் விரோதிகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் சிரமமெடுத்தார்கள்.

ஒருவருக்கொருவர் போட்டி போட்டு முயன்றும்கூட அதனைப் போன்று ஒரு வசனத்தையேனும் அமைக்க முடியவில்லை. பின்னர் திருக் குர்ஆன் முற்காலத்தவர்களின் கட்டுக் கதைகளைக் கொண்டது என்றும், சூனிய சக்தியுள்ள மந்திரம் என்றும் இயம்பிப் பொது மக்களிடம் பிரச்சாரம் செய்து திருக் குர்ஆனுக்குச் செவிசாய்க்காமலும், கீழ்ப்படியாமலும் இருக்கும்படிச் செய்ய பிரயாசைப்பட்டனர். அதிலும் அவர்களின் முயற்சி பயனளிக்காமல் போகவே, பல சூனியக்காரர்களை நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுப்பி, மந்திர சூனிய சக்தியால் நாயகத்தின் மனத்தை மாற்றத் தூண்டினர். அவர்களெல்லோரும் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து திருக் குர்ஆன் வசனங்களைக் கேட்ட மாத்திரத்தில், தங்களுடைய மாந்திரீகத் தொழில்களையெல்லாம் விட்டுவிட்டு இஸ்லாத்திற்கு அடி பணிந்தனர். இது விசயமாக நிகழ்ந்த சம்பவமொன்றை இங்கு குறிப்பிடுவோம்.

இஸ்லாம் மதம் நாளுக்குநாள் வளர்ந்தோங்கி வருவதைக் கண்ட குரைஷிக் காபிர்கள், கவிவாணராகவும், குறி சொல்பவராகவும், மந்திரவாதியாகவுமிருந்த 'அத்பா இப்னு ரபிஆ' என்பவரை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுப்பி, அவர்கள் கூறும் திருக் குர்ஆன் வசனம் செய்யுளா? அல்லது சூனிய மந்திரமா? அல்லது குறி சொல்வோர்களது வாக்கியமா? என்பதைத் தெரிந்து அறிவிப்பதற் காகவும், நாயகம் (ஸல்) அவர்களது சத்தியப் பிரச்சாரத்தைச் சமாதான முறையில் பேசி நிறுத்தி விடுவதற்காகவும் தேர்ந்தெடுத்தார்கள்.

இவர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தர்பாரில் வந்து, குரைஷியருக்கும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் சமாதான மேற்படுவதற்கான நிபந்தனைகளைப்பற்றி பிரத்தா'பித்தபோது, நாயகம் (ஸல்) அவர்கள் அத்பா இப்னு ரபிஆவின் வேண்டு கோளுக்குப் பதிலாக, திருக் குர்ஆனிலுள்ள ''ஸூரத்து புஸ்ஸிலத்'' என்ற அத்தியாயத்திலிருந்து சில வசனங்களை ஓதிக் காட்டினார்கள். சில வசனங்கள் ஓதியவுடன் நாயகம் (ஸல்) அவர்களின் வாயில் தமது கையை வைத்து, ''நீங்கள் உலகில் பெரிய மாறுதலைச் செய்து விடுவீர்கள்! என்று, கஃபாவின் நாயன்மீது நான் பிரமாணம் செய்து

கூறுகிறேன்; தயவு செய்து ஓதுவதை நிறுத்திவிடும்படி குரைஷியருக்குள்ள பந்தத்துவத்தை வஸீலாவாக வைத்துத் தங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்'' என்று கூறித் தமது இல்லத்துக்குத் திரும்பிவிட்டார்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரம விரோதியும் குரைஷியர்களின் தலைவனுமான அபூஜஹ்லுக்கு இந்த விபரம் தெரிந்தவுடன், உத்பாவின் வீட்டிற்குச் சென்று ''முஹம்மது கொடுத்த விருந்தைச் சாப்பிட்டு அவருடைய மனிதராகி விட்டீரோ?'' என்று வினவினன். அதற்கு 'உத்பா இப்னு ரபீஆ' என்பார், ''வீணாக உளராதீர்; என்னுடைய செல்வ நிலைமையைக் குறித்துக் குறைவாகப் பேசக் கூடியவர் யாரேனுமுண்டோ? என்னைப் பேராசையுள்ளவனென்று நிரூபிக்கக் செய்யக்கூடியவர் யார்? நான் எப்படிப்பட்ட செல்வந்தனென்பது உமக்குத் தெரியாதா? பிறர் பொருளின் ஆசை என்னைக் கவர்ந்துகொள்ள முடியுமா? ஆனால், முஹம்மதுவானவர் (ஸல்) என்னுடைய கேள்விக்குப் பதிலாக, என்னிடம் ஓதிக் காண்பித்த வாக்கியம் செய்யுளுமல்ல, குறிசொல்பவர்களின் வாக்கியமுமல்ல, கோடாங்கியுமல்ல; அது, சொல் நயமும் இலக்கண இலக்கியச் சிறப்புகளும் செறிந்த வாக்கியமாகும்; நான் இதுவரை இந்த மாதிரியான சிறந்த நடையழகு பொருந்திய வாக்கியத்தைக் கேட்டதே இல்லை; அவர் கூறிய வாக்கியத்தில் தெய்வ வேதனையைப்பற்றிய எச்சரிக்கை இருந்தது; ஆகவே, உங்கள்மீது எங்கு தெய்வ வேதனை இறங்கிவிடுமோ! என்று நான் அஞ்சுகிறே''னென்று கூறினார். இதைக் கேட்டவுடன் அபூஜஹ்லும் அவனுடன் வந்த மற்றவர்களும், முஹம்மது (ஸல்) தம்முடைய நாவன்மையால் உத்பாவை வசியம் செய்துவிட்டாரென்று கூறினார்கள்.

கஅபுப்னு மாலிக், ஹஸ்ஸானுப்னுதாபித், அப்துல்லா ஹிப்னு கைஸ், கஅபுப்னுஜுபைர், ஆமிருப்னு அக்வஉ, துபைலுப்னுஅம்ர், அப்துல்லா ஹிப்னுரவாஹா முதலிய பலர் அரபு தேசத்தில் முதல் தரமான வித்வான்கள் என்று கீர்த்தி வாய்ந்தவர்கள். இவர்கள் யாவரும் இந்தத்திரு குர்ஆனின் சொல் நயத்தையும் நடையழகையும் கண்டு, திருக்குர்ஆனுக்குத் தலை சாய்த்து இஸ்லாம் மதத்தைத் தழுவினர். இவை அந்தக் காலத்திலுள்ளவர்களின் விருத்தாந்தமாகும். இந்தக் காலத்திலும் கூட இந்தத் திருமறை தன்னுடைய தெய்வீக சக்தியால் மக்களின் மனத்தைக் கவர்ந்து, தனக்குக் கீழ்ப்படியச் செய்வதை, நாம் யாவரும் . பல இடங்களிலும் பார்த்திருக்கிறோம்.



செய்யிதுனா உமருப்னுல் கத்தாப் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவுவதற்குமுன், தமது சகோதரியிடம் குர்ஆன் ஷரீபு இருப்பது கண்டு, அதனைக் கொடுக்குமாறு கோபத்தோடு கேட்டபோது அவரின் தங்கை.

**''நிச்சயமாக இது மிக்க கண்ணியமுள்ள குர்ஆனாகும். (இது) லவ்ஹுல் மஹ்பூளில் எழுதப்பட்டுள்ளது. பரிசுத்தவான்களைத் தவிர (மற்றெவரும்) இதனைத் தொடமாட்டார்கள்''. (56-77: 79)**

என்ற வசனத்தை ஓதி ''நீங்கள் பரிசுத்தவானாக இல்லை'' என்று கடிந்து சொல்லி, அதனைக் கொடுக்க மறுத்துவிட்டார். இதைச் செவியேற்ற உமர் (ரலி) அவர்களுக்குச் சகோதரியின் சொல்லில் ஒரு திகில் ஏற்பட்டதால், திடுக்கமுற்று ஒருவாறு கோபம் தணிந்தவராக திரிகரண சுத்தம் செய்துகொண்டு குர்ஆனை வாங்கி **'பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்'** என்ற திரு வாக்கியத்தையும்; **'தாஹா மாஅன்ஸல்னா'** என்ற சூரத்தையும் ஓதவே ''இவை மிக மேலான நறுமண மிக்க திருநாமங்களாயிருக்கின்றனவே!'' என்று வியந்து கொண்டே விரைந்து சென்று திரு நபியவர்களைத் தரிசித்து சத்திய சன்மார்க்க (இஸ்லா)த்தைத் தழுவினர். இதற்குப்பின்:-

''ஹலரத் உமர் (ரலி) அவர்கள் குர்ஆன் ஷரீபை எடுத்துத் திறந்தவுடன் **(ஹாதா கலாமு ரப்பீ)** 'இது என் ரப்பின் வசனமாகும்', என்று கூறி முத்தமிட்டுக் கொள்வார்கள்,'' என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குர்ஆன் ஷரீபின் சிறப்புகளைச் சிலாகித்துக் கூறுதல் வழக்கம். ஒரு சமயம் குர்ஆன் ஷரீபிலுள்ள சூராக்களின் மேம்பாடுகளைப் பற்றிப் பின்வருமாறு எடுத்தருளினார்கள்:-

''பாவா ஆதம் (அலை) அவர்களைப் படைப்பதற்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் இறைவன் 'தாஹா', 'யாஸீன்' என்ற இந்த இரு சூராக்களையும் ஓதினான். அமரர்கள் அதைக் கேட்டு மிக மகிழ்ச்சியடைந்தவர்களாக ''இந்த சூராக்கள் எந்த உம்மத்துக்கு வேண்டி வெளியாக்கப்படுமோ? அந்த உம்மத்துக்கும், எந்த இருதயங்கள் இவற்றை ஏற்று ஓதுமோ? அந்த இருதயங்களுக்கும், எந்த நெஞ்சுகள் இவற்றைச் சுமக்குமோ? அந்த நெஞ்சுகளுக்கும் சோபனம் கூறுகின்றோம்.'' என்று தங்கள் மகிழ்ச்சியை வெளி

யிட்டனர். மேலும் மரணித்தவர்கள்மீது சூரத் 'யாஸீன்' ஓதுங்கள். அல்லாஹு<sup>~</sup>வின் கிருபையை நாடி, எவன் இந்த சூராவை ஓதுகின்றானோ? அவனது பிழைகள் யாவும் பொறுக்கப்படும்'' என்பதாம்.

**நுட்பம்:-** ஒரு மையித்தைக் கப்ரில் அடக்கம் செய்து விட்டு, மக்கள் பிரியும்போது, கப்ருக்குள் அடியும், மிதியும் கேட்டன. மக்கள் கப்ரின் அருகில் சென்று பார்க்குங்கால், உள்ளேயிருந்து ஒரு கறுத்த நாய் வெளியே வந்தது. ஒரு பெரியார், அந்த நாயைப் பார்த்து, 'நீ யார்? நீ எங்கிருந்து வந்தாய்?' என்று வினவ, அதற்கு அந்தநாய் 'நான் இந்த மையித்தினுடைய செயல்களின் உருவம், இந்தக் கப்ரில் நின்றும் வெளிப்படுத்தப்பட்டேன்'', என்று கூறியது. அந்தப்பெரியார் மீண்டும் இப்போது இந்தக்கப்ரினுள் உண்டான அடியும் மிதியும் யாருக்கு?'' என வினவ, அது ''அவை எனக்குத்தான், அந்த மையித்துக் கன்று; நான் இதனிடம் வந்தபோது, அதனிடமுண்டாயிருந்த சூரத் யாஸீனும், அதன் மற்ற சகல சூராக்களும் என்னோடெதிர்த்து சண்டையிட்டு, என்னை அடித்துத் துரத்திவிட்டன'' என்று கூறிக் கொண்டே மறைந்தது. என்னே! திருமறையின் மகத்துவ மிக்க தத்துவம்.

''முஸ்ஹபை (குர்ஆன்) ஓதுங்கள், இஃதா இருக்கும் முஸ்ஹபைக் கண்டு மருளாதீர்கள். ஏனெனில், குர்ஆன் என்ற பொக்கிஷத்தின் இருப்பிடமாகிய இருதயத்தை, இறைவன் ஒரு பொழுதும் நோவினை செய்யமாட்டான்''. (அபூஉமாமா (றலி)

***''நபியே! நீங்கள் கொணர்ந்த குர்ஆனானது எவர்களுக்கு அறிவைக் கொடுக்கப்பட்டதோ அவர்களின் இருதயங்களில் உறைந்த வெளிச்சமான ஆயத்துகளாக இருக்கிறது.''***

நண்பர்களே! குர்ஆன் ஷரீபை விரைவாக ஓதாமல் நிறுத்தி இனிமையாக ஓதுதல் வேண்டும். ஓதக் கற்றுக் கொள்ளும் பாக்கிய மிழந்தவர்கள், அஃது ஓதப்படுமிடங்களிலாவது தூய்மையோடு அமர்ந்து, செவி சாய்த்துக் கேட்பது நலவாக இருக்கும்.

***''(மனிதர்களே!) திருக்குர்ஆன் ஓதப் பெற்றால் வாய் மூடி செவி தாழ்த்தி அதனைக் கேளுங்கள். (அதனால்) நீங்கள் (இறைவனின்) அருளை அடைவீர்கள்.''***

***(7-204)***



திருக்குர்ஆன் ஒன்றைத் தவிர வேறு எந்த மதக் கிரந்தத்தையும் மனப்பாடம் செய்ததாக ஒருவரையும் காணப்படவில்லை. முந்திய வேதங்களை எவ்வளவு காலம் ஓதினாலும், மனனமாவதில்லை; அவற்றை ஓதி மூடியபின், எல்லாம் மறதியின் வசமாகின்றன; ஆனால் திருக் குர்ஆன் ஒன்றே ஓத ஓதப்பாராமல் மனப்பாடம் ஆகின்றது. இது குர்ஆனின் ஓர் ஒப்பற்ற அற்புதமாகும்.

*''எனக்கு மிஃராஜ் (விண்ணேற்றம்) நிகழ்ந்தபோது, எனது உம்மத்துகளின் பாவங்கள் அனைத்தும் காட்டப்பட்டன. அவற்றில் திருக் குர்ஆனிலுள்ள ஒரு ஆயத்தை மனனம் செய்த பின் அதனை மறந்த பாவத்தைக் காணக் கொடிய பாவமொன்றை நான் காணவில்லை.''*

*''குர்ஆனை ஓதி மறந்தவனையும், ஓதக் கற்காதவனையும், இறுதி நாளில் குருடர்களாக எழுப்பப்படும்''.* *(நா-வா)*

இதனால், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு திருக் குர்ஆனைக் கற்பிக்கக் கடமைப்பட்டிருப்பதால், இந்த விஷயத்தில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இதனால், குழந்தைகளுக்குப் பிரயோசனமும், பெற்றோர்க்கு நன்மையும் உண்டாகின்றன.

*''உங்கள் குழந்தைகளுக்குக் குர்ஆன் கற்பிக்க வேண்டியதைக் கட்டாயக் கல்வியாக ஆக்கிக்கொள்ளுங்கள். குழந்தைகள் முதலாவதாகக் குர்ஆன் கற்கத் தொடங்கும்போது, அவர்களின் பெற்றோர்களது பாவங்கள் உடனே மன்னிக்கப்படும்; தீங்குகள் அகலும்.''* *(நா-வா)*

குர்ஆன் ஷரீபின் மகத்துவத்தை அறியாத சிலர் தங்களைத் தாங்களே கெடுத்துக் கொள்வதுமல்லாமல், வருங்காலச் செல்வங் களான தங்கள் பிள்ளைகளின் மார்க்க அறிவையும், ஒழுக்கத்தையும் கெடுத்து விடுகின்றனர்; இதனால் உலக வாழ்க்கையில் பல சிக்கல்கள் நேரிடுவதுமல்லாமல், இறுதி நாளில் கடின தண்டனைக்கும் ஆளாக வேண்டியது நேரிடும்.

ஒரு மனிதனுக்குக் கிடைக்கும் கல்வியை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். (1) தனது இருபது வயது முதல் அறுபது வயது வரையுள்ள பிழைப்பிற்கு உபயோகப்படும் உலக சம்பந்தப்பட்ட கல்வி. (2) இறந்த பின்னுள்ள பன்னூறாயிரம் கோடி ஆண்டுகளுக்கு உபயோகப்படும் மார்க்கக் கல்வி.

முந்திய கல்வியை மாத்திரம் தமது பிள்ளைகள் படிப்பது கொண்டு திருப்தியடையும் பெற்றோர்கள், அந்தக்குழந்தைக்கு பெரும் அநீதியிழைப்பதுடனே தமக்கும் சொல்ல முடியாத நட்டத்தை உண்டாக்கிக் கொள்கின்றனர். காரணம்: அந்தக்குழந்தை அல்லா ஹ்வையும் ரசூலையும் நன்குணர்ந்து நல்வழி நடக்கக் கூடியதாக இருந்தால், பெற்றோர்கள் கபுரில் தங்கியிருக்கும் காலத்தில் அந்தக் குழந்தை செலவழிக்கும் ஒவ்வொரு நிமிட வாழ்விற்கும் அவர்களுக்குப் பெரும் பாக்கியம் கிடைத்துக்கொண்டே இருக்கும். அதற்கு மாறாக அந்தக் குழந்தையை அவர்கள் ஒரு பெரிய சீமானாகவோ, லோகாதய வாதியாகவோ, ஒரு நாட்டின் ஜனாதிபதியாகவோ கூட ஆக்கிவிட்டு இறந்துபோனால், அந்தோ! அவர்களின் கபுருக்கு ஒருவித நன்மையும் வரப்போவதில்லை.

இரண்டு பிள்ளைகளுள்ள தந்தை ஒன்றை மார்க்க அறிஞனாக ஆக்கினால், அவருக்கு ஆகிரத்து வாழ்க்கையில் லாபம் ஏற்படு மல்லவா? பெற்றோர்கள் இதனை நன்கு உணர்ந்து நினைவில் கொண்டு தங்கள் பிள்ளைகளுக்கு இஸ்லாமிய ஞான போதனை யாகிய திருக் குர்ஆனைக் கட்டாயக் கல்வியாகக் கற்பித்தல் வேண்டும்.

**''விசுவாசங் கொண்டோருக்கு அருளாகவும், (நோய்களுக்கு) பரிகாரமாகவும் உள்ளவைகளையே இந்தத் திருக் குர்ஆனில் நாம் இறக்கி இருக்கிறோம். எனினும் அக்கிரமக்காரர்களுக்கோ (இது) நஷ்டத்தையேயன்றி அதிகரிப்பதில்லை. *(17-82)***

## மாமறைக்கு மரியாதை செய்தல்

குர்ஆன் ஷரீபை பருவமடைந்த ஆண் பெண்கள் ஒலுவில்லாமல் தொடுவது ஹராமாகும். குர்ஆனும், அதோடு கூடிய வியாக்கி யானங்களும் ஒன்றாகச் சேர்ந்திருந்து, வியாக்கியானத்தின் அளவு குர்ஆனின் அளவைவிடக் கொஞ்சமாவது கூடுதலாக இருக்கும் என்ற எண்ணம் இருந்தால், ஒலுவில்லாமல் தொடலாம். அதுபோலவே பிரயாணம் செய்பவர்கள் அல்லது வீட்டுத் தளவாடச் சாமான்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அகற்றுபவர்கள், அந்தச் சாமான்களில் குர்ஆன் ஷரீபையும், இதர சாமான்களைப் போன்று கருதி, அதை ஒலுவில்லாமல் தொடுவதும், சுமப்பதும், அதன்மீது வேறொரு பொருளை வைத்துக்கொண்டு செல்வதும் ஆகுமான தாகும். குர்ஆன் ஷரீபைத் தரையிலிட்டு காலுக்குச் சமமாக



வைத்துக்கொண்டு சில அரபு நாடுகளில் ஓதிக்கொண்டு இருக் கிறார்கள். இது அறியாமையின் காரணமாகச் செய்யப்படும் பெருந்தவறாகும். அதுபோலவே குர்ஆன் ஷரீபை ஓதிக் கொண்டு இருப்பவர்களுக்கு முன்புறம் உட்காராமல், பள்ளி வாசலில் முன் வரிசையில் அல்லது தமக்கு முன்னால் யாரும் உட்காராத வகையில் இருந்து ஓதுவதும், ஜும்ஆ அன்று மஸ்ஜிதில் ஒருவருக்குப்பின் ஒருவர் இருக்கும்போது குர்ஆன் ஓதுகிறவர்கள் இதனைக் கவனித்துச் செயல்பட வேண்டியது அவசியமாகும்.

இன்னும் ஒரு முக்கிய விசயமாவது:- நாம் எச்சிலை அருவருப்பாகக் காண்கிறோம். ஒரு மனிதனுடைய எச்சில் நம்மீது படுவதையோ அல்லது ஒருவர் எச்சிலை நம்மீது தடவுவதையோ நாம் அனுமதிப்பதில்லை. இவ்வாறிருக்க குர்ஆன் ஷரீபின் தாள்களைப் புரட்டும்போது நமது விரலை எச்சிலில் துவைத்து அதன்பின் பக்கங்களைப் புரட்டுகிறோம். இது குர்ஆனுக்குச் செய்யப்படும் அவமதிப்பாகும். அதுவும் அல்லாமல் அந்தப் பக்கங்களின் விளிம்பு சீக்கிரம் கெட்டுக் கிழிந்து போவதற்கும் ஏதுவாகும். பக்கங்களைப் புரட்டுவதில் சிரமமிருந்தால் அதற்குச் சரியான முறையாவது:- ஒவ்வொரு பக்கத்தின் மேல் புறத்தின் ஓரத்திலிருந்து விரலை வைத்துக் கீழ்புறம் ஓரம்வரை புரட்டினால் இலகுவாகப் புரட்ட முடியும். எச்சிலைத் தொட வேண்டிய அவசியமே இல்லை. எவ்வளவு மட்டமான காகிதமாக இருந்தாலும் காகிதங்கள் இலேசாகப் புரண்டுவிடும். இனிக் குர்ஆன் ஷரீபை முத்தமிடுவதையும் கண்ணில் ஒத்திக்கொள்வதையும் சில வஹ்ஹாபிகள் தடை செய்தாலும், அது சுன்னத் வல்ஜமா அத்தின்படி குர்ஆனை கௌரவிக்கும் அழகான செயல்களாகும்.

திருக் குர்ஆனுக்கு ஜில்து (பைண்டு) கட்டியிருந்தாலும், அதை ஒரு உறையில், அல்லது கவரில் வைத்திருந்தாலும் அன்றி ரைஹாலின் மேலிருந்தாலும் சரியே, ஷாபிஈ மத்ஹபின் படி ஒலுவில்லாமல் தொடுவது கூடாது.

ஒரு அத்தியாவசிய நிமித்தம் குர்ஆனைச் சுமப்பது அல்லது ஓரிடத்திலிருந்து மாற்றுவது ஏற்படுமாயின், ஹனபி மத்ஹபைத் தொடர்ந்து செய்வதாக நிய்யத்து வைத்துக் கொள்வது நல்லது. இதே போன்று பல வேலைகளில் சமய சந்தர்ப்பச் சூழ்நிலையை அனுசரித்து அது சமயம் மற்ற மத்ஹபுகளில் ஒன்றைப் பின்பற்றலாம்.

நோன்பை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு நாளும் இரவில் நோன்பு வைப்பதாக நிய்யத்துச் செய்து கொள்வது சுன்னத்து. மாலிக் மத்ஹபின்படி ரமலான் தலைநோன்பு இரவில் ஒரு முறை, இந்த மாதம் முழுவதும் பர்லான நோன்பை வைப்பேன் என்று நினைத்து நிய்யத்து வைத்துக்கொண்டால் போதுமென்றிருப்பதால், நாம் ஒவ்வொருவரும் அதுபோல மாலிக் இமாம் அவர்களின் சொல்லைப் பின்பற்றி, முதலிரவில் நிய்யத்து வைத்துக் கொள்வது நல்லது. இதனால் மாத நடுவில் ஏதாவதொரு இரவில் நிய்யத்து வைக்க விடுபட்டுவிட்டாலும்; நோன்பு நிறைவேறிவிடும். இதே போன்று மார்க்க விதி விலக்குகளில் நாம் நடந்துகொள்ளும் ஹுக்கும் (சட்டங்)களை விரிவான பிக்ஹு நூல்களில் காணலாம்.

## 4-வது ஹத்யா

### இரவில் இறைவனை உள்ளச்சத்துடன் வணங்குதல்

وَالَّذِيْنَ يَبِيْتُوْنَ لِرَبِّهِمْ سُجَّدًا وَّقِيَامًا ○

***"(ரஹ்மானுடைய நல்லடியார்) தங்கள் இறைவனை (உள்ளச்சமாக) நின்றவர்களாகவும், சிரம் பணிந்தவர்களாகவும், இரவெல்லாம் வணங்கிக் கொண்டிருப்பார்கள்."***

***"போர்வையால் போர்த்திக் கொண்டிருப்பவரே! இரவில் நின்று வணங்குவீராக".***
***(73: 1-2)***

ஜிப்ரீல் (அலை) அவர்கள் முதலாவதாக 'வஹி' கொண்டு வந்தபோது, நபிபெருமான் (ஸல்) அவர்களுக்குக் குளிர் காய்ச்சல் ஏற்பட்டது. எனவே "ஸம்மிலூனீ! ஸம்மிலூனீ!!" அதாவது எனக்குப் போர்வை போர்த்துங்கள்" என்று சொன்னார்கள். அதற்காகவே 'முஸம்மில்' (போர்வை போர்த்திக் கொண்டிருப்பவர்) என்று இறைவன் திரு நபியை அழைத்துக் கூறினான்; என்று கூறப்படுகிறது.

நபி தாவூது (அலை) அவர்களைத் தொட்டும் அறிவிக்கப் பட்டிருப்பது யாதெனில்: அவர்கள் ஆண்டவனை நோக்கி,



"யா அல்லாஹ்! நான் உன்னை வணங்குவதற்கு ஆசைப்படுகின்றேன். எந்த நேரம் மிக உசிதமானது என்பதைக் கூறுவாயாக" என்று வேண்டியபோது, "தாவூதே! நீர் இரவின் ஆரம்பத்திலும், கடைசியிலும், நிற்கவேண்டாம். ஆரம்பத்தில் நின்று வணங்குபவன் கடைசிவரை முடிக்கவில்லை; கடைசியில் நிற்பவன் ஆரம்பத்தில் நிற்கவில்லை. ஆதலின், நீர் என்னோடு தனித்தும், நானும் உம்மோடு தனித்துமாயிருக்க வேண்டுமாயின், இரவின் நடுவில் நின்று வணங்குவீராக; அன்றியும் உமது எண்ணங்களை எல்லாம் என்மீது சாட்டுவீராக;" என்று பதிலிறுத்தான் என்பதாக அறிவிக்கப்படுகிறது.

நபிகள் பெருமான் (ஸல்) அவர்கள் தங்களின் இரு பாதங்களும் வீங்கும்வரை இரவில் நின்று வணங்குவதைக் கண்ட ஸஹாபாக்கள் (ரலி) "அல்லாஹுவின் ரசூலே! தங்களின் சர்வ பாவங்களும் மன்னிக்கப்பட்டு விட்டனவே! ஏன் இவ்விதம் வணங்குவதில் சிரமம் எடுக்கின்றீர்கள்" என்று வினவிய போது, நாயகம் (ஸல்) அவர்கள் "நானும் எனது ரப்பை நிரம்பவும் நன்றி பாராட்டுகின்ற அடியானாக இருக்க வேண்டாமா?" என்று விடை கூறினார்கள்.

"நடு இரவில் நின்று இரண்டு ரக்அத் 'நப்லு' தொழுவதால், அது பாவங்கள் அனைத்துக்கும் பரிகாரமாகும். ஆதமின் மக்கள் நள்ளிரவில் நின்று தொழும் இரண்டு ரக்அத்து சுன்னத்துத் தொழுகையானது, அவர்களுக்கு இந்த உலகிலுள்ள நானாவிதச் செல்வங்களையும் விட, மிக மேலானதாக இருக்கும். எனது உம்மத்துக்குக் சிரமம் ஏற்படாதென்றிருந்தால் 'மிஸ்வாக்' (குச்சியால் பல்) விளக்குதல் செய்வதையும், நடு இரவில் இரண்டு ரக்அத் தொழுவதையும் கட்டாயமாக்கி இருப்பேன். நடுநிசி தொழுகையைப் பற்றிப்பிடியுங்கள்; அது இரண்டே ரக்அத்து ஆனாலுஞ்சரி, உங்களுக்கு மிகுந்த நன்மை கிடைப்பதற்கு வேண்டி கடைபிடித் தொழுகுங்கள்." (நா-வா)

## 3-வது தகுதியாளர் முன்கர் வ நகீர் (அலை)

### 11

நாவி லுண்மையும் நாவலரை
பத்னாம் கீபத்து உரையாதலும்
தாவிவிழும் ராஜன் சமுகத்திலே
சரியான பேச்சைப் பேசுதலும்

ஆவிவிடும் நாளெத்தும் வரையில்
ஆர்க்கும் தாழ்மையாய் நடப்பதுவும்
பாவியைக் கடிந்துறுக்கு மெங்கள்
பாத்திபர் முன்கர் நகீருக்கென்றார்.

**அரும்பதவுரை:-**

பத்னாம்- பெயரைக் கெடுத்தல். கீபத்து - புறம் பேசுதல். பாத்திபர் - தலைவர். முன்கர் வ நகிர் - கப்ரில் தோன்றும் இரு வானவர்கள்.

## முன்கர் வ நகீரின் விளக்கம்

''மனிதன் மரணித்து மண்ணறைக்குள் புகுந்தபின், முன்கர் வ நகிர் என்ற இரு வானவர்கள் பயங்கரத் தோற்றத்தோடு தோன்றி, ''உன்னைப் படைத்த 'ரப்பு' யார்? உனக்கு நேர்வழி காட்டவந்த 'நபி' யார்? உன் 'மார்க்கம்' யாது? நீ வணங்குதற்கு முன்நோக்கும் தலம் எது? நீ பின்பற்றி நடக்கும் வேதம் யாது? உன் சகோதரர்கள் யாவர்?'' என்ற இந்தக் கேள்விகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கேட்பார்கள். இந்தக் கேள்விகளுக்கு மரணித்த அவன், தான் வாழ்ந்த காலத்தில் இந்த உலகில் அல்லாஹு<sup></sup>வின் கட்டளைக்கிசைந்து, நபி முஹம்மது (ஸல்) அவர்களின் ஷரீ அத்தைத் தழுவி, 'இஸ்லாம்' என்னும் புனித மார்க்கத்தில் முஸ்லிமாக ஒழுகி, கஃபா என்ற கிப்லாவை முன்னோக்கித் தொழுகையைக் கடைபிடித்தவனாக, திருக் குர்ஆன் போதனைகளை ஏற்று, எல்லா முஸ்லிம்களையும் உடன் பிறந்த சகோதரர்களாகக் கொண்டு வாழ்வை நடத்தி வந்திருப்பானாயின், அவன் முன்புகூறிய வினாக்களுக்குச் சரியான பதில் கொடுத்தவனாக, சாந்தி அடைவான். இந்த முறைகளைக் கையாளாகாதவன் மறுமொழி கொடுக்கத் தெரியாது பரிதவிப்பான்.''

''முன்கர் வ நகிர் என்ற இரு விண்ணவரின் சப்தமானது, விசுவாசிகளுக்குக் கண்களில் சுர்மா இடுவது போலும், கப்ரின் நெருக்கமானது, தலை நோகுதென்று மகன் முறையிடும்போது, தாய் அவனது தலையை மிருதுவாய்த் தடவி விடுவதுபோலுமிருக்கும்.'' என்று ரசூல் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்துள்ளார்கள்.

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் செய்யிதுனா உமருல் பாரூக் (ரலி) அவர்களைப் பார்த்து:-



''உமரே! கப்ரின் இரு மலக்குகளும் தம்மின் கோரப் பற்களால் கப்ரைத் தோண்டிக்கொண்டு, கோடையிடிபோல் சப்தம் முழங்க, தலை முடிகளை விரித்தவராக, மின்னல் போன்று சுடர்விடும் கண்களோடு உம்மிடம் வந்தால் நீவிர் என்ன செய்வீர்?'' எனக் கேட்க, அதற்கு உமர் (ரலி) அவர்கள்:-

''எனக்கு இப்போது இருப்பது போன்ற சித்த சுவாதீனம் இருக்குமா?'' என்று வினவினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ''இருக்கத்தான் செய்யும்'' என்றார்கள். அப்படியாயின் முன்கர் வ நகிர் என்பேரில் சிறிது பிரியம் காட்டுவார்.'' என்று உமர் (ரலி) அவர்கள் பதில் கூறினார்கள். இதைக் கேட்டு நபி பெருமான் (ஸல்) அவர்கள். ''நீவிர் நற்பதவி பெற்றவர்'' என்று வாழ்த்தினார்கள்.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது யாது? அந்த இரு மலக்கு களுடைய தோற்றத்தின் இன்பமும், பயங்கரமும் துன்யாவில் அவரவர் செய்யும் செயல்களின், நன்மை தீமைகளைப் பொறுத் திருப்பதால், இறைவனது கட்டளைக்கிணங்க, இயன்றவரை நல் அமல்களைச் செய்து அந்த மலக்குகளுக்காக கீழ்க்கண்ட நன் கொடைகளைச் சேகரித்துக் கொள்ள வேண்டும் என்பதே.

## முன்கர் வ நகீருக்குரிய ஹத்யாக்கள் நான்கு

### *1-வது* ஹத்யா:- உண்மை பேசுதல்

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَكُونُوا مَعَ الصَّادِقِينَ ○

''விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து (சொல்லிலும், செயலிலும்) உண்மையாளர்களுடன் இருங்கள்'' *(9-119)*

''நெருப்பு விறகைத் தின்றுவிடுவதுபோல் பொய்யானது ஈமானைத் தின்று நாசப்படுத்திவிடுகிறது.'' (நா - வா)

நண்பர்களே! மேற்கண்ட நன்மொழிகளை, நன்கு கடைப்பிடித் தொழுகுவீர்களாக; இந்தக் காலத்தில் பொய் பேசும் வழக்கம் நம்மில் பெரும்பாலோரிடம் மலிந்து காணப்படுகிறது. சிலர் தம் காரிய